w 967

# ஸாக்ரடீஸ் சரித்திரம்.

இது,

மதனப்பள்ளிக் காலேஜ் ஆசிரியர்

**R. அரங்காசாரியர், எம். ஏ. எல். டி.**

இயற்றியது

வேலூர்

சுந்தர விநாயகர் அச்சுக்கூடம்

காபி ரைட் 1918 [விலை அணா—12

# முகவுரை.

உலகிலுள்ள ஜாதியார் பலர் உலகில் வழங்கும் பாஷைகளும் பல. ஒவ்வோர் காலத்தில் ஒவ்வொரு ஜாதியாரே ப்ரபலமடைந்து, தம்புகழைப் பரப்பி, பிறர்க்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றனர். அந்தஜாதியாருள்ளும் ஒருசிலரே குன்றின்மேலேற்றிய விளக்குப்போல, தம் அறிவை யாவர்க்கும் புலப்படுத்தி, தமது நாட்டில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி, புதியதோர் வழியில் மனிதரின் அறிவும் ஊக்கமும் செல்லும்படி செய்திருக்கின்றனர். இத்தகைய மேன்மக்கள் தாம் பிறந்த நாட்டிற்கும் தாம் பிறந்த ஜாதிக்குமே உரியவரெனக் கூறுவது தவறு. உலகத்தை அறிவூட்டி மேனிலைப்படுத்துவதற்காக அவ்வப்போது சிலபெரியோர்கள் அவதரிப்பதுண்டு. அவர்களது போதனைகளெல்லாம், முன்பு அவர் அவதரித்த நாட்டில் வேரூன்றி, பிறகு உலகமுழுவதும் பரவிவிடும். ஆதலின், மகான்களாகிய இன்னோர்க்கு, "யாதுமூரே, யாவருங் கேளிர்" அம்மகான்களும் யாவர்க்கும் எக்காலத்திற்கும் உரியவராவர்.

ஸாக்ரடீஸ் என்ற யவனத்தத்வஞானியாரும் இம்மகான்களது கூட்டத்தைச் சேர்ந்தவர்தாம். இவரது உத்தமகுணங்களும், அறிவாற்றலும், தேசாபிமானமும், உண்மையைப் பற்றும் எவரையும் உருக்கும். சத்யத்தை நிலைநிறுத்துவதிலும், மனிதரின் அஞ்ஞானத்தைப் போக்கி அவரிடம் உண்மையான ஞானம் பெருகும்படி செய்வதிலும் அவர் எடுத்துக்கொண்ட கஷ்டத்திற்கு அளவேயில்லை. தமது விரோதிகளால் அவர் பட்ட பாடுகளும

உரைத்தற்பாலனவல்ல பொறுமையே வடிவெடுத்தாற் போன்ற ஸாக்ரடீஸ், யாவற்றையும் அசையாது தாங்கி, உள்ளக்கவலை சிறிதுமின்றி, நன்னெறியை வழுவவிடாது, பிறர்பொருட்டே வாழ்ந்துவந்தனர். இம்மகானைப்பற்றித் தெரியாத ஜாதியாரே இல்லையென்னலாம். இவரது சரித்திரம் எல்லாப்பாஷைகளிலுமுள்ளது. நம் தமிழ்மொழியிலும் ஒன்றிருப்பது அவசியமென்பதை நான் கூறவேண்டியதில்லை.

1911-ஆம் வருஷத்தில் நான் இராமநாதபுரம் பாண்டியன் ஸெகண்டரி ஸ்கூலில் தலைமைப்பாத்தியாயராக அமர்ந்திருந்தபோது, காலஞ்சென்ற பாலவனத்தம் ஜமீந்தாரும், மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகரும், அதன் முதல் அக்ராசனாதிபதியும், தமது உடல்பொருளாவியெல்லாம் ஒருங்கே தமிழ்வளர்ச்சியின்பொருட்டுச் செலவிட்டு வரும், இரந்தோர்க்கில்லையென்னாது வரையாது ஈந்து வந்த வள்ளலுமாகிய ஸ்ரீமான் பாண்டித்துரை சாமித் தேவர் அவர்களது நட்பும் அன்பும் எனக்குக் கிடைத்தன. அவர்களுடன் ஸாக்ரடீஸைப்பற்றி ஒருமுறை சம்பாஷிக்க நேர்ந்தபோது, அந்தஞானியாரின் அரியசெயல்களில் தேவரவர்கள் ஈடுபட்டு, அவரது சரித்திரப்பகுதியைத் தெரிந்தவரை தொகுத்துச் செந்தமிழில் வெளியிடும்படி ஆஞ்ஞாபித்தார்கள். அவ்வாறே, F J சார்ச் என்பார் எழுதிய நூலிலிருந்து, சில பாகங்களை மொழிபெயர்த்துச் செந்தமிழ் 9-ஆம் தொகுதி 2, 3, 4, 5-ஆம் பகுதிகளில் வெளியிட்டேன். பின்னர் இவற்றை நன்றாக விரித்தெழுதிப் புதிதாகப் பலவிஷயங்களையும் சேர்த்துப் புஸ்தக ரூபமாக வெளியிடவேண்டுமென்ற அவா என்னைத் தூண்டிற்று. அவ்வாறே பலநூல்களிற் கண்ட விஷயங்களைத்

தொகுத்த தமிழ்க்கேற்பச் சில மாறுபாடுகளுடன் இந் நூலை எழுதிமுடித்தேன். பல இடையூறுகளால் சென்ற மூன்று வருஷங்களாக இதை அச்சேற்றுவதற்குக் கூடா மற்போயிற்று.

சென்னை ஸர்வகலாசங்கத்தார் ஏற்படுத்திய வியாசக் கமிட்டியார் குறிப்பிட்ட விதிகளை ஒட்டியும், சென்ற சில வருஷங்களாக மாணவர்களுக்குத் தமிழ்பயிற்றிவருவதனால் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக்கொண்டும் இப்புஸ்தகம் எழுதப்பட்டுள்ளதனால், கூடியவரை நடையைச் செவ்விதாகவும், எளிதாகவும், இனிதாகவும் அமைத்துள்ளேன். ஸ்கூல்பைனல் பரீட்சைக்கு வாசிக்கும் மாணவரும் எளிதாகப் படித்தறியுமாறு கடினசந்திகளைப் பிரித்தும், விளக்கவேண்டிய விஷயங்களை நன்றாகத் துலக்கியும் எழுதியிருக்கிறேன்.

இப்புஸ்தகத்தில் எவையேனும் தவறுகள், அபிப்ராய பேதங்கள் காணப்படின், அவை எனது அறியாமையால் ஏற்பட்டவை யென்பதை அன்பர்கள் மனத்திருத்தவும், அவைகளை எனக்கு அறிவிக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இதிற் காணப்படும் பெயர்களும், விஷயங்களும், தமிழ்கற்போர்க்குப் புதியவையாக விருப்பினும் இப்புஸ்தகத்தைப் படித்துக் களிக்கும் அப்பெரியாரின் அருஞ் செயல்களை அறிந்துகொள்வதற்கு அவை ஒருபோதும் தடையாகவிரா.

இப்புஸ்தகத்தை அச்சிடுவதில் எனக்குப் பேருதவி செய்தவர் வேலூர் காலேஜ் தலைமைத்தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ உ. வே. பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரவர். அச்சிடுவதில் யாதொருவழியுந் தெரியாது தயங்குங் காலத்தில், அவர்கள் கருணைகூர்ந்து, அதுவிஷயமான சகலவேலைகளையும் தாமே செய்துகொடுப்பதாக வாக்களித்து, இந்நூலின் கையெழுத்துப்பிரதியைத் தாமே படித்துப் பிழைகளைந்து, புரூப் முதலியவைகளைச் சலிப்பின்றிப் பார்த்தருளி, செவ்விதாக இந்நூல் விரைவில் அச்சேறும்படி செய்ததற்கு, யான் செய்யும் கைம்மாறு யாதுளது? செய்யாமற்செய்த இவ்வுதவியை நான் எழுமையும் மறவேன்.

ஸாக்ரடீஸது உயர்ந்தசரித்ரமடங்கிய இந்நூலில் அவரது உருவப்படத்தை முன்னர்ச் சேர்த்தல் மிகவும் பொருத்தமானதெனக் கருதி, அதனை பியூரி என்ற ஆங்கிலவாசிரியர் எழுதிய க்ரீஸ்தேசசரித்திரத்திற் கண்டபடி தயார்செய்து அவ்வாறே சேர்த்துளேன்.

இந்நூலைக் கூடியவரை விரைவாகவும் அழகாகவும் அச்சிட்டுத்தந்த வேலூர் சுந்தரவிநாயகர் அச்சுக்கூடத் தலைவர் ம-ரா-ரா-ஸ்ரீ V D நடராஜ முதலியார் அவர்களுக்கும் எனது வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

R அரங்நாசாரியன்

ஸ்ரீ

# ஸாக்ரடீஸ் சரித்திரம்

## I முன்னுரை.

[பீடிகை—ஆதாரங்களின் குறைவு—பிளேட்டோ—ஸெனபன்—இருவரும் நூலெழுதிய காரணம்]

ஸாக்ரடீஸ் என்பவர், க்ரீஸ் தேசத்தில் ஆதன்ஸ் என்னும் நகரில் இற்றைக்குச் சற்றேறக்குறைய 2400-வருஷங்களுக்குமுன் சிறந்து விளங்கிய மகான்களில் ஒருவர், கல்விக்கடலைக் கரைகண்டவர், ஒழுக்கத்திற் சிறந்தவர், சீரிய கூரிய அறிவுடையவர், சாந்தகுணசீலர், யதார்த்தவாதி, மிகுந்த சொல்வன்மை பொருந்தியவர், உண்மையைத் துருவி நாடுவதில் ஊக்கம் மிகுதியுமுடையவர், கல்விச் செருக்குச் சிறிதுமில்லாதவர், பிறரிடத்திற் கண்ட செருக்கைக் கண்டித்து, வாதத்தால் அவரை அடக்கி, அவரது அஞ்ஞானத்தைப் புலப்படுத்தி, அவரைச் சீர்திருத்துவதில் தமது வாழ்நாளைக் கழித்தவர், தொன்றுதொட்டு இன்றுவரை பலதேயத்துப் பலவேறோராலும் போற்றப்படுபவர், உலகமுள்ளளவும் யாவராலும் ஏத்திக் கொண்டாடத் தகுந்தவர்.

இவ்வண்ணம் ஒல்காப் புகழும் பலகும் பெருமையும் வாய்ந்துள்ள அப்பெரியாரது சரித்திரப்பகுதிகளில் ஒரு சிறிதளவே நமக்குக் கிடைத்திருக்கின்றது, முற்றுங் கிடைக்க வழியில்லை. பொதுவாய்ப் பெரியோரைப்பற்றிய வரலாறுகட்கெல்லாம் இவ்விதக்குறைவு இயற்கையில்

ஏற்படுகின்றது. உலகில் கல்வியறிவொழுக்கங்களில் மேம்பட்டு விளங்கும் பெரியோர்து வாலிபச்செயல்களை ஜனங்கள் அறிய அவாவுகின்றார்கள். அவ்வவாவை நீக்குவதற்குக் கருவியாகவுள்ள அவரைப்பற்றிய செய்திகள், அவர் வாவாயால் வெளியாகவேண்டுமேயன்றி, மனிதரால் ஊகித்தறியப்படமாட்டா. ஊகமெல்லாம் கற்பனையாய் முடியும். அக்காலத்தில் தன்சரிதம் தானுணர்த்தும் வழக்கம் இல்லை. ஒருவர்சரித்திரத்தை அச்சுவாயிலாகப் பரவச் செய்தல் இக்காலத்திற்கே உரியது. ஆதலின், அன்னோரைப்பற்றிய விஷயங்கள் கர்ணபரம்பரையாகவேனும் உடனிருந்தோர் எழுதிவைத்தேனும் வந்தாலொழிய ஒரு சிறிதும் அவர்களைப்பற்றி நாம் உணரவல்லோமல்லோம்.

இந்தப்பொதுவிதிக்குட்பட்டே ஸாக்ரடீஸ்சரித்திரமும் உள்ளது. இவரைப்பற்றிய பலகதைகள் வழங்குகின்றன. இவையாவும் பின்னுள்ளோரால் புனைந்துரைக்கப்பட்டவை என்பர். இவரைப்பற்றி எழுதினோர் பலராவர். எழுதிய நூல்களும் பலவே. அந்நூல்களுள் பெரும்பாகம் இறந்துபோயிற்று. எஞ்சி இக்காலத்துள்ளவைகளிற் சிறந்தவை, பளேடோ (Plato), ஸெனபன் (Zenophon) என்ற இருவரது நூல்களேயாகும். இந்த இரண்டு ஆசிரியர்களையும் ஸாக்ரடீஸ்சிஷ்யர்களென்று பண்டிதர்கள் மாறுக்கக் கூறுவர். ஸெனபன் ஒரு போர்வீரர், தத்வஞானியல்லர். தம் நண்பராகிய ஸாக்ரடீஸைப்பற்றி ஜனங்கள் கொண்ட கெட்ட எண்ணங்களை மாற்றும்பொருட்டு அவர் தமது நூல்களை * யாத்தார். அந்நூல்களைப் படிப்பவர் ஸாக்ரடீ

---

* (1) Memorabilia of Socrates (2) The Symposium or Banquet of philosophers.

ஸைச் சாமான்யரான ஒரு மனிதரென்றே மதிப்பார்கள் ப்ளேட்டோ என்பார் தத்வஞானிகளில் ஒருவர் அவரது கொள்கைகளிற் பல ஸாக்ரடீஸ் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவாயினும், இரண்டிற்கும் பேதம் பெரிதுமுண்டு ஸாக்ரடீஸ் பிறரோடு சம்பாஷித்த விஷயங்களை இவர் இயற்றிய நூல்களில் ('The Dialogues') பார்க்கக் காணலாம் ஸாக்ரடீஸ் கொள்கைகள் எவை, ப்ளேட்டோ கொள்கைகள் எவை என்பதை உறுதியாக அந்நூல்களிலிருந்து கண்டறிவது இப்போது இயல்வதன்று

மேற்கூறிய ஆசிரியரிருவரும் இருவித நோக்கத்துடன் தமது நூல்களை இயற்றினர் அப்புஸ்தகங்களிலிருந்து ஸாக்ரடீஸ் சம்பாஷணைகளும், அவற்றின் சாரமும், அவர் சம்பாஷித்த விதமும், அதன் நோக்கமும், அவருடன் சம்பாஷித்தோருடைய மனநிலையும், அதைக் கேட்டனுபவித்தோருடைய அபிப்ராயங்களும் வெளியாகின்றன ஒருவர் விட்டதை மற்றவர் நிரப்பிக்கொடுப்பதால், அந்நூல்கள் ஸாக்ரடீஸ் சரித்திரத்திற்குச் சிறந்த சாதனங்களாகின்றன

ஸாக்ரடீஸின் குடும்பவாழ்க்கையைப்பற்றிய விவரங்களும், அவரது உருவம் தோற்றம் முதலியவற்றைக்குறித்த யாவும், மேலெடுத்தோதிய நூல்களிலிருந்தே முக்யமாய் வெளியாகின்றன. அவரது பெருமையை உணராமல் அவரைத் தூற்றிப் பழிகூறிய நாடககவிகளாகிய அரிஸ்டோபானஸ் (Aristophanes) முதலியோரெழுதிய நாடகங்களிலிருந்தும் அவரது சரித்ரப்பகுதிகளிற் பல அறியக்கிடக்கின்றன.

மேற்கூறிய நூல்களனைத்தையும் ஆதாரமாகக்கொண்டு பல சரித்ர நூல்களும் பிற நூல்களும் ஆங்கிலத்தில் எழுதப்

பட்டுள்ளனவாயினும், அவற்றுள் க்ரோட் (Grote) என்ற சரித்ரவாசிரியர் எழுதிய க்ரீஸ்தேசசரித்திரத்தையும், சர்ச் (F. J Church) என்பவர் எழுதிய 'ஸாக்ரடீஸ் விசாரணையும், மரணமும்' * என்ற புஸ்தகத்தையும் ஆதாரமாகக் கொண்டு, ஸாக்ரடீஸ்சரித்திரத்தை ஒருவாறு சுருக்கிக்கூற இங்கு முயன்றுள்ளோம். பலவிடங்களிலும் இம்முதனூல்களின் மொழிபெயர்ப்புகள் விரவிவந்துள்ளன என்பதை முன்னம் கூறிக் கதையைத் தொடங்குகின்றோம்.

# ஸாக்ரடீஸ் சரித்திரம்.

## II இளமைப்பருவம்.

[ஸாக்ரடீஸின் பிறப்பு—விவாகம்—இல்வாழ்க்கை—ஜீவனோபாயத்தின் சிறுமை—தேகத்தோற்றம்—பழக்கவழக்கங்கள்—இளம்பிராயத்தில் அறிவுவிருத்திக்கு ஏற்பட்ட சாதனங்கள்—யுத்தரங்கம்—பாடிடேயா—டீலியம்—ஆம்பிபாலிஸ்]

ஸாக்ரடீஸ் கி. மு 469-இல் பிறந்தவர். அவரது பிதா ஸோப்ரானிஸ்கஸ் (Sophroniscus) என்ற ஒருசிற்பி. அவர் தாய் பானரீட் (Phaen. rete) என்ற ஒருமருத்துவச்சி. ஸாக்ரடீஸ் இளமைப்பருவத்திலேயே தமது குலவித்தையிற் கைதேர்ந்து பல சிலைகளைச் செதுக்கினார். அவற்றில் மூன்று பிற்காலத்தில்வெகுநாள்வரை † இவருடையவேலைப்பாடென்று ஆதன்ஸ் காட்சிச்சாலையில் (Aeropolis)

* The Trial & death of Socrates.

† Till the time of Pausanius about 180 A. D.

நிறுத்தப்பட்டிருந்தன. ஸாந்திப்பி (Xanthippe) என்ற ஒருபெண்ணை அவர் மணந்து மூன்று ஆண்மக்களைப் பெற்றார். இவளை அவர் மணந்தவருஷம் நமக்குத் தெரியாது. இவள் மிகவும் கொடியவள், பிடாரி, கணவனையும் குழந்தைகளையும் கடிந்து பேசுவாள், திட்டுவாள். தினமும் வீடு அமர்க்களம்போல விளங்கும். வெடித்த சொல்லே வேணும் போதெல்லாம் அங்குக் கேட்கலாம். தனது தாக்குணங்களால் மிகவும் பொல்லாதவளென்று பேர்வாங்கின அவள் இழைக்கும் கொடுமைகளையெல்லாம் அவர் அதிகப் பொறுமையுடன் சகித்துவந்தார். ஒருநாள் தம் மனைவி கூறும் தீமொழிகளைப் பொறுக்கக்கூடாமல் அவர் தமது வீட்டைவிட்டு வெளியேறி, வாயிற்படியில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்திருந்தாரெனவும், கோபாக்கினியால் தபிக்கப்பட்ட அவரது மனைவி மேல்மாடிசென்று அசுத்த நீர் நிறைந்த பாண்டத்தை எடுத்து அவரது தலைமேல் கவிழ்த்துவிட்டாளெனவும், பாவம்! ஸாக்ரடீஸ் ஒன்றும் செய்யத்தோன்றாமல் சிறிது திகைப்படைந்து, பின்னர் புன்னகையுடன், 'முன்னே இடிபிடித்தது, இப்போது மழைபெய்தது!' என்று சொல்லிக்கொண்டே வீட்டைவிட்டுப் போய்விட்டாரெனவும் கூறுவர். இன்னும், அவள் தனது குழந்தைகளையும் கொடுமையாக நடத்திவந்தாளென்றுங் கூறுவர். இக்கூற்றுக்களெல்லாம், பின்னுள்ளோரால் வரையப்பட்டனவாகும். அவளை, குணத்திற் கெட்டவள் என்றுமட்டும் ஸெனபன் எழுதிப்போந்தார். உலகின் நன்மைக்காகவே உழைத்து, வறுமையைத் தாமே மிகுதியாக விரும்பி, குடும்பவிஷயங்களிற் சிறிதும் பற்றின்றி, தமது வாழ்நாளையெல்லாம் வீட்டிற்குப் புறம்பே கழித்தவரை, அவர் மனைவி கொண்டாடிப் போற்றுவாளென்று யாரேனும் எதிர்பார்ப்பார்களோ?

அதீனியருள தலைவனும தலைவியும சிறநத கட்டு டன வாழவாாகள அவாகட்கு உடல இரணடாயினும, தாம ஒருயிாபெறறதுபோல கருதி, இணைபிரியாது இனப துனபஙகளை ஒருஙகே அனுபவிபபா அவவாறிருநதும, ஸாகரடீஸுககு அவா மனைவி இஙஙனம அபராதமிழைதத தாகச கூறுவதனால, அவா தாமரைபபிலைமேல தஙகும தண ணிய நீரின துளிபோல பறறறறுக குடுமபவாழககையில நினறாரெனவும, தம மனைவியின பொறுமையை அவள எதிரபாராதபடி சோதிததாரெனவும, அசசோதனைகளைப பொறுககககூடாத அபபெணமணி மதிகெட்டு மனம நொநது கணவனையும குழநதைகளையும பேணாது விடுத தாளெனவும கூறுவதறகுப பெரிதும இககதை இடந தருகினறது. பரம சாதவிகரான ஸாகரடீஸ, அவளது தீசசெயலகளையெலலாம சகிததுவநததுநதவிர, அவள செயவதெலலாம நனமையையே பயககுமெனறு தம குழநதைகடகு எடுததுககாட்டி, தாயைப பழிககாமற போறறிவருமபடி அவாகட்குப புததியும புகட்டிவநதார

அவா, ஏழைககுடியிற பிறநதவராயினும, வறுமை யினவயபில அகபபடாமல, ஏதோஉபாயமாகப பொரு ளீட்டிக காலங கழிததுவநதார. இவவிதமாக, அவரது ஜீவனம பலவருஷஙகளாக நடநதேறியது

அவா திடசரீரமுளளவா, நோயகளாற பீடிககப படாதவா, எவவிதமான கடினவேலையையும எளிதில முடிககவலலவா, களைபபெனபதைக கனவிலும அறியாத வா, வெயிலையும பனியையும ஒருபொருட்டாக எணணாத வா பாதரக்ஷையை அவா எககாலததிலும அணிநததிலலை. கரீஸதேசததிலும, அதையடுதத நாடுகளிலும, பனியும்

வெயிலும் அவ்வக்காலங்களில் கொடுமையாக இருக்கும். தண்ணீர் பனிக்கட்டியாகவுறையும் கூதிர்ப்பருவத்திலும், நிலங்கொதித்தெழும் முதுவேனிற்பருவத்திலும் அவர் வெறுங்காலுடன் நடப்பார். எப்பருவத்திலும் அவர்க்கு உடையொன்றே. பருவத்திற்கேற்ப உடையை மாற்றுகிற வழக்கம் அவரிடம் இல்லை. அவர் உண்ணுமுணவு சாதாரணமானதுதான். மிகமிஞ்சி அவர் ஒருபோதும் புசியார். திருவிழாக்காலங்களிலும், வேறு விசேஷதினங்களிலும் அவர் தமது வரம்பைக் கடந்து எவரினும் அதிகமாகச் சுராபானம்பண்ணுவார். அச்சமயங்களில், அவரது மனதில் ஒருசிறிதும் தன்பெற்றிபிறழாது வயப்பட்டே நிற்கும்.

உடற்பயிற்சிசெய்யும்போது சில கடினவேலைகளைப் பழகிவந்தால் எவரும் களைப்படைந்து மிதபோஜனஞ் செய்வது வழக்கமாதலின், அவ்விதக் கடினவேலைகளை ஸாக்ரடீஸ் அறவே தவிர்ப்பார். பரமாத்மாவாகிய கடவுள், விருப்பு வெறுப்பு ஊணுறக்கம் முதலியவையின்றி ஒரேதன்மையராயிருப்பதுபோல, அவரது சத்வகுணங்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு உயிர்வாழவிரும்பும் ஒவ்வொருவரும், விருப்புவெறுப்புக்களை அடக்கித் தமது ஜீவனோபாயத்திற்குவேண்டிய சாதனங்களைக் கூடியவரை குறைப்பதும், இயற்கையாக எழுகின்ற பசிதாகமுதலியவற்றை ஒடுக்கி வசப்படுத்துவதும், சுகவாசத்திற்காகத் தாமே ஏற்படுத்திக்கொள்வனவற்றைப் பெருகவிடாது அடக்குவதும் மனிதரின் முக்யக்கடமைகளென்று அவர் கூறுவர். வியக்கத்தக்க தேகவன்மையும் மெய்வலியும் படைத்த அவர், தமது சிந்தையைப் புலன்களிற் புக

விடாது எளிதில வயபபடுததிககொணடார, உளளதைக் கொணடு உவநதார, பிறரை எதிரபாராமலும, அவரது பகைமையைப பொருடபடுககாமலும, தமதிஷடமபோல அறிவைப பெருககுவதிலேயே காலததைக கழிததார

இவவிததேகபலமும சலிபபினமையும பெறறவர, உடலழகு வாயககபபெறறிலர அவரது தடடையூககும, தடிதத நாவும, வெருணட கணணும, கணடோரககு நகைப பைத தநதன யாவருமவரை எளளனஞ்செயதனர

அவரது உயாநதகுணஙகளைபபறறிப பலர பலவாறு புகழநதுளளாரகள ஆயினும, அவர இயறகையில மிக வும கோபிஷடரெனவும, அககோபததைத தலைகாடட விடாது அடககிவநதாரெனவும, சிறசிலவேளைகளில அது அடஙகாது பெருகி மனமொழிமெயகளால அவரைப பிழைபடசசெயததெனவும இவரைபபறறி எழுதிஞேர சிலர கூறுவர, மனவடககததிறகுச சாதனமாகுமெனறு கருதியே அவர மணநதுகொணடாரெனவும கூறுப

ஸாகரடீஸது அறிவும ஒழுககமும முதலில எவவா றிருநதன, பினனர எவவாறு முதிரநதுவநதன எனபவை சிறிதும நமககுத தெரிநதில நாறபதாம ஆணடுவரை இவ ரைபபறறிய விஷயஙகள ஒருவராலும எழுதபபடவிலலை. இவரகாலததில ஆதனஸநகரம பெறறிருநத சிறபபையும, அநநகரததாரின மேனமையையும, நாகரிகததையும, ஞானததையும உறறுநோககின, இவர குழநதைமுதல மனிதராகுமவரை நலலாசிரியரிடங கறறு நனமகக ளுடன பழகி, அறிவுமுதிரசசிககுக காரணமான பறபல கருவிகளாற சூழபபெறறிருததலவேணடுமெனபது திண

ணம் அக்காலத்து, ஆதன்ஸ் நகரம் கிரீஸ்தேசத்திற்குத் திலகம்போல விளங்கிற்று. அதற்கொப்பாக எலிஸபெத், விக்டோரியா சக்ரவர்த்தினிகளின் காலத்து இங்கிலண்டையும், அகஸ்டஸ் (Augustus) காலத்து ரோமாபுரியையும், பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்துச் செந்தமிழ்நாட்டையுங் கூறலாமேயன்றி, வேறெதையுங் கூறுவது பொருந்தாது. ஆதன்ஸ்வாசிகளிற் பலர், பல துறைகளிலும் பெரும் பண்டிதர்களாய் விளங்கி, கிரீஸ்தேசத்தை அந்நாளில் மேன்மை பெறச்செய்தனர். கவிபாடுதல், பதுமைவனைதல், கட்டடமமைத்தல், சரித்திரமெழுதுதல், அரசியல் நடாத்தல், பிரசங்கஞ்செய்தல் முதலிய அரிய பெரிய விஷயங்கட்கு இன்றும் அவரே நமக்குத் தக்கையாள்வர். உலகில் அவ்வத்துறைகளில் அவர்களிட்ட பிச்சைதான் இன்றும் நிலவுகின்றது. இவ்வித மேன்மைகள் ஒருங்கே வசிக்க நகரிலதான் மகாஞானிய ஸாக்ரடீஸ் பிறந்தனர். அக்காலத்தில் இளைஞரனைபலரும் ஒருமைச் சூழ்ச்சியுள்ளதை உற்றுநோக்கின், அம்மகானும் அம்மைந்தர்கள் பலருடன் பழகி உறவாடியிருந்தக்கால் கூடுமென்பது தெரியாம், என்னெனில், ஆதன்ஸ் நகர் மிகப்பெரியதன்று; அந்நகரினரும் தங்கள் பொழுதை வீட்டினுள் கழிப்பதில்லை. இவ்வகைச் சிறப்புற்றோங்கிய நகரின்கண் வசித்தலே எவர்க்கும் உள்ளக்கிளர்ச்சியை ஊட்டுவதோடு, அறிவையும் பெருக்குமென்பதற்கு ஐயமின்று.

ஆதன்ஸ்வாசிகட்கு மற்றொருவிதமாகவும் அறிவு வளர்ச்சி உண்டாயிற்று. அது அவரது அரசாட்சிமுறையால் ஏற்பட்டது. அந்நாளில் ஆதன்ஸ் நகரம் பலநாடுகளைக் கீழ்ப்படுத்திய பெரிய ராஜாங்கமாகத் திகழ்ந்தது.

குடிகளே அவ்விராஜ்யத்தை ஆண்டுவந்தனர் குடிகள் ஒருங்கேகூடிய அவையில் ராஜாங்கவிஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன நகரத்தார் ஒவ்வொருவரும் அந்தச்சபைக்குத் தவறாது வந்தனர் அச்சபை, தற்காலத்திற்போல அமைச்சர்களால் நடைபெறவில்லை, குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்பெறவுமில்லை இவ்விதமான ஏற்பாட்டால் ஆதன்ஸ்வாசியொவ்வொருவரும் ராஜாங்கத்திற்குரிய பெரியகாரியங்களில் தலையிடும்படி நேரிட்டது அவருடைய அதிகாரத்திற்கும் ராஜ்யப்பொறுப்பிற்கும் அளவேயில்லை ஸ்வதேசராஜ்யவிஷயங்கள், சட்டவிஷயங்கள், சண்டைசமாதானவிவரங்கள், உடன்படிக்கைகள், பிறதேசவ்யவகாரங்கள், குடியேற்றநாட்டுச் சம்பந்தங்கள் முதலியவை சபையில் தீர்மானிக்கப்படும்போது, ஜனங்கள் தம்முள் மாறுபட்டுச் சபையில் தாந்தாம் கொண்ட கருத்துக்களை நிலைநிறுத்திப்பேசுவதை நாடோறும் அங்குக் கேட்கலாம் இன்னும் ஒருதிறத்தாரின் கொள்கைகளை மறுத்து மிக்க திறமையுடன் கேட்போர் வியக்கும்படி மற்றொருசாரார் பேசுவதையுங் காணலாம் இவைகளைக் கேட்போரொவ்வொருவரும் இருவர் மாறுகோள்களையும் சீர்தூக்கி, உண்மையீதென ஒருதலையாகத் துணிந்துரைத்தல் அவசியமாயிற்று

இன்னும், அதீனியரின் ந்யாயஸ்தலமும் வேறொரு விதமாக அவரறிவை வளர்த்தது நகரவாசி ஒவ்வொருவரும் வேண்டப்படும்போது ந்யாயாதிபதியாய் அமர்ந்து வழக்குக்களைத் தீர்மானிக்கக் கடமைப்பட்டிருந்தனர் இத்தகைய காரணங்களினால் ஆதன்ஸ்வாசிகள் மிக்க அறிவாளராய் இருந்தனர் அவர்க்குச் சமானமாக இப்போது எத்தேசத்திலும் சாமானியரில் ஆய்ந்தெடுக்கமுடியாது.

ஆதலின், ஜனசபையிலும் நியாயசபையிலும் நடந்த சம்பாஷணைகளையும் பிரசங்கங்களையுங் கேட்டு, மனந் தெளிவடைந்து ஸாக்ரடீஸ் பிறர்போலிவாதங்களைத் துறந்து உண்மையை நாடவல்லவராயினாரென்று சொல்லல் என்ன சந்தேகம்?

இவ்விதம் அவரது இளமைப்பருவங் கழிந்தது. அந் நாட்களில் அறிவினைப் பெருக்கிறதற்குக் காரணமான பல சாதனங்கள் அவர்க்கு அமைந்திருந்தனவென்பது சொல்லாமலேயமையுமாயினும், அவர் இன்னது படித்தார், வாசிப்பதில் இவ்விதவுணர்ச்சியுடனிருந்தார், பிறகு எவ்வாறு அது வளர்ந்தது என்பனவெல்லாம் ஊகத்தின்கண் அமைந்தனவேயன்றி, உண்மையாயத் தெரிதல்கூடாவாயின. அதீனியாக் குழந்தைகளில் ஒவ்வொருவரும் வழக்கமாகக் கற்கவேண்டிய தேகப்பயிற்சியும், இசைநூலும் இவர் நன்கு கற்றிருத்தல்வேண்டுமென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளலாம்.

ஹோமர் (Homer) முதலிய பண்டைப்புலவரின் நூல்களில் அவர்க்கு நல்ல பயிற்சியுண்டென்பது அன்னோர் நூல்களிலிருந்து மேற்கோள்கள் அதிகப்பிரியத்துடன் அவர் அடிக்கடி எடுத்துக்கூறுவதனால் விளங்குகிறது. கிரீஸ்தேசத்துப் பழையபண்டிதரேழுவரது * ரத்ன வாக்கியங்களைத் தம் நண்பர்களுடன் சிந்தித்துக் களிப்

*இவர்களே, சப்தமுனிவர் (The seven sages) என்று கூறுவதுமுண்டு. இவர்களுடைய திருநாமங்களாவன —ஸோலன் (Solon), கைலோ (Chilo), பிட்டேயியஸ் (Pittaeus), பியஸ் (Bias), பெரியாண்டர் (Periander), [இவருக்குப்பதிலாகச் சிலர் எபிமீனிடிஸ் (Epemenides) என்பாரை வைப்பார்], க்ளி

படைப்பது வழக்கமென்று அவரே பன்முறை கூறுவர். “உன்னை அறி” முதலிய அரியபெரிய வாக்கியங்கள் அவ்வெழுவர்கம் நாவில் உதித்தனவாகும். இவை, சுருங்கிய நன்மொழிகளால் ஆழ்ந்த கருத்தை விளங்கவைத்து, நவின்றோர்க்கு இனிமை பயத்தலான, ஸாக்ரடீஸ் அவற்றில் ஈடுபட்டிருந்தார். அவரது சித்தாந்தத்திற்கு மூலம் மேற்கூறிய வாக்கியமேயாகும்.

இனி, அவர்க்குக் கணிதமும் அக்காலத்தார் உணர்ந்தவரை இயற்கைசாஸ்த்ரமும் தெரியும். வானசாஸ்த்ரம், ரேகாகணிதம் முதலியவற்றையும் அவர் நன்கு உணர்ந்திருந்தார். அக்காலத்து வழங்கிய தத்வசாஸ்த்ரக்கொள்கைகளிலும் அவர்க்கு நல்லபயிற்சியுண்டு. ஆயினும், தத்வசாஸ்த்ரநுட்பங்களை முற்றும் விசாரிப்பது தகுதியன்றென்பது இவரது துணிபு. வானசாஸ்த்ரம் மாலுமிக்கும், ரேகாகணிதம் நிலமளப்போனுக்கும் எவ்வாறு உபயோகப்படுகின்றதோ, அதுபோல, பிறசாஸ்த்ரங்களும் மனிதருடைய விர்த்திக்கும் காரியநிர்வாகத்திற்கும் சிறந்த உத

---

க்ளியோபூலஸ் (Cleobulus) தேல்ஸ் (Thales)

இவர்களுடைய அமுதவாக்கியங்களாவன —

(1) உன்னை அறி [Know thyself]
(2) விளைவை உன்னு [Consider the end.]
(3) சமயமறி [Know thy opportunity]
(4) உலகில் அநேகர் உறதீயோரே [Most men are bad]
(5) உழைப்பினால் ஆகாததொன்றுமில்லை. [Nothing is impossible to industry]
(6) அமிதமகல [Avoid excess]
(7) பிணை முன்னறிகுறி பெருங்கேட்டுக்கே [Suretyship is the precursor of ruin]

வியாயிருக்கவேண்டுமென்று அவர் திடமாய்க் கூறினார். ஆகலின், மனிதர் மேம்பட வாழ்வதற்கு எம்மட்டுக் கற்கவேண்டுமோ அம்மட்டே அவர் கற்றுணர்ந்தார்.

அவரது நாற்பதாம் ஆண்டுவரை அவரைப்பற்றி இப்பொதுவான விஷயங்களே நமக்குத் தெளிவாகின்றன. இவையும் எழுத்துமூலமாக வந்தனவல்ல. முதன்முதல் எழுத்துமூலமாக அவரைப்பற்றி நாம் அறியக்கிடப்பது யாதெனில், பாட்டிடேயா (Potidaea) என்னுங் கோட்டையை அதீனியர்கள் முற்றுகைபோட்டபொழுது அவரும் அங்குச்சென்று கடும்போர் புரிந்தனரென்பதே. பாட்டிடேயாவென்பது, ஆதன்ஸ்ராஜ்யத்திற்கு அடிப்பட்ட ஓர் நகரம். சில காரணங்களினால் அது கலகஞ்செய்து ஸ்வராஜ்யத்தை நாட, அதீனியர் அதை முற்றுகையிட்டனர். கி மு 432-முதல் கி மு 429-வரை நிகழ்ந்த நீண்ட இம்முற்றுகையில், ஸாக்ரடீஸ் பசி தாகமுதலியவற்றைச் சற்றேனும் பாராட்டாமல், மற்ற அதீனியர்கள் கண்டு வியக்கும்படி பகைவரைப் பொருது நாழிலொட்டிக் கலக்கினார். அத்தருணத்தில் ஆல்கிபியாடிஸ் (Alcibiades) என்பாரோர் ஆதன்ஸ்வாசியைப் போர்க்களத்திற் பகைவீரர் கொல்லப்படாது காப்பாற்றி, மிகுந்த கருணையுடன் வெற்றிப்புகழ் அவர்க்கே கிடைக்கும்வண்ணஞ் செய்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. கி மு 431-இல் அதீனியர்களுக்கும் லக்கிடிமோனியர்களுக்கும் (Lacedemonians) பெரும்போர் நிகழ்ந்தது. கி மு 424-இல் டீலியமென்ற (Delium) இடத்தில் நடந்த சண்டையில் அதீனியர் தோல்வியுற்றுப் பின்னிட்டனர். இப்போரில் ஸாக்ரடீஸ், லாக்கஸ் (Laches) என்ற இருவரும் பகை

வருந் திகிலடையும்படி தம் வீரத்தையும் அஞ்சாமையையும் வெளிப்படுத்தினரென்றும், ஏனையோரும் இவர்களைப் போலப் போர்புரிந்திருப்பின் அதீனியர்க்குத் தோல்வியின்றி வெற்றியே கிடைத்திருக்குமென்றும் எழுதப்பட்டிருக்கின்றன. இப்போரில் ஸாக்ரடீஸ் ஸெனபன் என்பாருடைய உயிரைக் காப்பாற்றினாரெனவும், பின்னிட்டுச் செல்லும் ஸாக்ரடீஸைப் பகைவர் தாக்கி ஊறுபடுத்தாமல் ஆல்கிபியாடிஸ் சகாயஞ்செய்தாரெனவும் கூறுவதுண்டு. கி. மு. 422-இல் ஸாக்ரடீஸ் மூன்றாமுறை ஆம்பிபாலிஸ் (Amphipolis) என்ற இடத்தில் நடந்த சண்டையில் மகா வீராவேசத்தோடு சத்துருக்களை எதிர்த்தார். இவ்விதம் தாம் பிறந்த நகரத்துக்காக அதிக உத்ஸாஹத்துடனும் தைரியத்துடனும் தம்முயிரையும் ஒருபொருட்டாக எண்ணாது உழைத்துவந்த சமயத்தில், அரிஸ்டோபானஸ் (Aristophanes) என்னும் ஓர் நாடகவாசிரியர் நாடகமொன்றினை வரைந்து, அதில் ஸாக்ரடீஸைப்பற்றி ஏளனமாகக் கூறி, பிறர் அவரை வெறுக்குமாறு அவர்மேற் சிலகுற்றங்களைக் கற்பித்தார். அவர் அவ்வாறு செய்வதற்கு அவரது அறியாமையே முதற்காரணம். அவரைக் குறைகூறுவது சரியன்று. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் மத்தியில் ஆதன்ஸ்வாசிகளுக்குள் ஒரு புதிய மனக்கிளர்ச்சி உண்டாயிற்று. அவர்கள் தம் முன்னோர்களின் ஒழுக்கங்களையும் மதக்கொள்கைகளையும் கண்மூடித்தனமாக ஒப்புக்கொள்ளாமல், அவற்றைத் துருவி நாடித் தத்தம் அபிப்ராயங்களைக் கூசாமல் வெளிப்படுத்த முயன்றனர். இக்கிளர்ச்சியே ஆதன்ஸ் நகரில் அக்காலத்து நிகழ்ந்த பல விஷயங்களுக்கும் அடிப்படையாக இருத்தலின், அதைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

## அதீனியா மனக்கிளர்ச்சி.

[ஆதென்ஸ் நகரில் ஏற்பட்ட மனக்கிளர்ச்சி—அதீனியரது ஏகசக்ராதிபத்தியம்—சொல்வன்மையும், தர்க்கசாமர்த்தியமும்—முற்காலத்தத்வசாஸ்திரிகளின் கொள்கைகள்—எலியாங்காத்துத் தத்வசாஸ்த்ரசங்கத்தார்—ஸீனோ ]

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரீஸ் தேசமெங்கும் குடியரசு நகரங்கள் தழைத்தோங்கியிருந்தன. பாரஸீகவரசனாகிய ஸெர்க்ஸீஸ் என்பான் (Xerxes) அந்நாளில் கிரீஸ்தேசத்தைக் கட்டியாள எண்ணி, எண்ணிறந்த படைகளுடன் மேற்றிசையை நோக்கிச் சென்று, ஆசியா ஐரோப்பாக்கண்டங்களின் இடையிலுள்ள பாஸ்பரஸ் (Bosporus) ஜலசந்தியை அணுகினன். அதைக் கடந்துசெல்வதற்கு உபாயந்தேடுகையில், படகுகளை வரிசையாக நிறுத்தி, அதன்மேற் பலகைகளைப் பரப்பி, அப்படகுப்பாலத்தின்மேல் சேனையைச் செலுத்திப் போவதே ஏற்புடைத்தென அவ்வரசர்பெருமானுக்குத் தோன்றியது. அவ்வாறே அவன் கட்டளையால் படகுப்பாலம் எழவே, அவனது எண்ணிறந்த சேனைகள் ஏழு நாள் இராப்பகல் ஓயாது அதன்வழிச்சென்று, கிரீஸை யொட்டிய நாடுகளைக் கைப்பற்ற அடிகோலின. இச்செய்திகளையாவும் கிரீஸ்தேசத்தாருக்கு எட்டவே, அன்னோர் முதலில் அச்சத்தினால் பீடிக்கப்பட்டு ஒன்றுந்தோன்றாது திகைத்தனர். பிறகு குடியரசுநாடுகளெல்லாம் ஒன்று கூடிப் பகைவரைத் துரத்தி அடிப்பதற்கு வகைதேடின. இங்ஙனம் ஒருங்குகூடிய நாட்டார் கருதியபடியே சின்னாளில் காரியம் நிறைவேறிற்று. பாரசீகமன்னனை நீர்ப்

போர் சிலப்போராகிய இருகூற்றிலும் முறியடிக்கப்பட்டுப் புறங்கண்டனர். அவனும் வந்தவழியை நோக்கி விரைந்தோடி உயிர்தப்பினன். இவ்வரியசெயலை இனிதாகமுடித்தோரில் தலைமைவகித்தவர் ஆதன்ஸ் நகரத்துப் பெருமக்களே.

பாரசீகப்போர் முடிந்தவுடன், ஆதன்ஸ் நகரமானது மற்றநகரங்களைக் காட்டிலும் பலத்திலும் புகழிலும் செல்வாக்கிலும் ஓங்கித் தலைமைபெற்று, விரைவில் ஏகச்சக்ராதிபத்யங்கொண்ட பெரியதோர் ராஜ்யமாக மாறிவிட்டது. கிரீஸ்தேசத்துப் பிற குடியரசுநாடுகள் பெரும்பாலும் ஆதன்ஸ்நகரத்துத் திறைப்பிரமைலயில் வந்துவிட்டன. இதனால் ஆதன்ஸ்நகரத்திற்கும் மற்றநகரங்கட்கும் ராஜாங்கவ்யவகாரங்கள் ஏற்பட்டன. ஆதன்ஸ் வாசிகள் சிறந்ததோர் அரசுரிமையைக் கைக்கொண்ட காலத்தால் தமது பூர்விக உன்னதநிலைமையினையும், தேசபக்தியையும் இழந்து, பல கட்சிகளாகப்பிரிந்துகொண்டு தத்தம் நன்மையையே நாடினவர்களாய், தத்தம் எதிரிகளுடன் வாதித்துப் போராடிவந்தனர். இதன்றியும், ஆதன்ஸில் ந்யாயவிசாரணை மிகவும் பகிரங்கமாக நடத்தப்பட்டதனால், குற்றவாளிகளில் ஒவ்வொருவரும் தாமே முன்வந்து தங்கள் கட்சிவாதங்களை எடுத்துக்கூறி, சபையோரனைவரையும் தம்வழிப்படுத்துதல் முறையாக இருந்தது. இத்தகைய பலகாரணங்களினால் ஜனங்களியாவரும் தமது சொல்வன்மையைப் பெருக்குவதில் அதிகமாக முயன்றுவந்தார்கள். முதன்முதல் சொல்வன்மையிற் சிறந்துவிளங்கினவர் ஸிஸிலித்தீவில் அக்ரிஜண்டமென்ற ஊரிற் பிறந்த எம்பிடாக்ளிஸ் (Empedocles) என்பவர். பிறரோடு சம்பாஷித்து அவரைக் கேள்விகளால் மடக்கி வெற்றியடைவதில், இடலி (Italy) தேசத்து எலேயா (Elea) நகரவாசியாகிய ஸீனோ (Zeno) என்பவர் முதன்முதல் பெயர்பெற்றார். இதுபிறக

ஸாக்ரடீஸ்காலத்திற்கு முன்னுள்ள தத்வசாஸ்திரிகளிற் சிலர், உலகத்தோற்றங்களும் அவைகளின் மாறுபாடுகளும் கடவுளின் சிருஷ்டியால் உண்டானவையென்று தமது முன்னோர் கொண்ட கருத்தை நம்பாது, ஐம்புலவுணர்ச்சிக்கு எட்டிய யாவும் பூதமொன்றின் வேறுபாடாகுமென்றும், வேறுசிலர் இரண்டுபூதங்களின் வேறுபாட்டால் ஆனவையென்றும், மற்றுஞ்சிலர் நான்குபூதங்களின் சேர்க்கையால் ஆவனவென்றுங் கூறி ஒருவாறு மனச்சமாதான மடைந்தார்கள். எலியாநகரத்துத் தத்வசாஸ்திரிகள் அக்கொள்கைகளை அடியோடு மறுத்து, உலகத்தோற்றத்திற்கும் மாறுபாட்டிற்குங் காரணமாகிய புலனுக்கெட்டாத வஸ்துவொன்று உண்டென்றும், அவ்வஸ்துவை நமது புத்தியைக்கொண்டு நாடிப் பகுத்தறிதல் கூடுமென்றும், அவ்வஸ்துவே மாறுபாடின்றி என்றும் நிலையாகவுள்ளதென்றும், அதைத்தவிர நமக்குக் கட்புலனாவனவெல்லாம் ஒருவரையறையின்றித் தோன்றி மறைகின்றனவாதலின், அவை ஜனங்களுக்குத் தத்தமக்குத் தோன்றியவாறு மாறான அபிப்பிராயங்களைத் தருவனவென்றும், அவற்றை நம்பி எவரும் மதிமோசம்போகக் கூடாதென்றும் வற்புறுத்தினார்கள். இக்கொள்கைகள் தத்வசாஸ்திரிகளுக்குள் ஒரு புதிய கிளர்ச்சியை உண்டாக்கிவிட்டன. அவ்வெலியாநகரத்துத் தத்வசாஸ்திரிகளுக்குள்ளே ஸீனோவென்பார் சம்வாதஞ்செய்வதில் முதன்மைபெற்றுச் சிறப்புடன் விளங்கினார் ஆதலின், அவரது கொள்கைகளைக் கண்டித்து நிலைக்கவொட்டாமற்செய்வதிலேயே பண்டிதர்கள் பலர்க்குக் காலங் கழிந்தது. ஸீனோ, ஆதன்ஸ்நகர்க்குச் சென்று, சில அதீனியப்பிரபுக்களுக்குப் பாடஞ்சொல்லி, மிகுந்த பொருளை வேதன

மாகப பெறறார அபபோது அவர பெரிகளிஸ (Pereclis) ஸாகரடீஸ இருவருடனும சமபாஷிததததாகச சொலவதுணடு ஸாகரடீஸுககு அநதச சமயததில வயது பததொனபது

ஸீனோ சிறபபுறறு விளஙகிய நாளில, பிறரகொளகைகளை எதிரமறைமுகததால வாதிததுப பிழைகூறுகிற வழககம முதலில ஏறபடடது. அவர தொடைவிடைமூலமாகச சமபாஷணைமுறையை ஒழுஙகுசெயததுபோலவே, பிறரகொளகைகளை எதிரமறைமுகததால துருவியாயநது சீரதூககி உணமையை நாடுவதையும முறைபபடுததினார அதுமுதல தததவஆராயசசியில எதிரமறைமுகததால ஆராயவது மிகுதியாகக கையாளபபடடது கி மு 450-ககுபபிறகு கிரீஸதேசததில இவவாறு சமவாதஞசெயயும பணடிதரகளும, தமது சொலவனமையால கேடபோரைத தமவயபபடுததிக காரயசிததிபெறும பணடிதரகளுமாகிய இருவகைவிதவானகள கிளமபினாரகள அநநாளிலுளள ராஜாஙகமுறையும, செயயுளநூலகளின மேமபாடும, தததுவஆராயசசிகளின நிலையும, மேறகூறிய இருவிதவிதவானகள தோனறிய பொலிவுபெறுவதறகுக காரணஙகளாயின

பணடிதரகளுடைய நுணணறிவு இவவணணம இருவேறுதுறைகளிலும சிறநதுவிளஙகிறறு சிலர, நாடடிறகுத தாம செயயவேணடிய கடமைகளை மேலாகக கருதி, வைதேசவுததியோகஙகளில அமரநது, சொலவனமை முதலிய தம சாமாததியஙகளால சிறபபுறறாரகள. சிலர, ஜனககொளகைகளைச சீரதிருததி உணமையைத துருவி நாடுவதில தமதுநாடகளைக கழிததுவநதாரகள. இவவிரு

கட்சியாரக்குள தததம துறையே மேலானதென்ற வாதம நிகழநதமையின, ஒருவரையொருவா இகழநது கூறினா ஸாமானயஜனஙகளோ, இவாகளுள ஏறறததாழவைக கணடறியச செயலற்று, இருகடசியாரையும ஒருஙகே வெறுததனா என ஜனஙகள அவரை அவவாறு வெறுத தாாகள எனபதைககுறிதது இனி விளககுவோம

## 4-வது அதிகாரம்

## ஸோபிஸ்ட்ஸ் என்ற ஞானிகள்.

[ஸோபிஸடஸ என்ற ஞானிகள—ஆதனஸநகரில ஏறபட்ட கல்விததுறைகளின விரிவு—ஸோபிஸடஸ எனனும பதததின பொருள—பளேடோ கறபிதத பொருள—அவாகளைபபறறிக கொணட தவறான எணணஙகள—அவாது போதனையால அதீனியவாலிபாகள அடைநத நறபயன—குணககேடு செய்பவால்லா ]

ஆதனஸவாசிகளயாவரும், முனனாளில, தேகததைத் திடபபடுததும தேகபபயிறசியையும, மனதைக குளிர விககும இசையையும கறறுவநதாாகள வீணைவாசித தல, பாடுதல, நலல கவிகளைச செவிககு இனபமுறக கேடடல, கேடடவறறைச சிநதிததல, அவைகளில எவை யேனும குறறஙகுறைகள உளவாயின அவறறைக கண டறிதல, சொறகளின இயறகையான உசசரிபபை அறிநதுகொளளுதல முதலியவை அவவிசைநூறபயிறசியில அடஙகின காளடைவில வானசாஸதரம, பூகோளசாஸ்த்

ரம், இயற்கைத்தத்துவசாஸ்திரம் முதலிய கலைகளையும்
அறிந்து பிரசங்கவன்மையையும் பெறுவது அவர்கட்கு
அவசியமாயிற்று. இவையனைத்தையும் ஒருங்கே ஜனங்
களுக்குக் கற்பிப்பதற்குச் சிறந்த இசையாசிரியர்கள் முன்
வந்தார்கள். அவர்கள் மேற்கூறிய கலைகளிற் கைதேர்
ந்து, தமது சொல்வன்மையால் அவ்வறிவை மாணவர்க
குப் புகட்டிப் பிறருடன் வாதாடுவதில் வன்மைபெற்
றிருந்தனர். இவ்வாசிரியர்களை ஸோபிஸ்டஸ் (Sophists)
என்று ஜனங்கள் அழைத்தார்கள். ஸோபிஸ்டஸ் என்ப
தற்கு அறிவிற் சிறந்தோர் அல்லது ஞானிகள் என்பது
பொருள். இவர்கள் கல்விகேள்விகளிலும் கூரிய அறிவி
லும் மற்றெவரினுஞ் சிறப்புற்று விளங்கினராதலின், அவர்
கட்கு அப்பட்டம் நிலைத்துவிட்டது. சிறிதுகாலத்திற்குள்,
அச்சொல்லுக்கு வேறு இழிவான ஓர்பொருளை, பளே
டோ என்பவர் கற்பித்துவிட்டார். ஸோபிஸ்டஸ் என்ப
வர்கள் அக்காலத்தில் மிகுந்த ஊதியத்தைப் பெற்றுப்
பிறர்க்குக் கற்பித்துவந்ததனால், செல்வர்களே பெரும்
பான்மையாக அவர்களிடம் கற்றுவந்தனர். ஏழைகள்
அவர்களை அணுகுவதற்கும் இயலவில்லை. குருசிஷ்ய
முறையானது, தலைவன் தலைவியரின் நட்பையும், இணைபிரி
யாத இருநண்பரின் கேண்மையையும் ஒத்ததாகலின்,
பணத்திற்குப் போதிப்பது அத்துணைச் சிறப்புற்றதன்றென
வும், அவ்வாறு செய்யின் அவர்களிடம் பக்திவிசுவாசங்
கள் ஏற்படாவென்றும் ஸாக்ரடீஸ் கூறினர். இதனால்
அவர்களுக்கு அன்னோரிடம் மிக்க வெறுப்பு எழுந்தது.
இனி, பணம் பெற்றுப் படிப்பித்தற்காக, ஜனங்களும்
ஸோபிஸ்டஸ் என்பவர்களை வெறுத்தனரெனக் கூறுவது
முண்டு. அவர்கள் அவ்வண்ணம் பேராசைகொண்டு

பொருளீட்டினார்கள் என்பதை நிலைநிறுத்துவதற்குப் போதிய சான்றுகள் கிடையா. ஆயினும், பிளேட்டோ என்ற தத்வஞானி, அவர்களை ஞானமில்லாத பாஷண்டர்களென்றும், அறிவைக்கொண்டு வாணிபஞ்செய்யும் அறிவீனரென்றும் கூறியதனால், அரிஸ்டாட்டில் (Aristotle) முதலிய பிற்கால தத்துவ ஆசிரியர்களும் அவ்வாறே அவர்களை இழித்துப்பேசினார்கள். இது பிளேட்டோவின் குற்றத்தால் ஏற்பட்டதேயன்றி வேறன்று. பிளேட்டோ சிறந்த ஒரு தத்வஞானி, உண்மையைச் செவ்வனே நாடுபவர். ஸோபிஸ்ட்ஸ் என்பவர்களோ, தத்வ ஆராய்ச்சியை முற்றும் கைவிட்டு, காலத்திற்கேற்றபடி தமது சொந்தவேலைகளையும், நகரத்திற்குத் தாம் செய்யவேண்டிய கடமைகளையும் அதீனியர் தெளிந்துசெய்யுமாறு அவர்களுக்குப் போதித்து, அவர்களைத் தேசபக்தியிலும், நீதிநெறியிலும், சொல்வன்மையிலும் மேம்பட்டோரென யாவரும் மதிக்கும்படி செய்தார்கள். இவ்விதம் செய்ததற்குக் கைம்மாறாக, அவர்களின் மாணாக்கர்கள் மிகுந்த ஊதியத்தை அவர்களுக்கு அளித்துத் தமது நன்றியறிவைக் காட்டினர். ஆதலின், இவர்கள் பொருளாசைகொண்டு போதித்தார்களென்பது பிழையான அபிப்பிராயமாகும்.

அதீனியவாலிபர்களை இங்ஙனம் தமது நாட்டிற்கு ஊன்றுகோல்களாக்கி, ஆதனங்களைச் சிறக்கச்செய்த மேலோர்பேரில், அநியாயவழக்குக்களைச் சரியென்றே சாதிக்கவும், தீயவற்றை நல்லவைபோலத் தோற்றுவித்துக் கேட்போரைப் பலவிதஉபாயத்தால் ஏமாற்றி வயப்படுத்தவும், தமது சிஷ்யர்களுக்குக் கற்பித்தனர் என்ற அபவாதத்தைச் சுமத்துவது நியாயமாகுமா? ஆராயுங்கால், ஜனங்

சொற்சோர்வின்மையையும், பரசங்கசக்தியையும் பெற ஒவ்வொருவரும் முயலவேண்டும் என்றும், அவ்வாசிரியர் வற்புறுத்தினர். இக்கொள்கை ஸாக்ரடீஸுக்கும் உடன்பாடுதான். "தத்வசாஸ்திரிகளெல்லாம் பித்தேறியவர்கள், அவரது கொள்கைகள் ஒன்றற்கொன்று மாறுபாடுள்ளவை, அவரது ஆராய்ச்சி பயனற்றது, நிலைபெறாதது, மதக்கோட்பாட்டிற்கு மாறானது கடவுளால் விரிக்கப்படாத மறைபொருள்களை ஆய்ந்தறிவது கடவுளுக்கு அதிருப்தியைக் கொடுக்கும் இவ்வாராய்ச்சியிற் செலுத்தும் காலத்தை நல்வழியிற் செலுத்துவது உத்தமம்" என்பர் ஸாக்ரடீஸ்.

ஸோபிஸ்ட்ஸ் கூட்டத்தாரை, இவ்வாறு நாஸ்திகரென்று கருதியதோடமையாது, அதீனியவாலிபர்கட்குத் தீக்கொள்கைகளைக் கற்பித்து, அவர்மனத்தைக் கெடுத்துவிட்டாரென்ற அபவாதத்தையும் ஜனங்கள் அவர்தலைமேற் சுமத்தினார்கள் தீர நாடிப்பார்த்தால், அவர்களுக்குள் கொள்கையிலேனும், கற்பிக்கும் முறையிலேனும் ஒற்றுமை இல்லை ஊதியம்பெற்றுப் பலவிஷயங்களைப் பற்றி நினைக்கவும், பேசவும், பேசியதுபோல நடக்கவும், வாலிபர்களைப் பயிற்றி, நல்ல தேசாபிமானிகளாகச் செய்வதிலேதான் அவர்கள் ஒத்திருந்தார்கள் அவர்கள் கொண்ட கொள்கைகள் வேறு, சென்ற வழிகளும் வேறு; நோக்கியநோக்கங்களும் வேறு, ஆதலின், அதீனியவாலிபர்மனத்தை அவர் கெடுத்தாரென்று சொல்வது தகுதியன்று அம்மேன்மக்களின் உபதேசத்தால், குணத்திலும் ராஜாங்க நிர்வாகத்திலும், அதீனியவாலிபர்கள் மேம்பட்டு யாவராலும் நன்குமதிக்கப்பட்டார்கள். குடியரசு

அம்மேனமக்களால் நன்கு தழைத்தது. கேவலம் உரை யாடுவதைமட்டும் அவர் கற்பிக்கவில்லை, உரையின்வழி நின்று வேலைகளை ஊக்கிச்செய்யவும் அவர்வற்புறுத்தினர் தீயவழிகளில் வாலிபர்களைப் புகுவித்தால், நஷ்டம் அவ வாசிரியர்களுக்கன்றோ? அவ்விதம் புகுத்துவதை அறிந்த பெற்றோர் எவரேனும் தமது மக்களை அவரிடம் ஒப்பிப் பார்களா? ஆதன்ஸ்வாசிகள் அவரிடத்தில் வைத்த மதிப் பையும், செல்வம்படைத்த வாலிபர்கள் அவரிடம் கவிந் ததையும் நோக்கினால், ஸோபிஸ்டஸ் என்ற ஞானியாரின் சிறப்பும், ஆற்றலும், மேன்மையும், புலமையும் இனிதின் விளங்காநிற்கும் உட்பகைகொள்ளல், பிறனில்விழைதல், கள்ளுண்ணல், வெஃகல், வெகுளல், கயமை முதலிய கூடாவொழுக்கங்கள் கடவுட்குமுண்டென்று புராணங் கள் புகல்கின்ற கற்பித்தக்கதைகளை முதன்முதல் கண்டித் துக்கூறியவரும் இவரே ஜனங்கள் இவரை வெறுத்ததற்கு இதுவும் ஒருகாரணமாகும்

இதுகாறும், கிரீஸ்தேசத்திலும், அதன் திலகம் போல் விளங்கிய ஆதன்ஸ்நகரிலும் ஏற்பட்ட மனக் கிளர்ச்சியைப்பற்றிக் கூறினோம் ஜனங்களின் அறிவுப் பெருக்கிற்கேற்ப அவரது நூல்களும் தழைத்தோங்கின. இதிஹாச புராணநூல்களும்,செய்யுணூல்களும் எவ்வாறு தழைத்தோங்கினவோ, அவ்வாறே அவரது நாடக காவ யங்களும் நாகரிகத்திற்கேற்பத் திருத்தமடைந்து விளங் கலாயின. பிறர்கொள்கைகளை மறுத்துரைப்பதற்கும், பிறரை எள்ளனஞ்செய்வதற்கும், தமது கொள்கைகளைக் கல்விபயிலாத பலர்க்கும் தெரிவிப்பதற்கும், பிறரை நல் வழிப்படுத்துவதற்கும் நாடகஅரங்கம் அந்நாளில் சாதன

மாக ஏற்பட்டது. ஆதென்ஸ்நகரத்தில் அது அடைந்த பெருமையை உணர்ந்தாலன்றி, ஸாக்ரடீஸைப்பற்றி இனிக் கூறப்படும் விஷயங்கள் எளிதின் உணரப்படா வாதலின், அந்நாடகத்தின் வரலாற்றைப்பற்றி இனிக் கூறுவோம்.

## 5-ஆம் அதிகாரம்

## கிரீஸ்தேசத்து நாடக காவ்ய வரலாறு.

[கிரீஸ்தேசத்து நாடகவரலாறு—மதசம்பந்தமான விழாக்கள்—சேர்ந்துபாடுவது—ஒருவன் தனித்துப் பாடுவது—சரியான நாடகம்—துக்கமுடிவுகொண்ட நாடகம்—நாடகவரங்குச் செல்வது யாவர்க்கும் எளிதானது—அதைப்பார்த்துவந்த அதீனியரது மனவேறுபாடு—மங்கல (சுக) முடிவுகொண்ட நாடகம்—அது விளைத்த கேடு—நாடகம் நாடடைந்த மாறுபாட்டின் இடைநிலையை விளக்கியது]

பண்டைத் தமிழ்நூல்களெல்லாம் இயல், இசை நாடகமென்ற மூன்றுபாகுபாடுகளில் அடங்குகின்றன அதுபோலவே, ஸாக்ரடீஸ்காலத்தில், கிரீஸ்தேசத்தாரது நூல்களெல்லாம் அம்மூவகைப்பகுப்புக்களில் அடங்கின. கற்றோர்கள் அவற்றை மிகுந்த ஊக்கத்துடனும் விருப்பத்துடனும் பயின்றுவந்தார்கள் ஸாக்ரடீஸ்காலத்திற்கு முன் இத்தகைய பகுப்புகள் இல்லை இயலிசையிரண்டும் இசைந்தேவந்தன. தமிழர்களில் தெருக்கூத்தாடும்

வழக்கம இருபபதுபோல, அவாகளிடததிலும ஒருவிதக் கூதது இருநததேயனறி இககாலததிலுளளதுபோல நாடகம எனபது நடைபெறவிலலை அககூததுககளெலலாம திருவிழாககாலஙகளில நடிககபபடும கூததின கதைப் போககு, சுபமாக முடிவதிலலை புராண இதிஹாசஙகளிலிருநது கதைகள தோநதெடுககபபடும நாடககதாநாயகாகள தேவாகளும,புராணேதிஹாசகதாலவாகளுமாவா. அககூதது நடைபெறுஙகாலதது அதிறசோநதோரெலலோரும*கூடிப பாடுவாாகளேயனறி நடியாா பிறகு அப பாடடுடன ஒருவாகூறறுக நீணட† புலைநதுரையொனறு கூடடபபடடது பினனா, இருவா தமமுடன சமபாஷிபபதை அததுடன சோததாாகள முடிவில, முனகூறிய பாடடுடன மூனறுபாததிரஙகளகொணட ஒழுஙகான நாடகமாக இது மாறிவிடடது சோபோகளிஸ (Sophokles) எனற நாடகவாசிரியா ஒருவித ஹாஸயநாடகததையும (Satyrical) அததுடன சோததாா

இநநாடகததை அரஙகேறறுவதறகு வேணடிய செலவை, ஆதனஸ நகரவாசிகளாகிய பதினவேறுகூடடததாருள வகைககொருவராகத தெரிநதெடுககப கனவர்னகள, தததம கூடடககதைச சோநத ஆசிரியாககு அளிப பாாகள தறகாலததிலுளளதுபோல நாடகசாலையெனபது அனறேரிடம முதலில இலலை நமமவா அமைததுக கொளளும மேடைபோல, அவாகளும வேணடுமபோது மரககாலகளை ஊனறிச சாரததைக கடடி, அதனைப பலகையால வேயநது அமமேடையையே அரஙகமாகக கொணடு நடிததாாகள கி மு 500-ககுபபிறகு ஒரு

* Chorus † Monologue

முறை இவ்வாறு நாடகம் நடந்தேறியபோது, சாரம் முறிந்து விழவே, சிலஜனங்களுக்கு உயிர்ச்சேதமுண்டாயிற்று. இவ்வித அபாயங்கள் மீட்டும் நேராதவாறு சாச்வதமான ஓர் அரங்கம் கற்களால் அமைக்கப்பட்டது. ஸேர்க்ஸீஸ் (Xerxes) என்ற பாரசீக அரசன் கிரீஸின்மீது படையெடுத்தபோது, இக்களரி, பிறகட்டிடங்களோடு தகர்ப்புண்டது. அதீனியர் அப்பாரசீகமன்னனைப் புறமிட்டுத் தாக்கித் தமது நகரை மீட்டுக்கொண்டவுடன், அதைச் செவ்வனம் புதுப்பித்தார்கள். அப்போது நாடகவரங்கம் பன்மடங்கு பெரியதாகவும் அழகாகவும் கட்டப்பட்டது. 30000 ஜனங்கள் ஒருங்குகூடி ஆட்டத்தைக் கண்டு களிக்கும்படி அது அமைந்திருந்தது. பாரசீகரைப் புறங்கண்டதுமுதல் ஆதன்ஸ்நகரத்தின் செல்வாக்கு ஓங்கியதுபோலவே, அந்நகரத்தாருடைய நாகரிகமும் அவர்களுடைய நாடக காவியங்களும் நாளுக்குநாள் வருத்தியடைந்தன. துக்கமுடிவைக்கொண்ட நாடகம் அக்காலத்தில் முதன்முதல் கவின்பெற அமைக்கப்பட்டது. அவ்விதநாடகம் வரைவதில் முதன்மைப்பட்டம் பெறுவதற்காக நாடகவாசிரியர்க்குள் பெரும்போட்டி நிகழ்ந்தது. இதுபற்றி ஆண்டுதோறும் எண்ணிறந்த நாடகங்கள் எழுதப்பட்டன.

இந்நாடகங்கள் ஆடத்தொடங்கியதுமுதல் சிலகாலம் வரை வந்துபார்ப்பவரிடம் பணமொன்றும் வாங்கவில்லை. பிறகு உயர்ந்த நன்கமைந்த கட்டிடத்தில் இவை நடத்தப்பட்டபோது, ஆதன்ஸ்நகரம் பெரியதோர் ராஜ்யத்திற்குத் தலைநகராயிருந்தமையின் அயல்நாட்டார் (பரதேசிகள்) கூட்டமாக எப்போதும் நகரில் தங்கி, அந்நாடகங்

களைக் கண்டுகளித்து வியந்துவந்தனர். அதுபற்றி, ஆதன்ஸ் நகரவாசிகளுக்கு நாடகம்பார்க்க இடங்கிடைப்பது அரிதாகிவிட்டது. இதைத் தடுப்பதற்காகச் சிறிது பணம் வந்துபார்ப்போரிடம் வசூல்செய்யத் தீர்மானித்தார்கள். ஒவ்வொருவரும் இவ்வளவுதான் கொடுக்க வேண்டுமென்ற ஏற்பாடு முதலில் இல்லை. செல்வர்கள் அதிகப்பணங்கொடுத்து இடங்களை அமர்த்திக்கொண்டதனால், ஏழைகள் நாடகம்பார்ப்பதற்கு இடமில்லாமற் போயிற்று. இக்குறையை நீக்குவதற்கும் ஏழைகள் செல்வர் யாவரும் கண்டு களிப்பதற்கும், பெரிகிளிஸ் (Pericles) என்ற மகான் ஒருபாயந்தேடி, ஏழைகளிடத்தில் சிறிதுபணமும்,* தனவான்களிடத்தில் மும்மடங்குபணமும் வாங்கும்படி தீர்மானித்து, திருவிழா இரண்டுநாட்களிலும் தனவான் ஏழை யாவரும் நாடகத்தைக்கண்டு கழிபேருவகையெய்த நகரப்பொதுப்பணத்திலிருந்து அப்பணத்தைப் பெறவும் அவர் ஏற்பாடு செய்தார். பணத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் நாடகசாலைசென்று நடப்பனவற்றை நோக்கிக் களிகூரலாம். அன்றேல், அப்பணத்தை மிச்சப்படுத்தித் தமது சொந்தச் செலவுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளினும் கொள்ளலாம். இவ்விதமாக நகரத்தார் யாவரும் பார்த்துமகிழ்ச்சிபெற ஸௌகர்யம் ஏற்பட்டபோது, நல்லறிவும், மனோரம்யமும், நற்காட்சியிற் சுவையும் ஆதன்ஸ்வாசிகளிடத்தில் நாளுக்குநாள் வளர்பிறைபோல வளர்ந்துவந்தனவென்பது சொல்லாதேயமையும். துக்கமுடிவுகொண்ட நாடகங்களும், நாளடைவில், இயல்நூல்களினின்றும் வேறுபடுத்திப்

* One obolus (1½ d.) for the poor ond 3 oboli for the better.

பாராட்டப்பட்டு, நாடகநூல்களென்றே தனித்துப் போற்றப்பட்டன.

மங்கலமுடிவுகொண்ட நாடகம் (Comedies) இதற்குச் சிறிதுகாலத்திற்குப்பிறகே எழுந்தது நம்மவர்களுள் காமன்பண்டிகை என்ற விழா நடைபெறுவதை யாவரும் அறிவர். அவ்விழாநாளில், சிலவிடங்களில் விகாரமான பாட்டுக்கள் பாடப்படுகின்றன ஆண் பெண் என்ற வேற்றுமையை மறந்து ஜனங்கள் தகாத காரியங்களைத் தடையின்றிச் செய்கின்றார்கள் அதுபோலவே, ஆதென்ஸ் நகரில் ஒருவித திருவிழா கொண்டாடப்பட்டது. அது நடைபெறும்போது முற்றிலும் நிந்தனைக்கிடமாகும் தகாத காரியங்களை ஜனங்கள் கூசாது செய்துவந்தார்கள். இதை அடிப்படையாகக்கொண்டு மங்கல முடிவுற்ற நாடகங்கள் எழுதப்பட்டன புராணேதிஹாசங்களிலிருந்தும் அக்காலத்து மனிதர்களுள்ளும் நாடகத்திற்குத் தகுந்த பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்தார்கள் ராஜாங்க விஷயங்களில் ஜனங்களுக்குள் ஏற்பட்ட கட்சியானது நாடகம் வரைவதற்கு அநுகூலமாயிருந்தது நாடகவாசிரியர் அனேகர் கிளம்பி, மங்கலமுடிவுகொண்ட நாடகங்களை எழுதி ஜனங்களை மகிழ்வித்துவந்தார்கள் அவர்களில் முதன்மையாகக் கூறப்படுபவர் மாக்னீஸ் (Magnes,) க்ரேடீனிஸ் (Kratenes,) அரிஸ்டோபானஸ் முதலியோரே. க்ரேடீனிஸ் என்பவர் மங்கலவீற்று நாடகங்களை ஒருவாறு ஒழுங்குபடுத்தியதோடு, துக்கமுடிவுகொண்ட நாடகங்களை (Tragedies) ஜனங்கள் மதித்துக் கொண்டாடுவது போலவே இவற்றையும் மதிக்கும்படிசெய்தார் இம்மங்கல முடிவுகொண்ட நாடகங்களை வரைந்த ஆசிரியர், நகரப

பெரியோர்களைத் தங்கள் நாடகங்களில் பெயர்குறித்துப் பழித்துக்கூறி, கேட்போரெவரும் அவரை இகழ்ந்து பரிகசிக்கச்செய்தார்கள். பிறகு இவ்வாறு பெயர்குறித்துத் தூற்றுவது ஒழுக்கவிரோதமானதென்று தடுக்கப்பட்டதனால், சிறிதுகாலம் இந்நாடகங்கள் பழிமொழிகளின்றிப் பயின்றுவந்தன. அரிஸ்டோபானஸ் இளம்பியபின்னர், மங்கலமுடிவுகொண்ட நாடகங்கள், அவதூறு மொழிகள் நிரம்பப்பெற்று மனத்தாலும் நினைக்கலாகாத தாழ்ந்த நிலைமை அடைந்தன. கி பி 392-க்குமேல், இவ்வித அவதூறுமொழிகளை நாடகத்தில் அமைக்கக் கூடாதென்று அதிகாரிகள் தடைசெய்ததனால், விரைவில் அவை முற்றிலும் நீக்கப்பட்டன. மங்கலமுடிவுகொண்ட நாடகங்கள் பின்பு சீர்பெற்று விளங்கலாயின.

இவ்வாறு கொஞ்சகாலத்திற்குள்ளாக மங்கலமுடிவும், துக்கமுடிவுங்கொண்ட நாடகங்களை யாவரும் நோக்கிப் பெருமிதமடையத் நகரவதிகாரிகள் ஏற்பாடுசெய்ததனாலும், அதீனியர்களுக்கு அந்நாடகங்களில் கூறப்படும் திப்பியகற்பனைகளும், சிருங்காரரசங்களும், புதிய அபிப்ராய பேதங்களும் எளியவாகிவிட்டன. துக்கமுடிவு கொண்ட நாடகங்களிற் கண்ட வீரரசங்களும், சோகரசங்களும், கேட்போர்மனத்தைக் கவர்ந்து உருக்கின. மங்கலமுடிவுகொண்ட நாடகங்களோ, ஜனங்களுக்குப் பிறர்தூஷணையாற்பெறும் பிரியத்தையும், நகைப்பையும் தந்தன. அதீனியர்கள் இயல்பாகவே மிகப்பொறுமையுள்ளவர்கள், பிறர் தம்மைத் தூற்றினும் அதை ஒருபொருட்டாக மதியார். அவ்வாறிருந்தும், ஸாக்ரடீஸ்காலத்தில் நகரமேன்மக்களைப்பற்றிக் கர்ணகடூரமான மொழிகளை

வெளிப்படையாகக் கூறுவதையும், அதைக்கேட்டு ஜனங்கள் மகிழ்வதையும் நோக்கினால், மங்கலமுடிவுகொண்ட நாடகங்களால் நகரவாசிகள் அடைந்த தாழ்வான நிலைமை நன்கு விளங்கலாகும். அவ்விதநாடகங்களை நோக்கிய ஜனங்கள், அதீனியசிரேஷ்டர்களைப்பற்றி மாறான அபிப்பிராயங்களைக் கொண்டார்கள். இவ்வண்ணம் கருதப்பட்டவருள் ஸாக்ரடீஸும் ஒருவர்.

இன்னும் ஸோலன் (Solon)* என்ற மகானது காலத்தில் கேவலமாகக் கருதப்பட்ட நாடககாவியங்கள் ஒரு நூற்றாண்டிற்குள் இதிஹாசமுதலிய செய்யுணூல்களினும் சிறப்பாக மதிக்கப்பட்டன. கதை நிகழ்ச்சிகளைமட்டும் நாடகவாசிரியர் கூறிப்போகவில்லை. கதாநாயகர்கள் சந்தர்ப்பத்திற்கேற்பப் பிறரோடு தர்க்கிப்பதும், நீண்ட பிரசங்கங்களை அமையத்திற்கேற்றபடி இசைத்து ஆசிரியரது சொல்வன்மையைச் சோபிக்கச்செய்வதும், நாடகம் பார்ப்போரிடம் நியாய அநியாயங்கள் இவையென உணரும் உணர்ச்சிகளைப் பெருக்குவதும், நாடககாவியங்களின் லட்சணங்களெனக்கொண்டு, நாடகவாசிரியர் தமது நூல்களை இயற்றினர். அவர் எழுதிய நாடகங்களே, பின்னர் எழுந்த ப்ரசங்கநூல்களுக்கும், தர்க்கநூல்களுக்கும், தத்துவநூல்களுக்கும் ஆதாரமாயின.

* The celebrated Athenian Law giver and Statesman who lived from B C. 639-559.

## 6-ஆம் அதிகாரம்

## ஸாக்ரடீஸைப்பற்றிய அபவாதங்கள்.

[ஸாக்ரடீஸைப்பற்றிய தீய எண்ணங்கள்—அரிஸ்டோபானீஸ்—தன் அறியாமையால் அவன் ஸாக்ரடீஸுக்குச் செய்த தீமை—ஆர்கினூஸே போர்—தளகர்த்தர் எண்மரது விசாரணை—அச்சமயத்தில் ஸாக்ரடீஸ் காட்டிய உத்தமகுணங்கள்—லியோனும், ஸாக்ரடீஸும்.]

மேற்கூறிப்போந்தவாறு, ஆதன்ஸ் நகரில் உண்டான மனக்கிளர்ச்சியையும், அந்நகரின் மேன்மையையும், நகரத்தார்க்குள் எழுந்த கட்சியையும், நாடகக்காவியத்தின் வரலாற்றினையும், பலகட்சியார் தமது எதிரிகளைப் பங்கப்படுத்துவதற்கு நாடக அரங்கை உபயோகித்ததையும், இதை உற்றுநோக்கிய ஜனங்கள் நகரத்துச் சிறியோர்மேல் வீணாகக் கெட்டெண்ணங் கொண்டதையும் நன்றாக அறிந்தோர்க்கு, அரிஸ்டோபானீஸ் செய்கை வியப்பாகத் தோன்றாது. அரிஸ்டோபானீஸ் என்பார், புதிய அக்கிளர்ச்சியை மனதார வெறுத்ததோடு, அது தீயவொழுக்கத்திற்கும் தேவதூஷணைக்கும் இடந்தருமென்றும் கருதினர்.

தம் முன்னோர்களுடைய சிறந்த ஒழுக்கங்களையும், அவர்தம் வீரச்செயல்களையும், மறுவார்த்தைக் கூறாது இட்ட கட்டளையை அவர் தலைமேற்கொண்டு இனிதினியற்றியதையும், அரிஸ்டோபானீஸ் நினைந்து நினைந்து, இவை இப்போது இல்லாயினவேயென்று இரங்கி, ஸோபிஸ்டஸ்

என்ற புதியகொள்கையாளராகக் கண்டித்தற்காகவே அவர் தமது நாடகத்தை (The Clouds) எழுதினார். ஸாக்ரடீஸை எல்லோரும் அறிவர். அவரது விகாரமான தோற்றமும், பருத்த தலையும், தட்டைமூக்கும், வெருண்ட பார்வையும், வெறியன்போன்ற முகமும், வழுக்கைத்தலையும், இழிந்த உடையும், தளர்ந்த நடையும், கண்டோர்க்கு நகைப்பை விளைத்தனவாதலின், அவரை நாடகபாத்திரராக அமைத்துத்தம் நாடகத்தைவரைந்தனர். மற்றவர் கொள்கைகளைக் கண்டித்ததுபோலவே, ஸாக்ரடீஸ் தமவாழ் நாள்முழுவதும் புதிதாகக் கிளம்பின இந்த ஞானியாரின (ஸோபிஸ்டஸ்) கொள்கைகளையும் கண்டித்துப்பேசினர் என்பதை அரிஸ்டோபானஸ் சிறிதும் கவனிக்கவில்லை. ஸாக்ரடீஸ் முன்னோர்கொள்கைகளை ஒப்புக்கொள்ள வில்லையென்பதைமட்டும் போதுமெனக்கொண்டு, நாடகத்திற்குத் தகுந்த பாத்திரமானதனால் அவர்தலையில் பெரிய பழிமொழிகளைச் சுமத்தி, அவரைப் பலவாறு சிறுமைப்படுத்தினர். அந்நாடகத்தில், ஸாக்ரடீஸ் ஒரு சாமான்ய சந்யாசியாக வந்து, கேட்டோர் நகைக்கும்படி இயற்கைத் தத்வசாஸ்த்ரத்தைப்பற்றி உளறுவதாகக்கூறி யிருக்கிறது. இன்னும், உலகரக்ஷகனென்று கிரீஸ்தேசத்தாரால் மேன்மையாகக் கொண்டாடப்பெற்ற தெய்வமாகிய ஸீயஸ் (Zeus) க்குப் பதிலாக, வாயு (air), ஆகாயம் (Ether), மேகம் (Clouds), வாக்கு (Tongue) முதலிய வேறுதெய்வங்களைப் புதிதாகத்தோன்றிய இப்பண்டிதர்கள் கொண்டாடுகிறார்களெனவும், ஆதலின் அவரனைவரும் நாஸ்திகரெனவும் ஜனங்கள் கருதுதற்கேதுவாக ஸாக்ரடீஸ்நடித்தாரெனக்கூறியிருப்பதோடு, தனிசுகொண்டோர் தமது கடனைக்கொடாது பிறரை ஏமாற்றவும், மகன் தகப்

பனை அடிக்கவும், தாயை அடிப்பேனென்று பயமுறுத்தவும், தகப்பன் மகனை அடிப்பதுபோலவே மகன் தகப்பனை அடிக்கவுந் தகுதியுண்டெனச் சமாதானமுரைக்கவும் இவர் கற்பித்ததாகவும் அந்நாடகத்தில் வரையப்பட்டுள்ளது. நாடக முடிவில், கடவுளை வேண்டுமென்றே பழித்ததாகவும் ஸாக்ரடீஸ் குற்றஞ்சாட்டப்படுகிறார். ஆனால் இக்கத்தாக்கு இயற்கைத்தத்வஞானிகளின்மேல் மதக்கொள்கைக்காரணமாக நல்ல அபிப்ராயம் இல்லை. அவரை நாஸ்திகரென்றே கருதினார்கள். ஸோபிஸ்டஸ் என்று அழைக்கப்பட்டவர்களை ஒழுக்கக்காரணமாக ஜனங்கள் வெறுத்தார்கள். இவர்கள் ஆதனஸ்வாஸிகளை நலவழிப்படுத்தாமற் கெடுப்பவரெனவும், பொய்யை மெய்போல் தோற்றுவிக்க வல்லவரெனவும், பிறரையும் தம்போற் போலியறிவினராக்க எண்ணியவர்களெனவுங் கருதப்பட்டனர். இயற்கைத்தத்வஞானிகள் ஸோபிஸ்ட்ஸ் அல்லர். ஸோபிஸ்டஸ் இயற்கைத்தத்வஞானிகளல்லர். இவ்விரு திறத்தார்க்கும் ஸாக்ரடீஸுக்கும் தொடர்பு ஒருசிறிதுமில்லை. ஆயினும், அரிஸ்டோபானஸ் இவ்விருதிறத்தினர் கொள்கைகளையும் ஸாக்ரடீஸ்மேல் ஏற்றி, ஒருபெரிய அபராதத்தைக் கட்டிக்கொண்டார். அரிஸ்டோபானஸ் கற்பித்ததெல்லாம் எண்ணவுங்கூடாத கொடிய அபவாதம். இவ்வபவாதமே ஸாக்ரடீஸின் அந்தியகாலம்வரை அநியாயமாய் நிலைத்துவிட்டது. ஸாக்ரடீஸ் ஜனசபையோர்முன், பின்னால் குற்றஞ்சாட்டப்பட்டபோது, பிற்கூறிய அபவாதங்களைத்தான் அவர் மறுத்துரைக்கவேண்டியதாயிருந்தது. அவையாவன:—

'ஸாக்ரடீஸ் மிகவும் தீயவர். கடவுளால் விதிக்கப்படாத மறைபொருள்களைத் தானறிவது இவருக்கு

எப்போதும் பொழுதுபோக்காகவுள்ளது இவர் கெட்டதை நல்லதுபோல நாட்டவல்லவர், பிறர்க்கும் இவ்வித்தையைப் போதிக்கிறார்' என்பன.

இந்நாடகத்தால் கி.மு 423-க்குமுன்னமே, ஸாக்ரடீஸ் பலகற்றோரும் யாமென்று தற்புகழ்ந்து காலமுற்றவர்களைக் கேள்விகளால் மடக்கி, அவரறியாமையை அவர்க்குப் புலப்படுத்தி, யாவரினும் மேன்மையாக விளங்கினரென்ற உண்மை அறியக்கிடக்கின்றது. இந்நாடகம் வரையப்பட்டபோது ஸாக்ரடீஸுக்கு வயது 46. இதற்கு அடுத்த வருஷத்தில் அவர் ஆம்பிபாலிஸ (Amphipolis) என்ற இடத்து நடந்த போரில் கண்டோர் வியக்குமாறு கடும்போர் புரிந்தனரென்பதை முன்னம் கூறினோம்.

இச்சண்டைக்குப்பிறகு 16-வருஷகாலமாக ஸாக்ரடீஸ் இன்னசெய்தாரென்பது யாதொன்றும் நமக்குப் புலப்படவில்லை. இதன்மேல் இவரைப்பற்றிய விவரங்கள் இவர்மூலமாகவே வெளியாகின்றன. அவை இவரது அஞ்சாமை, மனோதிடம் முதலிய குணங்களைக் குறிப்பதோடு, ஜனசபையோரது கோபமும், செல்வர்கள் இடும் கொலைத்தண்டனையும் அவரைத் தீயவழியில் ஒழுகச்செய்யவல்லனவல்ல என்பதையும் தெரிவிக்கின்றன. கி.மு 406-இல் அதீனியரின் கப்பற்படை ஆர்கினுஸே (Arginusae) என்னுமிடத்தில் பகைவரைப் (Lacedaemonians) புறமிட்டுத் தாக்கிய போர் முடிந்தவுடன், தளகர்த்தர்கள் சிலகாரணங்களினால் இறந்தவர்களின் உடல்களைக் கொணரத் தவறினார்கள் காயத்தால் குற்றுயிராய்க்கிடந்தவர்களை

யும் காப்பாற்ற அவர் வழிதேடவில்லை. இதைக் கேட்ட ஆதென்ஸ்வாசிகள் கடுங்கோபமுற்றனர். கிரேக்கர்க்குள் உத்தரக்கிரியை முக்கியமான கடமைகளுள் ஒன்று ஆகலின், தண்ணீருக்கிரையாகும்படி விடப்பட்ட நேசர்களையும் உறவினர்களையும் நினைந்து அநேகர் பெரிதுந் துக்கித்தனர். இதற்குக் காரணமாயிருந்த தளகர்த்தர் * அறுவரையும் ஜனங்கள் உடனே வரவழைத்து, ஜனசபையோர் முன்பாக அவர்மீது குற்றஞ்சாட்டினார்கள். தளகர்த்தரும் தம்மீது பிழை யாதொன்றுமில்லையெனவும், தாங்கள் கீழுத்தியோகஸ்தர்களை அவ்விதம் செய்யும்படி ஏவினதாகவும், அத்தருணம் புயல்வீசி எண்ணிய வண்ணம் நிறைவேற்றத் தடுத்துவிட்டதெனவும் சொன்னார்கள். அதனால் விசாரணை தள்ளிவைக்கப்பட்டதுடன், தளகர்த்தர்கள் உயர்சபையோரால் (Senate) விசாரிக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. குறித்தபடி உயர்சபையார் விசாரியாமல், 'ஜனசபையோரே நேரில் உபயவாதிகளின் கட்சிகளைக் கேட்டிருப்பதனால், அவர்களை இன்னும் தீரவிசாரித்துத் தளகர்த்தர்மீது குற்றமில்லையெனக் கண்டால் அவரை ஒருங்கே விடுதலைசெய்ய வேண்டும், அவர் குற்றவாளிகளென்று தெரிந்தால் அவரை ஒருங்கே தண்டித்தல்வேண்டும்' என்று முடிவு செய்தார்கள். இவ்விதமுடிவு மிகவும் பிழையானது. குற்றவாளிகளில் ஒவ்வொருவரும் தனித்தனியே விசாரிக்கப்படவேண்டுமென்பதும் தனித்தனியே தண்டனைபெற வேண்டுமென்பதும் அதீனியரது நியாயமுறை.

இச்சமயத்தில், ஸாக்ரடீஸ் உயர்சபையில் ஓர் அங்

* எண்மரெனவும் கூறுவர் சிலர்.

கத்தினராக இருந்தனர். இந்த ஒரு உத்யோகந்தான் இவர் தமது ஆயுளிற் பார்த்தது இச்சபைக்கு 500-அங்கத்தினர் உண்டு பத்துவகைக்கூட்டத்தாருள் அடங்கிய அதீனியர்க்குள், கூட்டத்திற்கு 50-பெயராக இச்சபைக்கு அங்கத்தினர்களை நியமிப்பது வழக்கம் இந்த ஐந்நூற்றுவரும், ஒருவருஷத்திற்கு வேலையை வகிக்கக்கடமைப்பட்டவர்கள் ஒவ்வொருகூட்டத்தாரையும் சேர்ந்த ஐம்பதின்மரும், எழுநாளைக்குப் பத்துப்பெயராக அடுத்தடுத்து 35-நாளைக்குக் காரியநிர்வாகஞ்செய்வார்கள். ஜனசபைமுன் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு தீர்மானமும், சட்டப்படி இருக்கிறதாவென்று சில உத்யோகஸ்தர்கள் (Proedri) சோதித்துப் பார்ப்பார்கள் அவசியமில்லாதவற்றைத் தள்ளிவிடுவார்கள். இவ்வுத்யோகஸ்தரிலொருவர், ஒருநாளைக்கு உபாசபையிலும் ஜனசபையிலும் அக்ராசனம்வகிப்பர் சபையோரபிப்ராயத்தை வினவுவது இவ்வுத்யோகஸ்தரின் கடமையாகும் 'தளகர்த்தர் அறுவரும் ஒருங்கே தண்டிக்கப்படவேண்டும், அன்றேல், விடுதலைசெய்யப்படவேண்டும்' என்ற தீர்மானம் எடுத்துரைக்கப்பட்டபோது, ஸாக்ரடீஸ் அக்ராசனம்வகித்தார் இவ்விதமுடிவே சட்டத்திற்கு விரோதமானதென்பது தெளிவாயினும், தளகர்த்தர்கள் இரக்கங்கெட்ட கொடியவரென ஜனங்கள் விளக்க நினைத்து, தாங்கொண்ட கோபங்காரணமாக அத்தீர்மானத்தில் அதிகப்பற்றுவைத்தார்கள் ஸாக்ரடீஸ்மட்டும் அதற்கிடங்கொடுக்கவில்லை. நியாயவிரோதமென்று தாம் உணர்ந்த தீர்மானத்தைச் சபையோரின் அங்கீகாரத்திற்கு விடுவது தகுதியன்றெனப் பிடிவாதமாகச் சொல்லிவிட்டார் அதைக் கேட்ட ஜனங்கள் வெகுளிபொங்கி, அவரை வேலையைவிட்டு நீக்கிவிடுவதாக

வெருட்டினார்கள், சிறைசெய்வதாக அச்சுறுத்தினார்கள்; கடிந்து கோபித்தார்கள். குணமென்னுங் குன்றேறிநின்ற ஸாக்ரடீஸ், சிறையிலிருப்பதற்கும், உயிர்துறப்பதற்கும் எள்ளளவும் அஞ்சவில்லை, ஒன்றிற்கும் அசையாமல் சத்தியத்திலேயே நின்றார்.

நியாயநெறியில் நிற்பதால் தாம் எக்கேடுறினும், அதைத் தைரியமாக ஏற்றுக்கொள்வது தம் கடமையென்றும், ஏனையோரின் அநியாயவழிகளுக்குத் தாம் உள்ளாவது சரியன்றென்றுஞ் சொல்லிவிட்டார் இவர். அதிகாரமெல்லாம் மேற்சொன்னபடி ஒருநாளளவேயாகும். தீர்மானம் மறுநாள் தள்ளிவைக்கப்பட்டது. அன்று வேறொருவர் அக்ராசனம் வகித்தார், தளகர்த்தர்களும் தூக்குண்டிறந்தனர். இந்நிகழ்ச்சியின் ஈராண்டிற்குப்பிறகு ஸாக்ரடீஸ் தம் மனவுறுதியை மற்றும் ஓர்தடவை காண்பித்தார். கி.மு. 404-இல் பகைவர்கள் (Lacedaemonians) ஆதென்ஸ் நகரைப் பிடித்துக் கோட்டைமதிலைத் தகர்த்து விட்டனர். ஆதென்ஸ் நகரத்தாரது குடியரசு தொலைந்து போயிற்று. அதற்கு பதிலாக முப்பதுசெல்வர்களது அரசாட்சி நிறுவப்பட்டது (Oligarchy of Thirty). இதுவும் ஓராண்டளவேனும் நிலைக்கவில்லை. மறுபடியும் குடியரசு ஏற்பட்டது. ஆனால், நாட்டிற்கு மட்டும் க்ஷேமம் ஏற்படவில்லை. அப்பொழுது அதிகாரம் வகித்திருந்தோரிற் சிலர் தம் விரோதிகளைக் காரணமின்றிக் கொலைபுரிந்தனர். பல பெரியோர்கள் அவர்கையால் மடிந்தனர். எங்கெங்கும் கொலையாளிகள் நிரம்பினார்கள். கொலைத்தொழில் நகரில் மலிந்துகிடந்தது. இத்தருணத்தில் அதிகாரிகள் ஸாக்ரடீஸையும் மற்றும் நால்வரையும் அழைத்து, நீவிர் ஸலாமின்

34533

(Salamis) சென்று எமது கையினின்றும் தப்பியோடிய லியோன் (Leou) என்பானைப் பிடித்து இங்குக் கொலை புரியக் கொணர்மின் எனப் பணித்தார்கள். மற்ற நால்வரும் தங்களுயிர்க்கு அபாயம் வருமென்று அஞ்சி, ஸலாமிஸ் நகரக்கேகி, லியோனைக் கட்டிக்கொணர்ந்தனர். ஸாக்ரடீஸோ, அதிகாரிகள் கட்டளையைச் சிறிதும் மதித்திலர், அதனால் விளையும் அபாயத்தையும் ஓர்ந்திலர், கவலையின்றித் தமதில்லஞ்சென்றார். அவர் இறப்பதற்கு ஒரு சிறிதும் அஞ்சவில்லையென்பதைச் ஜனசபையோர்முன்பு தம் வாய்மொழிகளால் வெளியிட்டபடி இந்தத் தம் செய்கையாலுங் குறித்தாரென்பது, இதனால் நன்கு வெளியாகின்றதன்றோ? இதற்கு முன்னமே அதிகாரிகள் செய்த கொலைகளைப்பற்றித் தூஷித்துப் பேசினதற்காக, அவர்கள் ஸாக்ரடீஸை அழைத்து, இனி நீர் சிறுவர்களோடு முன்போலவே சம்பாஷித்தால் உயிரிழக்கவேண்டிவருமென்று சூசிப்பித்தார்கள். இதனால் அதிகாரிகள் ஸாக்ரடீஸ்மேல் வைத்திருந்த வைரமானது நன்கு புலப்படுகின்றது.

இவ்வண்ணம் ஸாக்ரடீஸது நீண்டகாலங் கழிந்தது. நகரில் இவருக்கு விரோதிகள் பலர் இருந்தாலும், அவருள் ஒருவரேனும் ஒருமுறையேனும் நியாயசபைமுன்பாக அவர்மீது குற்றஞ்சாட்டாததனால், அவரது சீரும், சிறப்பும், ஒழுக்கமும் நன்றாக வெளியாகின்றன. அதீனியர் செய்யவேண்டிய கடமைகளையும் தெய்வவழிபாடுகளையும் இவர் ஒழுங்காகச்செய்துவந்ததனால், இவரது பெருமையும் தேசபக்தியும் தெய்வபக்தியும் யாவர்க்கும் நன்கு புலனாகலாம்.

# 7-ஆம் அதிகாரம்

## மூன்று சிறந்த அதிசயங்கள்.

[ஸாக்ரடீஸிடம் தனிப்படக் காணப்படும் அம்சங்கள்—பிறரோடு பகிரங்கமாய் ஸம்பாஷித்தல்—கடவுள் தம்மை ஒரு உத்தேசத்துடன் அனுப்பினாரென்று எண்ணியது—அசரீரி—டெல்பியில் கேட்ட குறி—அறிவுடையோரென அகந்தைகொண்டோரைச் சோதித்தல்—அசரீரியைப்பற்றிய ஆராய்ச்சி—முகமது—ஜோன் என்ற பிரெஞ்சு மாது]

ஸாக்ரடீஸிடத்தில் சிறப்பான மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன. நாம் அவற்றை அறிந்துகொள்வது அத்யாவசியமானது. அவை அவரது நிகரற்ற தகைமையை நன்கு தெரிவிக்கின்றன. அவை வருமாறு:—

1. வறுமையில் திருப்தியும் செம்மையுங்கொண்டு தமது வாழ்நாள் முழுவதையும் பகிரங்கமாகப் பிறருடன் சம்பாஷிப்பதில் போக்கினது.

2. ஏதோ ஒரு காரியத்தை உத்தேசித்துக் கடவுள் தன்னைப் படைத்தாரென்றும், அதைப் பல குறிகளால் அவர் தமக்கு வெளிப்படுத்தினாரென்றும், நிழல்போல் தன்னை நீங்காது தொடர்ந்து அசரீரியாகத் தம்பக்கல் நின்று தீயவற்றைச் செய்யவிடாது கடவுள் தம்மை விலக்கினாரென்றும் அவர் நம்பியது.

3. ஸாக்ரடீஸின் ஒப்புயர்வற்ற முதிர்ந்த நுண்ணிய அறிவு, அவர் சம்பாஷித்த விஷயங்கள்; சம்பாஷித்த வழிகள், அவ்வழிகளால் எதையும் ஆய்ந்தறியும்படி பிறரை அவர் தூண்டியது முதலியன.

மேற்கூறிய மூன்று முக்கியாம்சங்களும் ஸாக்ரடீஸிடம் பாலுடன் கலந்த நீர்போலச் சேர்ந்துள்ளனவாயினும், ஸாக்ரடீஸுக்கும் அவர்க்கு முன்னும்பின்னுமுள்ள தத்வஞானிகளுக்கும் வேற்றுமை பெரிதும் உள்ளமை பற்றி, அம்மூன்று அம்சங்களையும் தனித்தனியே எடுத்துச் சிறிது புகல்வது ஏற்புடைத்தாகும்.

முதலாவது—ஸாக்ரடீஸ் வறியரெனவும், தமது குலவித்தையில் தேர்ச்சியடைந்து சிறிது பொருளீட்டிக் காலங் கழித்துவந்தாரெனவும், வறுமையிற் செம்மைபூண்டு குடும்பவிசாரமின்றிப் பற்றற்ற மனத்துடன் வினைபுரிந்து வந்தாரெனவும் முன்னாகக் கூறினோம். ஸாக்ரடீஸ் சிற்பத் தொழிலை விட்டுப் பிறருடன் சம்பாஷிப்பதையே தமக்குப் பொழுதுபோக்காகக் கைக்கொண்டது எப்போது என்பதை ஊகித்தறிய இடமில்லை. இவரது மத்ய அந்த்ய காலங்களில் தமது சொந்தவேலைகளைச் சற்றுங் கவனிக்காமல், குடும்பரக்ஷணைக்கான ஊதியத்தையும் தேடாமல், பிறருக்குப் போதிப்பதில் தமது வாழ்நாளைக் கழித்து வந்தாரென்பதுமட்டும் வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆயினும், கி. மு. 423-இல் அரிஸ்டோபானஸ் இவரை நாடகத்தலைவராக அமைத்து, புதிதாகக் கிளம்பிய கூட்டத்தாரை இகழ்ச்சிசெய்திருப்பதனால், அவ்வருஷத்திற்கு முன்பே இவரை நகரத்தாரியாவரும் அறிந்திருந்தாரென்பதுவெள்ளிடைமலை. ஸாக்ரடீஸைத் “தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்” என்று கூறுவது புகழ்ச்சியாகாது. அவர் பிறருடன் சம்பாஷிப்பதைத் தமது கடமையாக எண்ணினார். அவராயுள்முழுவதும் தம்மையும் பிறரையும் பரீக்ஷிப்பதிற் கழிந்தது. பிறரைக் கேள்விகளால்

மடக்குவதில் அவர் மிகவும் வல்லவர், எவரையும் கேள்வி
கள் கேட்பார், கேட்போர் இருந்தால் எவருடனும் பேசு
வார். அவர் வாழ்சனைக்கும் சம்பாஷணைக்கும் ஒளிமறை
வென்பதேயில்லை. சிறியோர் பெரியோர், செல்வர் வறி
யர் யாவராயினும் தம்மை விஞ்சினாலும், தம் தருக்கில்
நின்றாலும் அவருடன் சம்பாஷிப்பார். ஒரு சமயம் அல்கி
பியாடிஸ (Alcibiades) ஜயார்ஜியஸ் (Georgias) ப்ரோ
டோகோரஸ (Protogorus) முதலிய நிபுணர்களுடன் உரை
யாடுவார், மற்றொரு சமயம் சாதாரணமான கூலியாட்களு
டனும், வாலிபர்களுடனும், படைவீரர்களுடனும் பேசு
வார், காலைப்போதில் ஜனங்கள் உலாவிச் செல்லுமிடங்
களிலும், தேகப்பயிற்சிச்சாலையிலும், கலவிச்சாலையிலும்
அவரைக் காணலாகும். சந்தைகூடி நெருக்கமாயிருக்கும்
போது, அவரும் அங்கு வந்து உலாவித்திரிவார். ஜனங்கள்
எங்கெங்கே கூடுவார்களோ, அவ்வவ்விடங்களில் அவர்
வராமற்போகார். அவர் ஆதென்ஸ் நகர்க்குப் புறத்தில்
போவதேயில்லை. "நான் அறிவை நாடுபவன், நகரில் மனித
ரிடம் ஏதேனும் நான் அறிந்துகொள்ளலாம். வயல்களும்
மரங்களும் எனக்கு ஒன்றுங் கற்பியா" என்று அவர்
சொல்லுவார். நகரிலுள்ள ஆண் பெண் மக்களுள் சிறந்
தோரைக் கண்டு வாதாடுவதில் அவருக்குப் ப்ரீதியதிகம்.
அவருடைய சம்பாஷணை நூதனவழியாகவும், கேட்ப
தற்கு இனிமையாகவும், கேட்போர் மனத்தைக் கவரவல்ல
தாகவும் இருந்தமையால், பலர் அவரை இடைவிடாது
தொடர்ந்து, அவரது சம்பாஷணைகளைக் கேட்டு மகிழ்ந்து
வந்தனர். இவ்வாறு அவரை நேசித்துக் கொண்டாடிவந்
தோரை ஸாக்ரடீஸது சீடர்களென்று சொல்லுவது வழக்
கம். ஸாக்ரடீஸ் யாதொரு நூலுமெழுதவில்லை, நிலையாகக்

கொள்கையொன்றையும் சித்தாந்தஞ்செய்யவுமில்லை, இவரைத் தமது குருவென்று ஒருவர் கொள்ளவுமில்லை. ஆயினும், இவரது புகழைக் கேள்வியுற்று மெகாரா (Megara), த்ரேஸ் (Thrace) முதலிய வேற்றுநகரங்களிலிருந்தும் வந்து இவரது முதுமையில் இவருடன் பழகினோர் பலராவர். கைம்மாறுவேண்டாது ஸாக்ரடீஸைப்போலப் பலருடன் உரையாடித் தம் அறிவைப் பெருக்கினோர் க்ரீஸ் தேசத்தில் எவருமேயில்லையெனக் கூசாது கூறலாம். அவரை அறியாதவர்கள் க்ரீஸ்தேசத்தில் ஒருவரும் இல்லையாயினும், அவரது பேச்சைக் கேட்டு மகிழ்ந்து அவரைக் கொண்டாடினோர் சிலரே. பலரோ அவரது கேள்விகளால் மடக்கப்பட்டு, அவர்க்குக் கொடிய விரோதிகளாயினர். அக்காரணம்பற்றியே அரிஸ்டோபானஸ் (Aristophaues) முதலியோர் கூறிய தூஷணைகளெல்லாம் பெரும்பாலும் நம்பப்பட்டு விரைவில் நிலைபெற்றன.

இரண்டாவது —இனி, ஸாக்ரடீஸைப்பற்றிய மற்றொருவிசேஷத்தைக் கவனிப்போம். தம்மைக் கடவுள் ஒருவகைநோக்கத்துடன் படைத்தாரென்று அவர் மனப்பூர்வமாக நம்பினார். தாம் யாதேனுமொரு தீயகாரியத்தைச் செய்யப்புகின், தெய்வம் அசரீரியாக நின்று தம்மை அவ்விதஞ் செய்யவொட்டாது தமது குழந்தைப்பருவமுதல் தடைசெய்துவந்ததாகவும் அவர் கூறிவந்தார். மறுவார்த்தைமொழியாது அத்தடைக்குக் கட்டுப்பட்டு வாளாவிருந்துவிடுவார் ஸாக்ரடீஸ். இவ்விநோதநிகழ்ச்சியை அவர் வெளிப்படையாகப் பிறர்க்குக் கூறிவந்ததனால், அவரது நண்பரும் பகைவரும் இதை நன்குக அறிந்திருந்தனர். அவரை எவ்விதவுத்தியோகத்தையும் வகிக்க

வொட்டாமல் தடைசெய்ததும் அவ்வசரீரிதான். நியாய சபையோர்முன் பின்னால் இவர்மேற் குற்றஞ்சாட்டப் பட்டபோது, அவர் கூறவேண்டிய எதிர்வாதத்தைப்பற்றி ஒருசிறிதும் சிந்திக்கவொட்டாமற்செய்ததும் அவ்வசரீ ரியே. விசாரணைக்காலத்தில் சபையோர்முன் பேசுகை யில், அவ்வசரீரி தம்மைத் தடைசெய்யாததால், தாம் எடுத்துப்பேசிய வழியே சரியானதென்று அவர் எண்ணிக் கொண்டார். இவற்றையறிந்த அவர்நண்பரிற் பலர் ஸாக்ர டீஸை நன்கு மதித்துக் கொண்டாடினர். அவரது எதிரி களும் ஏனைய ஆதன்ஸ்வாசிகளும் அசரீரியைப்பற்றிய கூற்றுக்களை நம்பாது, தெய்வத்தை அவர் அவதூறுசெய் தாரெனவும், வேறு புதிய தெய்வங்களை வழிபடுவந்தா ரெனவும் கருதினார்கள். இவை விபரீதவுணர்ச்சிகளென்ப தற்கு ஐயஞ்சிறிதுமில்லை. இளமைப்பருவந்தொட்டு அவ்வ சரீரிவாக்கை அவர் கேட்டுவந்ததாகக் கூறிவருவதனால், அவ்வசரீரிக்கும் அவரது தத்துவங்களுக்கும் தொடர்பு யாதொன்றுமில்லை.

அசரீரிமூலமாகவன்றி, குறி, கனவு முதலிய பலவழிகளாலும் கடவுள் தமக்குக் கட்டளையிட்டிருப் பதாக ஸாக்ரடீஸ் கூறிவந்தார். இதற்குச் சான்றாக டெல்பி (Delphi) என்ற ஊரிலுள்ள பூசாரிப்பெண் கூறிய குறியை முக்கியமாய் அவர் எடுத்துப்புகல்வர். அக்குறி யாதெனில், ஸாக்ரடீஸின் நட்பினராகிய கேரீபான் என்பவர் (Char-rephon) அப்பூசாரிப்பெண்ணிடஞ் சென்று, 'ஸாக்ரடீஸி னும் புத்திமான்கள் க்ரீஸ்தேசத்திலுள்ளாரோ? எனக் குறிகேட்க, 'ஒருவருமில்லை' என அவள் பகர்ந்திட்டாள் என்பது. இதனைச் செவியுற்ற ஸாக்ரடீஸ் திகைப்படைந்து

ஓரணுவும பொய்கூறுள அவவுததமியாதலின, அததெய் வவாககின்உணமையைப பரீடசிககவெணணி, யாவராலும அறிவுடையோரென மதிககபபெறற ஓரதிகாரியைக கணடு சமபாஷிததபோது, தாம எதிரபாாததபடி அவா அறிவாளராக இருககககணடிலா பினனா, அவரது அறிவீனததை ஸாகரடீஸ எடுததுககாடடியபோதும, அவா அதை உணாககூடவில்லை இதனுல ஸாகரடீஸுககுக குறியினது உணமை அஙகையிற கனியென சஙகையறத தெரிநதது. அதாவது, ஜனஙகள பெருமபாலாா தமமை அறிவுடையோரென அவமே நினைபபதனுல, தமது அஞஞானததைத தாமே உ ாாநதிலா, பிறா எடுததுககாடடியபோதும அதை உணாத தகுதியறறவராயினா ஸாகரடீஸோ, அவவாறு தமமை மதிககாமையால தமஅஞஞானததை நனகுணாநதாா ஆகலின, ஸாகரடீஸ யாவரினும புததிமானுகிவிடடாா தமமைத தாம அறியவேணடுமெனபது பணடைப பெரியோரின அரிய கொளகையனறே?

இவவாறே, ஸாக்ரடீஸ எதிரபபட்டோராயாவரையும விஞவிப பரீடசிததுக குறியினதுணமையைக கணகூடாகக கண்டறிந்தார் இககுறிசொல ஒருதூணடுகோல போலாகி, அக்காலததுக கலவியின சிறுமையை வெளிபபடுத்தவும, மெயஞஞானததைச சாஸ்தரோகதமாக நிறுவவும அவர்ககுச செயவனே உதவியது. குறி கனவு முதலியவற்றுல கடவுள் தமக்கிடட கடடளைபபடி மனிதரைப பரீட்சிப்பது அவச்யமெனவும, அவவாறுசெயயத தவறினுல கடவுளுககுத தாம அபராதஞசெய்வதாகுமெனவும வெளிப்படையாகப பனமுறையும அவா கூறினா கலவிச் செருக்கால தமமை யாவரினும சிறநதோரென மதிதது

அகந்தைகொண்டோரைப் பலவினாக்களை வினவி, ஒன்றுமறியாத மூடரென நிரூபிக்கும் ஸாக்ரடீஸை அவ்வகங்காரிகள்தாம் மதிப்பாரோ? பலபேர்கள் அவரை வெறுத்தாரென்ச் சொல்லவேண்டுவது அவசியமில்லை. சில மதியீனர் அவரை அடித்துத் தொந்தரையுஞ் செய்தனர், பன்முறை மானக்கேடும்செய்து அவரைப் பரிகசித்தனர்.

## 8-ஆம் அதிகாரம்

## தெய்வக்குறி

[ஸாக்ரடீஸ் அறிவாற்றலின் சிறப்பு—அவர் கற்ற முறை—ஞானிகளின் உபதேசம்—ப்ளேட்டோவின் கருத்து—நீதிவிஷயங்கள் சாஸ்திரோக்தமாக ஆராயத்தகுந்தவை என (ஸாக்ரடீஸ்) காட்டியது—ஸாக்ரடீஸ் தர்க்கவழி—யூதிடீமஸ், யூதிபிரான்—அவர்போதனையை ஒட்டி எழுந்த சித்தாந்தங்கள்]

இனி, இத்தெய்வக்குறியைப்பற்றிச் சிறிது புகல்வோம். இதைக்குறித்துப் பலபேர்கள் பலவாறாகக் கூறுகின்றனர். அது அசரீரிபோன்ற ஓர் அரிய வாக்கென்றும், 'இன்னது செய்யத்தகுந்தது, இன்னது செய்யத்தகாதது' என்று வியக்தமாக ஸாக்ரடீஸுக்கு அது அறிவித்ததென்றும் ஸெனொபான் கூறுகிறார். யாதேனும் ஒழுக்கவிரோதமான காரியத்தை அவர் செய்யப்புகின், அது அவரைத் தடைசெய்ததேயன்றி, நற்கருமமொன்றைச் செய்யும்படி அவரைத் தூண்டவேயில்லையென ப்ளேட்டோ

உரைததுப்போயினா மதயகாலதது கரீஸதத்வசாஸதிரி
களெலலாரும அவவசரீரிவாககு, பேய, பிசாசு, சாததன
முதலியவைபோனற குடடிதெதயவஙகளால நிகழநத
தென று நினைததாாகள சமீபகாலததிலவிளஙகிய மேன
மககள பலா, அது அசரீரியுமனறு, குடடிசசாததனு
மனறு, அவரது மனசசாட்சியே அவவிதபபகுததறிவை
அவாககுப புகடடியது' எனறனா இவவிதம ஒவவொரு
வரும தததம மனததிறகுத தோனறியவாறு காரணஙக
ளைககறபிததுககொணடாரேயனறி, அதன உணமையை
நாடியறிவது எவாககுங கூடாததாயிறறு அதெதயவிகக
குறி தமககே சிறபபாக அமைநதுளளதெனவும, யாதே
னும ஒருகருமததைச செயயபபுகும மககளின மனததிற
பொதுவாக எழுகினற நயாய அநயாயவுணாசசிகடகும
அதறகும தொடாபு சிறிதுமிலலையெனவும ஸாகரடீஸே
பலமுறை புகனறுளளாா பின நிகழவனவறறை முன
னமே அவாககுத தெரிவிபபதறகு ஓா சிறநத கருவியாக
அது எ ற ப ட ட து குறி, ஆருடம முதலியவைகளை
ஸாக்ரடீஸ நமபினாாதலின, பின விளைவனவறறைத
தெரிநது எசசரிததுக கூறும தமது அறபுதசகதியைத
தெய்வததினது அருளவாககெனறு கொணடாரெனப
புகலவது எறபுடைததாகும தம மனததை வயபபடுததிய
விழுமியோா மெயமமறநது யோசனையில மூழகுவது சாவ
சாதாரணமானதனறே? அததருணஙகளில தம்மைத
தூண்டிச சிலகாாயஙகளைச் செய்யச செபபும அசரீரி
வாககை அனேகா பனமுறை கேடடதாகக கூறுவா.
இததகைய மகானகள முறகாலததில எததனையோபோ
கள இருநதனா தறகாலததிலும் அவவிதமகாபுருஷா
களும ஸதிரீகளும இலலாமற்போகவிலலை இதறகு உதார
ணங காடடுதும.

முகம்மது என்ற மகாபுருஷர் குழந்தைப்பிராய முதல் ஆலோசனைப்பிரியர். பாலியத்தில் மற்றைப் பிள்ளைகளோடு விளையாடுவதை அவர் தவிர்த்து, ஏகாந்தமான இடங்களில் தனித்துத் திரிவதிலும், தாம் எண்ணிய எண்ணங்களில் ஆழ்ந்து கிடப்பதிலும் அவரது மனம் ஊக்கிச் சென்றது. இங்ஙனம் இவரது இளமை கழிந்ததுபோலவே, காளைப்பருவமும் பலபெரியவிஷயங்களைப்பற்றித்தீரவிசாரிப்பதில் புகுந்து கழிந்தது. தம் மனத்தைத் தாமே உசாவினால், எத்துணைப்பெரிய தடைகளுக்கும் விடை மனதில் உதயமாகுமென்பது அவரது கொள்கையாதலின், மத விஷயங்களில் தம் மனதில் எழுந்த பல ஆசங்கைகளை நீக்கும்பொருட்டு, மலையுச்சியில் தனித்து வீற்றிருந்து நெடுநேரம்வரை ஆலோசனையில் ஆழ்ந்திருப்பார். அப்போது காலச்செலவை அவர் அறியார். இவ்வண்ணம் மெய்ம்மறந்து பரவசமாக இருக்குந்தருணத்தில், ஒரு நூதன மதத்தைச் சித்தாந்தஞ்செய்யும்படி கடவுள் அசரீரிவாக்கால் தம்மைத் தூண்டினதாகவும், பன்முறையும் அவ்வாக்கைச் செவியுற்றதனால், கடவுளின் கட்டளையை மறுத்தற்கஞ்சித் தமது மதத்தை (இஸ்லாமதம்) ஸ்தாபித்ததாகவும், பின்னர்த் தம்மை மதியாது வருத்தித் தம்முயிரையுங் கவரவெண்ணிய பகைஞர்களைப் பின்வாங்காது முடுக்கி மாய்க்கவும் கடவுள் ஏவியதனால், அங்ஙனமே பகையைக் களைந்து தம் மதத்தை நாடெங்கும் பரப்பியதாகவும் அத்தீர்க்கதரிசி கூறினார்.

இதுபோலவே, இவர்க்குப்பிற்காலத்திலிருந்த ஜோன் (Joan) என்ற பிரான்ஸ் தேசத்துப் பெண்மணியொருத்தி தான் பன்முறை தேவதூதனுடைய வாக்கைக் கேட்ட

தாக்கக் கூறினர். அவள் வசித்தகாலத்தில் ப்ரான்ஸ் (France) தேசத்தாருக்கும் ஆங்கிலேயருக்கும் நீராப்போர் நடந்துவந்தது. பதினோராம் நூற்றாண்டின் இடையில் ப்ரான்ஸைச்சார்ந்த நார்மண்டி (Normandy) மாகாணத்து ப்ரபுக்கள் இங்கிலண்டைக் கைப்பற்றி ஆண்டுவந்தனர். அவருடைய ஆட்சி இங்கிலண்டில் திடப்பட்டுச் சின்னாளில் ப்ரான்ஸ்தேசத்துத் தென்பாலுள்ள பிறமாகாணங்களிலும் பரவியது. ஆயினும், ப்ரெஞ்சுக்காரருடைய ஒற்றுமை தேசாபிமானம் முதலிய பலகாரணங்களால் ஆங்கிலவாட்சி பின் குறைந்துகொண்டேவந்தது. போர்ச் சுவை கொழுகிய சில ஆங்கில முடிமன்னர்கள் ப்ரான்ஸ்தேசத்தில் தம் முன்னோரால் ஆளப்பட்டுப் பின்னர் நழுவிய மாகாணங்களைக் கைப்பற்றப் பெருமுயற்சிசெய்துவந்தார்கள். இன்னம் ஏற்பட்ட போர் 126 வருஷங்கள் (1327 முதல் 1453வரை) நடந்தாயினும், தொடர்ச்சியாக நடைபெறவில்லை. இப்போரைச் சரித்ராசிரியர் சதவருஷப்போரென்று (The Hundred Year'sWar) குறிப்பார்கள். முதலில் ப்ரான்ஸ்தேசத்தில் ஒற்றுமை குன்றியிருந்ததனால், அதன் வடபாகங்களில் ஆங்கிலேயரின் ஆட்சி சிறிது காலம் நிலைத்தது. மத்திய தென்பாகங்களையும் கைப்பற்று வதற்கு அவர் பெருமுயற்சிசெய்துவந்தனர். இம்முயற்சி பயன்பெறாதபடி செய்ய ப்ரான்ஸ்தேசத்தார் எடுத்துக் கொண்ட கஷ்டத்திற்கு அளவில்லை. ஆனால், கஷ்டத்திற்குத் தகுந்தவாறு பலன் கிடைக்கவில்லை. ஆங்கிலேயரைப் பொருது ஓட்டமுடியாமல், அவர்களுக்குத் தோல்வியே பலமுறையும் சம்பவித்தது. நாட்டின்மீது பக்திமேலிட்ட ஜனங்களில் ஒவ்வொருவரும் ஆற்றத்துயரடைந்து மனம் புழுங்கினர். நாடு இவ்வாறு ஈனநிலையுற்றுச் சின்னபின்

னப்பட்டுத் தளர்வுற்ற காலத்தில், நாட்டை உயர்நிலையடைவித்து உய்விக்கும்பொருட்டு ஜோன் என்ற நங்கையொருத்தி அத்தேசத்தின் ஒரு குக்கிராமத்தில் 1412-இல் அவதரித்தாள். அவள் சிறுவயதுமுதல் நற்குணமும், நன்னெறித்திறம்பா வன்மையும், இன்சொல்லும், தெய்வபக்தியும் வாய்க்கப்பெற்று, பிணியாளர்க்கு அருள்சுரந்து, இரவலரை இனிதிற் பேணித் தன்னாலியன்ற உதவியை யாவர்க்கும் தயையுடன் புரிந்துவந்தாள். இவ்வண்ணம் துன்புற்ற உயிர்களிடம் அன்புற்றுவந்த மங்கைக்கு நாடடைந்த அலங்கோலம் எட்டவே, அவளும் துயருள் மூழ்கி, இறைவனை இடைவிடாது தொழுதேத்தித் தன் நாட்டை நற்கதியடையும்படிசெய்ய வேண்டினள். அவள் வயது 13 அடையவே, கடவுளின் அருள்வாக்கு அவளது காதுக்கு எட்டி, மனத்துக்கும் களிப்பை ஊட்டிற்று. இதற்குமேல் அவள் தனது ஆட்டுக்கிடையை மேய்த்துக் கொண்டிருக்கும்போது, தன் நாடடைந்த நிலைமையையும், நாட்டார்க்கு நேர்ந்த கொடுமைகளையும் நினைந்து நினைந்து பரிதபிக்குங்காலெல்லாம் அவ்வருள்வாக்கை அவள் கேட்பாள். சிலசமயங்களில் தேவதூதனை நேரில் தரிசித்து, மெய்சிலிர்த்துக் கண்ணீர் ததும்புவள். இத் தெய்வவாக்கைக் கேட்கும் தருணமும், கோவிலில் மணியடிக்கும் தருணமும் ஒத்திருக்கும். அச்சமயங்களில், 'ப்ரான்ஸ்தேசம் மேனிலையுறும், நீயே அந்நிலையை அடைவிப்பாய்' என்று அத்தெய்வவாக்குத் தோன்றும். இதைக்கேட்டு அவள் மனம் பூரிப்பாள்.

இவட்கு வயது ஆக ஆக, தெய்வக்காட்சியும் அடிக்கடி இவளுக்குக் கிடைத்தது. இத்தெய்வவாக்குக் கூறிய

படி இவள் நடக்கவேண்டியவளாதலால், இந்நிகழ்ச்சிகளை வெளியிடாது சும்மா இருக்கும்படி அது சொன்னது. அவள் அவ்வாறே இருந்துவிட்டாள். அவளது 17-வது ஆண்டில், தனது ஊரை நீக்கி நாட்டின் தண்டநாயகரொருவனிடஞ் சென்று, அவன்மூலமாக அரசகுமாரனைக் கண்டு, அவனைத் தேற்றிச் சேனையுடன் சென்று ஆங்கிலேயரைப் பொருதோட்டி வடபாகங்களைக் கைப்பற்றி, அரசகுமாரனுக்கும் முடிசூட்டிவருமாறு, அத்தெய்வவாக்கு அவளை ஏவிற்று. அவளும் உடனே அவ்விதஞ் செய்யத் துணிந்து, தண்டத்தலைவனிடஞ் செல்லவே, அவன் இவளது இளமையையும் உறுதிப்பாட்டையும் கண்ணுற்று, மங்கைக்குப் பித்தேறியதென்று பரிகசித்துப் புறம்பே போக்கினன். ஜோன் முன்னிலும் மும்மடி ஊக்கங்கொண்டு, தெய்வம் தனக்கிட்ட கட்டளையை யாவர்க்கும் எடுத்துரைத்து, தன்னையன்றி வேறெவரும் நாட்டைக் காப்பாற்ற வல்லரல்லரென்பதை வற்புறுத்தினள். இதற்கேற்ப, இதற்குள் பின்னும் பாரன்ஸ்சேனை தோல்வியுற்றது. கடைசியாக, சேனைத்தலைவனுக்கு இவளது வார்த்தைகளில் சிறிது நம்பிக்கை பிறந்தது, சில ராணுவத்தலைவருடன் இவளை அரசனிடம் அனுப்பினன். அரசனும் இவளது மொழிகளை முதலில் நம்பாமல் இவளுக்குப் பேட்டிகொடுக்கச் சம்மதிக்கவில்லை. பிறகு தன்னுடைய முக்யவுத்தியோகஸ்தரது வேண்டுகோட்கிரங்கி, முன்றுறுபோகன்க்டுவில் அரசசின்னம் யாதுமணியாது சபாமண்டபத்தில் வீற்றிருந்து ஜோனை வரவழைக்க, அவள் அரசகுமாரனை எளிதில் உணர்ந்து, அவனிடம் தனக்குக் கடவுளிட்ட பணியைக் கூசாது கூறினள். அரச

குமாரனும அவளது வாாததையின உண்மையை அறிய விருமபி, அவளுககு வெளளைககவசமும, கரிய கொய் யுளைபபுரவியும ஈநது, போருககெழுநதனன ஜோனுங் கடவுளிட்ட கட்டளைபபடி கொடியொனறை அமைததுக் கொணடு, ஓரிடததில புதைக்கபபட்டிருபபதாகக கட வுள கூறிய கூரவகததியைக கொணாசசெயது, கைக கொணடு, யுததககோலமபூணடு, சேனைபினவர, வாததிய முழககங, கொடிகள துவளச சென்றுள இவளது வீரத தையும, தேசபக்தியையும, சாநதகுணததையும கண்ட வீரரனைவருககும மனககிளாசசியுண்டாயிற்று சததுருககள. மனநடுககமுறறுப பினனிடைநதனா புறபபட்ட நானகு தினஙகளுககுள அபபெணமணி சததுருககளை முறியடித்து, வடபால ஆஙகிலா முறறிய கோட்டைகளை மீட்டு, அரச குமாரனையும அவனது மூதாதைகள முடிசூடிய இடத திறகு அழைததுசசெனறு, அவனுககு முடிசூட்டி, தேவ னது கட்டளையை இனிதின நிறைவேறறினாள தேவனது கட்டளைபபடி தான ஒருவருஷமே இனனும உலகில் இருககவேணடுபவளாதலால, தனமூலமாக வேணடிய நனமைகளை நாடு பெறுவதறகான நனமுயறசிகளைத தேடுமபடி அரசனை வேணடிககொணடாள அவனும அவவாறே பலநகரஙகளையும ஜோனது உதவியால மீண் டும கைபபறறிககொணடான கடைசியாக,ஜோன ஆங்கி லேயாகையில சிககிககொணடாள அவாகள இவளை மாயககாரியென மதிததுக் கடுஞசிறையில இருததவே, கடவுளின ஆஜ்ஞைககு விரோதமாக அவள தபபியோட முயனறதனால், அவளை ஆஙகிலேயா இரககமினறி இருப் புததூணிற கட்டிச் சுறறிலும நனியெரி மூட்டி அவளைக் கடுகக கொனறனா.

ஸாக்ரடீஸ் கேட்ட அருள்வாக்கும் இம்மாதிரி எழுந்திருந்தல்வேண்டுமென்பார் சிலர். சிந்தனையிலே ஆழ்ந்து உலகத்தை முற்றும் மறந்திருப்பது ஸாக்ரடீஸுக்கு வழக்கந்தான். ஒருமுறை அவர் யுத்தரங்கத்திற்குச் சென்றிருந்தபோது, அதிகாலையில் குணதிசையை நோக்கி ஏதோவொன்றைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தார். நின்றவிடத்தை விட்டு மறுநாட்காலைவரை அவர் அசையவேயில்லை. பரிதி உதித்தவுடன் அவரது நிஷ்டை கலைந்தது. அருக்கனை வணங்கித் துதித்து அவ்விடம்விட்டுப் பெயர்ந்து ஸாக்ரடீஸும் அகன்றார்.

இவ்வாறன்றி, தம்காலத்து ஜனங்கள் மூடத்தனமாக ஆருடங்களில் முழுநம்பிக்கை வைத்துவந்ததனால், தமது மனத்தைத் திருப்பி நல்வழிப்படுத்த நினைத்தே, தம்மிடமும் அவ்விதசக்தி இருப்பதுபோல ஸாக்ரடீஸ் பாசாங்குசெய்தாரெனச் சில அறிவாளர் கூறுவர்.

இங்ஙனம் ஸாக்ரடீஸ் நம்பிய தெய்வக்குறியைப் பற்றிப் பலவாறு கூறுவதெல்லாம் உண்மையின்பாற் படுக; அன்றி, படாதொழியின் ஒழிக; ஏதோவோர் அபூர்வ சக்தி அவரிடம் இருந்ததென்பதும், நியாய அந்நியாய உணர்ச்சி அவரிடம் சிறந்து காணப்பட்டதென்பதும் ஒப்பமுடிந்தவை.

## 9-ஆம் அதிகாரம்

## கூரிய அறிவு.

[நீதிவிஷயங்களில் அவர் கொண்ட கருத்து—அறிவே தர்மம்—இக்கொள்கையின் குறைபாடு—அவர் அவ்வாறு கொண்டதற்கு நியாயங்கள்—தொழில்களோடுள்ள ஒற்றுமை—ராஜாங்க விஷயத்தைப் பற்றி அவர் கொண்ட கொள்கைகள்]

மூன்றாவது விசேஷமாக ஸாக்ரடீஸின் கூரிய அறிவைச் செப்புவோம். முற்கூறிய இரண்டு முக்கியாம்சங்களுக்கும் இதுவே அடிப்படையாக உள்ளது. தமது அறிவின் முதிர்ச்சியால் அவர் ஜனங்களைப் புதியதோர் வழியிற் புகுத்தினார். தமது ஆராய்ச்சிக்காக அவர் எடுத்துக் கொண்ட விஷயம் புதியது, அவர் காட்டிய வழியும் புதியது, அவர் கையாண்ட கொள்கையும் புதியது.

ஆதிகாலத்துள்ள தத்வசாஸ்திரிகள் உலகத்தோற்றம், பரம்பொருளின் தன்மை முதலியவற்றை நாடியறிய முயன்றதோடு, வானசாஸ்திரம், ரேகாகணிதம், இயற்கை சாஸ்திரம் முதலிய பலகலைகளையும் ஒருங்கே கற்றுவந்தார்கள். பின்னாளில் இயற்கைசாஸ்திரத்தைச் செவ்வனே நுணுகி ஆய்ந்த மதிவல்லோர், பலவகையான கொள்கைகளைத் தத்தமக்குத் தோன்றியவாறு கற்பித்துவந்தனர். ஸோபிஸ்டஸ் என்ற ஞானிகள் இயற்கைநுட்பங்களை நோக்கியறிவதை முற்றிலும் நீக்கி, கணிதம், வானசாஸ்திரம், ரேகாகணிதம் ஆகிய மூன்றையும் தனித்தனியே பிள்ளைகளுக்குக் கற்பித்துவந்தனர். ஸாக்ரடீஸ்காலத்தில் இம்மூன்றும் தனிசாஸ்திரங்களாகப் பாராட்டப்பட்டதனால், அம்மூன்றையும் ஸாக்ரடீஸ் கற்றுத்தேர்ந்தார். வாலிபத்தில் ஆக்கேலஸ் (Archau!us) என்ற பண்டிதரு

டன் ஆதென்ஸ் நகரிலிருந்து ஸாமாஸ் (Samos) நகருக்கு ஒரு முறை ஸாக்ரடீஸ் சென்றதாக அறியப்படுவதனால், அம் மஹானிடத்தில் இயற்கைசாஸ்திரத்தின் நுட்பங்களை அவர் கற்றதாகக் கொள்ளலாம். பிறகு இவர், ஸீனோ (Zeno) என்பவரிடம் எதிர்மறைமுகத்தால் சமபாஷிக்குந் திறமை தெரிந்துகொண்டார். அக்காலத்தார் உணர்ந்தவரை இவருக்குத் தத்வசாஸ்திரத்திலும் நல்ல பயிற்சி உண்டு. இவர் எதற்கும் சான்றுகள் தேடுபவராதலின், இயற்கைநுட்பங்களை ஆராய்வதைச் சிலபோதில் கைவிட்டு, மனிதர் சாதாரணமாகக் கையாளுகிற நீதிவிஷயங்கள், கடமைகள் முதலியவற்றை ஆராய்ச்சி செய்து, அவற்றின் உண்மைகளைக் கண்டறியத்தலைப்பட்டார்.

ஸாக்ரடீஸ்காலத்திற்குமுன் விளங்கிய ஸோபிஸ்டஸ் என்ற ஞானிகளும் நீதிவிஷயங்களையும் ராஜாங்கவிஷயங்களையும் ஜனங்கட்குப் போதித்துள்ளாராயினும், அவரது கொள்கைகள் ஒருவரையறையில் அடங்காமையின், அவை சாஸ்த்ரோக்தமாக நிறுவப்பட்டனவல்ல. அக்காலமனிதர்கள் கண்மூடித்தனமாயப் பெரும்பாலும் நம்பியவைகளை அந்த ஞானிகள் மெய்ப்பொருளெனக் கருதிவந்தனர். பாமர ஜனங்கள் ஒப்புக்கொண்டவைகளெல்லாம் ஒழுக்கத்திற்சிறந்தவையாகா என்பதை அவர் ஒருசிறிதும் உணரக்கூடவில்லை. அவ்வாறு உணர்ந்த சிலபெரியோர்களும் அவற்றைத் திருத்த முயற்சிசெய்யவில்லை. அவர் தமது சிஷ்யர்களை ராஜாங்கவ்யவஹாரங்களிலும், ஜனசாரம் கூட்டுறவு முதலிய இதரவிஷயங்களிலும் தேர்ச்சிபெறச் செய்வதிலேயே மனம் ஊன்றியவராதலின், தாம் கற்பிக்குங்

கொள்கையிலுள்ள குணத்தையும் குற்றத்தையும் நாடியறிய ஆசையேனும் அவகாசமேனும் அவர்கட்கில்லை; “பொருளாசை மேலிட்ட (ஸோபிஸ்ட்ஸ்) ஞானிகள் ஸாதாரணஜனசம்மதமான கொள்கைகளை ஞானமாக்கத் திறந்த துணையாகுமெனக் கடைப்பிடித்து, பிறர்க்கும் அவற்றைக் கற்பிக்கின்றார்கள். இவ்வாறு அவர்கள் செய்வது, அரிமா வரிமா முதலிய வனவிலங்குகளுடன் பழகி, அவற்றின் விருப்பு வெறுப்புக்களைக் கண்டறிந்து, பயமின்றி எப்போது அவைகளிடம் நெருங்கலாம், எவ்விதத் தொனி அவைகளுக்குக் கோபத்தை மூட்டுகிறது, எவ்விதம் அவைகளைச் சாந்தப்படுத்தலாம், அவைகளிடம் சப்தத்தால் அறியப்படுவன யாவை முதலிய விவரங்களைத் தெரிந்துகொண்ட ஒருவன் தான் கற்றவைகளை முறைப்படுத்திப் பிறகு அவ்விலங்குகளை வயப்படுத்தும் வித்தையைக் கற்பித்தலை ஒக்கும். மிருகங்களுக்கு உவப்பானதைச் சரியானதென்றும், அவை வெறுத்ததைச் சரியானதன்றென்றும் சிறிதேனும் பகுத்தறியாது அவன் சாதிப்பதுபோலவே இந்த ஞானிகளும் பலதலை விலங்காகிய ஜனசமூகத்தின் மனநிலையை நன்றாக உணர்ந்துகொண்டு, அதற்கேற்றவாறு கொள்கைகளைத் திரித்து, அவற்றையே நற்போதமெனச் சாதிக்கின்றார்கள். தமது கூற்றை நிலைநிறுத்த அவர் கூறும் நியாயங்கள் மிகவும் இழிவானவையாதலின், அவரை முழுமூடரெனப் புகல்வதற்கு வேறு சான்றுகள் வேண்டா’’’ என இக்கூட்டத்தாரைக் கண்டித்துப் பிளேட்டோ என்பார் வரைந்துள்ளார்.

இவ்வாறு நீதிவிஷயங்களை, ராஜாங்கவிஷயங்கள் முதலியவை ஒருவரையறையின்றி, தலைதடுமாறி நடைபெற்ற காலத்தில், ஸாக்ரடீஸ் தோன்றித் தமது நுண்ணிய அறிவாற்றலால் அவற்றைச் சீர்பெற ஆராய்ந்து, அவற்றைப் பற்றிய உண்மைஞானத்தைப் பலரும் அறியும்வண்ணம் பரப்பினார். ஸோபிஸ்டஸ் என்ற ஞானிகளைப்போலவே, அவர், தத்வவாராய்ச்சியை முற்றத்துறந்து, நீதியியல் அரசியல் விஷயங்களை ஆராய்ச்சிக்குச் சிறந்தவையென எடுத்துக்கொண்டார் 'மக்களை உணர்வது மக்களின் கடமை' என்பதை முதன்முதல் தெரிந்து வெளியிட்டவர் இவரே.

அவர் நூதனமாகக் கண்டுபிடித்தது இதுதான். இதைக் கொண்டாடின சிசரோவென்ற (Cicero) ரோமாபுரிநிபுணர், 'தத்வசாஸ்த்ரத்தை விண்ணுலகினின்றும் மண்ணுலகிற்குக் கொணர்ந்தார் ஸாக்ரடீஸ்' என்று அவரைப் புகழ்ந்துள்ளார். சாஸ்த்ரோக்தமாக அத்தாட்சி கண்டறியப்படுவனவற்றிற்கும், மதாபிமானம்பற்றி மூடபக்தியால் முடியப்படுவனவற்றிற்கும் முதன்முதல் வேற்றுமையை விளக்கினவரும் ஸாக்ரடீஸ்தாம். சாஸ்த்ரம் விட்ட எல்லையை மதசித்தாந்தம் தொடுகிறதென்பதை யாவரும் அறிவார்கள். இங்ஙனம் ஆராய்ச்சிக்குரியவல்லவென விலக்கப்பட்ட விஷயங்களுக்குப் பதிலாக ஏராளமான புதிய விஷயங்கள் அவரால் ஆராய்ச்சிக்குக் கொணரப்பட்டன. பக்தியென்பது என்ன? பக்தியின்மையென்பது என்ன? மேன்மை இழிவு என்றால் என்னே? நியாயம் அநியாயம் என்பன யாவை? தைரியம் அல்லது பயம் என்பது யாது? நகரமென்பது எது? நகரவாசிகளுக்குரிய குணம் எது? மனிதர் மேலதிகாரஞ் செலுத்துவதென்ப

தற்குப் பொருள் யாது? அவ்வதிகாரத்தைச் செலுத்துபவர்க்கு வேண்டிய முக்கிய குணகுணங்கள் எவை? இவை போன்ற கேள்விகளை ஆராய்ந்து அவர் மிகுந்த இன்பமும் பயனும் பெற்றார். இவற்றைச் சீர்பெற உணர்ந்தோரை உயர்ந்தோரென்றும், அங்ஙனம் உணராதோரை அடிமையினும் இழிந்தோரென்றும் அவர் மதித்தார்.

இப்பொதுச்சொற்களின் உண்மைப்பொருளை அறிய மாட்டாத அநேகர், அந்நாளில் அவைகளை வழக்கில் உபயோகித்துவந்தார்கள். 'உலகில் எது நியாயமானது? எது அநியாயமானது? சத்தியமானதெது? அசத்தியமானதெது?' என்பவற்றைத் துணிந்து கூறுவதற்கு யாதொருவழியும் இல்லை. ஒவ்வொன்றும் அவரவர்களுக்குத் தோன்றுகிறபடியே அமையும் என்று ஞானியர் (ஸோபிஸ்ட்ஸ்) கூறிவந்தார்கள். இக்கொள்கையை ஸாக்ரடீஸ் அறவே மறுத்து, ஒவ்வொருவனுடைய எண்ணம் வேறுபட்டாலும் யாவையும் உற்றுநோக்கினால் பொதுவபிப்ராயம் என்பதொன்று அவைகளில் இருப்பதை ஊகித்தறியலாமென்றும், இவ்வபிப்ராயத்தைக்கொண்டு மேற்கூறிய மொழிகளுக்கு மெய்ப்பொருளைக் கற்பித்தல்கூடுமென்றும், ஒவ்வொருவரும் இப்பொதுவுணர்ச்சியை இயற்கையில் அடைந்துள்ளாரென்றும், அவ்வுணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டுமாயின் அவரைப் பலகேள்விகள்கேட்டு மடக்கிச் சிந்திக்கச்செய்யவேண்டுமென்றும், இவ்விதம் பலபெயர்களால் வெளிவந்த அபிப்ராயங்களை ஒன்றுசேர்த்து உற்றுநோக்கிப் பொதுவான அம்சங்களைத் தெரிந்தெடுத்தால், அச்சொற்களின் உண்மைப்பொருள் முடிவில் விளங்காநிற்குமென்றும் கூறினார். இவ்விதஞ் செய்வதால்

பொதுச்சொற்களின் மெய்ப்பொருள் தெளிவாவதோடு, அவையிற்றில் அடங்குகிற சிறப்புச்சொற்களும் யாவை யெனத் தோன்றுகிறதும் அதாவது, ஒன்றுட் பலவற்றை யும், பலவற்றுள் ஒன்றையும் நாம் காணலாம்

இவ்வழியே ஸாக்ரடீஸ் புதிதாக ஏற்படுத்தினது. அந்நாளிற் பலபேர்கள் யாவராலும் நன்கு மதிக்கப்பட் டுச் சிறந்துவிளங்கியதனால், அனேகர் பேரகங்காரிகளா யினார்; தாமறியாதது ஒன்றுமில்லையென எண்ணினார்கள். அவர்களை ஸாக்ரடீஸ் நியாயமென்றாலென்ன முதலிய பல கேள்விகள் கேட்பார். உடனே அவர்கள் தடையின்றி விடைகூறுவார்கள் அவர்கள் கூறிய பொருளிலுள்ள குறைவை ஸாக்ரடீஸ் எடுத்துக்காட்டினால், அவர்கள் அதைச் சற்று மாற்றிக்கூறுவார்கள் மறுபடியும் அப் பொருளின் சிறப்பின்மையை ஸாக்ரடீஸ் எடுத்தோது வார் திரும்பவும் அவர்கள் அதன் பொருளைச் சிறிது மாற்றியுரைப்பார்கள் இவ்விதமாகப் பலமுறை கேள்வி கள்கேட்டு மடக்கி, அவர்களது அஞ்ஞானத்தை வெளிப் படுத்தி, அவர்களைச் சிந்திக்கச்செய்து, அவர்களது அகந் தையை ஒடுக்கிவிடுவார் ஸாக்ரடீஸ் இவ்வண்ணம் சுற்று வழிகளால் ஒருமொழியின் பொருளைத் தொடைவிடை மூலங்கண்டறிவதை ஸாக்ரடீஸ்வழி (Socratic Method) யென்று உரைப்பர் மேலோர் * இவ்வழி அவராலேயே சிறப்பாக எடுத்தாளப்பட்டது அவர்க்கு முன்னுள்ளோர் இந்தவழியை அறியார் அவர்க்குப் பின்வந்தவர்களுள் பளேட்டோவைத்தவிர வேறெவரும் அதை விசேஷமாகக் கையாளவில்லை

* இதனை இந்நூலின் ஈற்றிற் காண்க.

ஸாக்ரடீஸ் கேள்விகேட்கும்போது மனிதருடைய யோக்யதைக்குத் தக்கவாறு தமது வினாக்களை மாற்றிக் கொள்வார். தாம் ஒன்றும் அறியாதவர்போலவும், பிறரிடத்திற் பலவற்றைத் தாம் கேட்டறிந்துகொள்ள விருப்பமுடையவர்போலவும் நடித்து, "உடையார்முன் இலார் போல ஏக்கற்று"* மென்மையாக வாதாடுவார். 'இவர் அறியாதவர்போல நடித்துக் கேட்பது பிறரைத் திகைக்கச் செய்து தாம் களித்தற்குப்போலும்' என்ப பார்த்தோர்க்குத் தோற்றினாலும், ஸ்வபாவத்தில் பிறரை வினாவுவதற்குச் காரணமொன்றை வேண்டியே அவர் அங்ஙனஞ் செய்தாரென விளங்குகின்றது. எதிர்மறைமுகத்தால் இவ்வாறு சுற்றுவழியாக ஜனங்களுக்குக் கற்பித்ததைப் பிளேடோ விரித்துவிளக்கி, ஸாக்ரடீஸுக்கு ஓர் புகழுடைமையைக் கொடுத்திருக்கிறார். கேள்விகளால் மடக்கி அவரது அறியாமையைப் புலப்படுத்தினபிறகு, திகைத்துநின்றவர்க்கு உபயோகமான செவ்விய கருத்துக்களை மிகவும் எளிதாக நேர்வழியிலும் ஸாக்ரடீஸ் போதிப்பார் என்று ஸெனோபன் கூறுகிறார். இஃது உண்மையாக இருக்கலாமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும், ஸாக்ரடீஸுக்கு இதனால் பெருமை யாதொன்றும் ஏற்படுகிறதில்லை. நீதிசாஸ்த்ரத்தை ஒழுங்குபடுத்திப் பாகுபாடுசெய்ததிலும், சுற்றுவழிகளால் பிறருடைய கருத்தை எழுப்பி நீதிவிஷயங்களை ஆராய்ச்சிசெய்வதில் அதை ஊக்கிச்செலுமாறு தூண்டியதிலும் ஸாக்ரடீஸின் பெருமை ஒளிர்கின்றது. எவ்விஷயத்தை எடுப்பினும், எக்கேள்வியைக் கேட்பினும்

---

*குறள் 395—செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோல ஆசையால் தாழ்ந்து என்பது இதன் பொருள்.

அவரது நோக்கமொன்றே அது மனிதரின் நன்மை, இன்பம், அறிவு முதலியவற்றைப் பெருக்கவேண்டுமென்பது அவர்தம் போதனைமுறையில் நேர்வழியாக ஒன்றைக் கற்பித்தல் அருமையே அவ்வாறு செய்யினும் விளையும் பயன் மிகச்சிறிதளவேயாகும் விஷயங்களின் உண்மையைக் காட்டி அறிவதில், பிறருடைய மனத்தைப் பயிற்றுவதுதான் அவரது முதன்மையான கருத்து பிரசவவேதனையில் மகப்பேற்றை எளிதாகச் செய்பவளல்ல தமது தாயைப்போலத் தாமும் பிறர் மனதில் உதிக்கின்ற கொள்கைகளை எளிதாகப் பிறப்பிக்கும் மருத்துவனென்று அவர் கூறினார்.

க்ரீஸ்தேசத்தில் இதுவரை நிகழாத ஒருகிளர்ச்சியை ஸாக்ரடீஸ் எழுப்பி, தத்துவாராய்ச்சியை வளர்த்தார் இவரைப்பின்பற்றிப் பலபண்டிதர்கள் பலவிதக்கொள்கைகளை ஸ்தாபித்துச் சீடர்பலருடன் புகழ்பெற்றுப் பின்னாளில் விளங்கினாராயினும், ஸாக்ரடீஸைப்போல் பிறருடைய மனத்தைக் கவர்ந்து அறிவைப் பெருக்கினோர் எவருமில்லை என்னலாம். அவர்காலந்தொட்டு நீதிசாஸ்திரமென்பது தத்வசாஸ்திரத்தின் ஓர்பகுதியாகத் தனியே பாராட்டப்பட்டுவருகின்றது.

ஸாக்ரடீஸ் ஸ்திரமாக யாதொருகொள்கையையும் கற்பிக்கவில்லையாயினும், அவரது அமுதவாக்யங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு பலபண்டிதர்கள் பலமதங்களை ஸ்தாபித்தனர் அவைகளில் முக்யமானவை நான்கு.

முதலாவது மதம் —இது மகாராநகரத்து யூக்ளீடீஸ் (Eucledes of Magara) என்பவரால் நிறுவப்பட்டது. இவர்

தர்க்கசாஸ்த்ரத்தையே முதன்மையானதெனக் கருதிய பிறவிஷயங்களைப் பாராட்டாமல் விட்டுவிட்டார், உலகின் பொருள்களின் தோற்றம் வேறு, உண்மை வேறெனக் கொண்டனர் இவர் எதையும் எளிதில் நம்புகிறதில்லை; எதற்குங் குறைகூறுவார் இவரது வழியைப்பற்றி நடந்தோரை நம்பிக்கையற்றவரென (Sceptics) ஜனங்கள் உரைத்தார்கள் ஒருகொள்கையை நிலைநிறுத்த எவ்வளவு காரணங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு காரணங்கள் அக்கொள்கையைச் சிதைப்பதற்கும் இருக்கின்றனவாதலின், யாவும் அவரவரது அபிப்பிராயத்தை ஒட்டியிருக்குமென்பதை நம்பி, மனத்தடுமாற்றமின்றி ஒருவழித்தாய் நிற்பதே சரியான மார்க்கமெனப் புகன்றனர்.

இரண்டாவது மதம்—ஆண்டிஸ்தீனிஸ் (Antisthenes) என்பவர் ஸ்தாபித்தது இம்மதத்தைத் தழுவினோரை ஒழுக்கவாதிகளெனலாம் இவர்கள் அறிவைப் பெருக்குவதில் விசேஷக்கருத்தை வைக்காதவர். இவர் ஸ்டோயிகஸ் (Stoics) என்று அழைக்கப்பட்டனர்.

மூன்றாவது மதம்—இது சைரினி நகரத்து அரிஸ்டிப்பஸ் என்பவர் ஏற்படுத்தியது இம்மதத்தினர் குறுகிய கருத்தைக் கொண்டவர், உலகவின்பத்தையே முக்யமாக நாடுபவர்; ஊனை வாட்டாது பெருக்குவதில் கண்ணுடையவர்

மேற்கூறிய மூன்றுமதத்தினரும் ஸாக்ரடீஸ்வழிகளை அரைகுறையாக அறிந்து இடரப்பட்டவர்.

நான்காவது மதம்—ஸாக்ரடீஸின் அந்தரங்கநண்பராகிய பளேட்டோவென்பார் நாட்டியது. இவர்மதமே

மிகச்சிறந்தது. ஒழுங்காக நடைபெற்றதும், சாஸ்த்ரோக்தமானதும், யாவராலும் கொண்டாடப்பட்டதும் இதுவே. இதைப் பின்வந்த அரிஸ்டாட்டில் என்ற நிபுணர் சீர்ப்படுத்திச் சிறக்கச்செய்தார்.

---

## 10-ஆம் அதிகாரம்

## ஸாக்ரடீஸ் கொள்கைகள்.

---

[அவரைக் குற்றஞ்சாட்டியது—அவர் செய்கையில் ஜனங்கள் வெறுப்புக்கொண்டது—அனிடஸ் என்பானது கோபம்—ஆல்கிபியாடிஸ், க்ரிடியஸ் என்ற இருவருக்கும் அவர்க்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிய தப்பெண்ணங்கள்—கவிவாணரும் பிரசங்கவல்லாரும் ஸாக்ரடீஸ்மீது காட்டிய விரோதம்]

தர்மம் அதர்மம் என்பனவற்றை முதன்முதல் நன்கு விளக்கி அவற்றின் பொதுவான அபிப்ராயத்தை நிலைநிறுத்தினவர் ஸாக்ரடீஸென்று முன்னாகக் கூறினோம். அறிவு அல்லது ஞானமே தர்மமென்றும், அறிவின்மை அல்லது அஞ்ஞானம் அதர்மமென்றும் அவர் கருதினார். நல்வழியில் நடப்பதனால் யாவரும் இன்பத்தை அடையலாம். அவ்வின்பத்தை அடைவதற்கே எல்லோரும் காரியங்களைச் செய்கிறார்கள் ஆயினும், பலர் தமது அறிவின்மையால் நன்னெறியை உணராது தீநெறியிற் புகுந்து பழியொடு பட்டவைகளைச் செய்கின்றனர். மிக்கவறிவினர்க்கும் எப்போதும் நல்வழியில் தவறாது செல்வதென்பது சாத்யமாகாது. ஒருவன் தனக்குத்தானே விரோதியாகமாட்டான். ஆதலால், வேண்டுமென்றே கெடுதலை

எவனுஞ் செய்யான். யாதேனுங் கெடுதியை ஒருவன் செய்வானாகில், அவனைச் செய்வினையின் விளைவறியாச் சிறியோனென ஓர்ந்து, அவனுக்கு அவ்விளைவை அறிய வல்ல புத்திநுட்பத்தைக் கற்பிக்கவேண்டும். அப்பொழுது தான் அவன் திருந்துவான். அவ்வாறு கற்பிப்பதற்குமுன் அஞ்ஞானத்திற்கும் அகம்பாவத்திற்கும் காரணமாகிய அவனது தன்மையை அவனுக்குப் புலப்படுத்தவேண்டும்.

தான் சர்வஜ்ஞனென்று ஒருவன் நினைப்பானாயின் அவன் ஒருபோதுந் திருந்தான். தனது அறிவின்மையை அறிந்துகொண்ட ஒருவன் நன்மைதீமை ஈதென முதலில் தெரிந்து தனது காரியங்களை நடத்தாவிடினும், சிறிது சிறிதாக நல்வழிக்கு நாளடைவில் வந்துவிடுவான். ஆதலின், மக்களின் பகுத்தறிவைப் பெருக்குவதே மேலான கர்மமென்று ஸாக்ரடீஸ் எண்ணினார்.

இக்கொள்கை யாவர்க்கும் ஒப்பமுடிந்ததொன்று. மனிதருடைய ஆசை, ப்ரீதி, பக்தி, பயம் முதலிய மனநிலைகளும் தர்மமாக்கத்திற்குச் சாதனமாவதை இதிற் காணகின்றிலமென்று குறைகூறுவர் சிலர். அங்ஙனம் கூறுபவர் ஸாக்ரடீஸ்கருத்தை நன்கறியாரென்பர் வேறுசிலர். 'தாம் செய்யும் கர்மம் எத்தகையது? அதனால் விளையும் பயன் என்னை?' என்பதை உணராது தொழில்புரியும் மாக்களைத்தான் அவர் திருத்துவதற்குக் கங்கணங்கட்டிக் கொண்டார். அவ்விதமாக அவரது பகுத்தறிவை வளர்த்தாலன்றி, அவரைச் சீர்திருத்துவது ஒருபோதும் இயலாதென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டியதே.

ஒவ்வொருவரும் தத்தம் கார்யங்களைச் சிறக்கச் செய்வதையே தம்முக்யநோக்கமாகக் கொள்ளவேண்டு

மென்று ஸாக்ரடீஸ் கூறுவார். சிறக்கச்செய்தலென்பது ஒருவிஷயத்தை நன்றாயறிந்து திடமாக அதைச் செய்வதென்பர். குடித்தனத்தொழிலைச்சிறக்கச்செய்யவேண்டும் குடியானவன்; மருத்துவன் வைத்தியத்தைச் சரிவரச் செய்தலேவேண்டும்; நாட்டிற்கும் பிறர்க்கும் தான் செய்ய வேண்டிய கடமைகளை நகரவாசி நாடிச் செய்தல்வேண்டும்; இவ்வாறு செய்வோரே சிறந்தோராவர்; கடவுள் அவர்க்கே அருள்சுரப்பார்; இவ்விதம் தமது காரியங்களைச் சிறக்கச்செய்யாத மாக்களைப் பதடிகளென்றே அழைக்கவேண்டும்; கடவுளின் கருணைக்கு அவர் இலக்காகார். இவ்வாறு நல்வாழ்க்கைக்காரணமாக மனிதர் தமது தொழில்களைச் சிறக்கச்செய்யவேண்டுமென்பதிலேயே ஸாக்ரடீஸ்மதோபதேசமும் தர்மோபதேசமும் சென்றன.

மேற்கூறியபடி மனிதரின் நல்வாழ்க்கைக்குக் காரணமானவைகளையே முக்கியமாய் ஸாக்ரடீஸ் உபதேசித்தாலும், சிந்தையைப் புலன்களிற் புகவிடாது அடக்கி நன்னடக்கைகளைக் கடைப்பிடித்து நன்னெறியில் ஒழுகுவதனால் எழுஞ் சிறப்பை அவர் எடுத்துரையாமற்போகவில்லை. மனிதர் தங்கள் சௌகரியங்களைக் கூடியவரை குறைத்துக்கொள்ளவேண்டுமெனவும், உணவு முதலியவற்றுள் மிதமாக இருத்தல் அவசியமெனவும், தமக்கு யாதுநேரிடினும் அதைக்கவனியாமல், பிறருடைய விருப்பு வெறுப்பையும் பாராட்டாமல், தமது கடமைகளைச் செய்தோமென்ற திருப்தியையும் மனமகிழ்ச்சியையும் அடைதலே தலையாய அறமெனவும் பலமுறை ஸாக்ரடீஸ் கூறியிருக்கின்றார்.

இராஜாங்கவிஷயங்களைப்பற்றி அவர் கொண்ட அபிப்பிராயங்களும் மேலோதிய நீதிசாஸ்திர அபிப்பிராயங்களை ஒட்டியவைதாம். அரசியல்முறைகளை நடத்துபவர்

ஜனங்களின் சௌகரியத்தையும் நன்மையையும் நாடிக் காரியங்களைச் செய்யுந் திறமை வாய்ந்துள்ளவராதல் வேண்டுமென்பது அவரது துணிபு. செங்கோலைக் கையிற் பிடித்த ஒவ்வொருவரும் அரசனும் அதிகாரியுமாகார்; கீழோரால் அவ்வுயர்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவனும், அதிருஷ்டவசத்தால் அந்நிலைமையைப் பெற்றவனும், வலிதாகவும் வஞ்சனையாகவும் அப்பதவியைக் கவர்ந்து கொண்டவனும் அதிகாரிகளாகார், எவன் நீதியைச் செவ்வனே நடத்துகின்றானோ, அவனே அப்பதவிக்கு உரியவனாவான். கப்பல் ஓடும்போது மாலுமிக்குப் பணிந்து பிரயாணிகள் நடக்கிறார்கள். நோயாளிகள் வீட்டில் மருத்துவனே யஜமானனாகிறான். இதுபோலவே, அரசியலை நன்குணர்ந்த திறமையோனே ராஜாங்கத்தில் தலைமைவகித்தற்குத் தகுதியுடையவனாவன். அவ்வாறன்றி, அநீதியாய்ச் செய்வது போலச் சீட்டுப்போட்டுப்பார்த்து அதிருஷ்டவசத்தால் பெற்றவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுப்பதும், தமது கடமைகளை ஒழுங்காகச் செய்வாரென்று அவர்களை எதிர்பார்ப்பதும் அறியாமையின்பாற்படும். மாலுமித்தொழிலைக் கனவிலும் கண்டறியாத ஒருவனை நம்பிக் கப்பற்பிரயாணம் எவரேனும் செய்வாரோ? கண்டபேர்களைத் தச்சர்களாகவும் பாடகர்களாகவும் நியமிப்பார்களோ? அவ்வத்தொழில்களிற் கைதேர்ந்தோரே அவ்வத்துறைகளில் தலைமைவகிப்பதற்கு உரியராவர்.

இவ்வபிப்பிராயத்தை எவ்விதம் அநுபவத்திற்குக் கொணர்வதென்பதைப்பற்றி ஸாக்ரடீஸ் விரிவாக விளக்கிக்கூறவில்லை. உத்தியோகம்பெறுவதற்குத் தகுதியுடையவன் எவனெனக் காண்பதற்கும், தகுதியற்ற உத்தியோகஸ்தர்களை நீக்குவதற்கும், ஒருவன் உத்தியோகத்தில் அமர்ந்

திருக்கையில் அவனினுஞ் சிறந்த ஒருவன் கிளம்பினால் யாதுசெய்வதென்பதற்கும் அவர் வழிகூறினாரில்லை. மாலுமி, மருத்துவன், தொழிலாளிகள் முதலியோரை ஒப்பிட்டதைக் கவனித்தால், ஜனங்களே ராஜாங்க உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்பதும், சிறிதுகாலஞ் சென்றபின் வேறு உத்தியோகஸ்தர்களை முன்போலவே தெரிந்தெடுப்பது அவசியமென்பதும் அவரது கருத்துக்களென்ன ஒருவாறு கொள்ளலாம் எவ்வாறெனின், தொழிலாளிகளை ஜனங்கள் சதாகாலம் அபிமானிப்பதில்லை சிலரைச் சிலகாலங் கொண்டாடுகிறார்கள். வேறு சிறந்த தொழிலாளிகள் கிளம்பினால், அவர்களிடத்தில் அதிகமதிப்புவைத்து முன்னுள்ளோரை நீக்கிவிடுகிறார்கள்.

மேற்கூறியவாற்றால் நாம் அறியக்கிடப்பதியாதெனில், ஸாக்ரடீஸ் அரசியலைப்பற்றிக் கொண்ட அபிப்ராயங்களும், நீதிமார்க்கங்களைப்பற்றி அவர் கொண்ட அபிப்ராயங்களைப்போலவே குறைபாடுடையன என்பதேயாம். ராஜாங்க உத்தியோகம் வகிப்போர்க்கு அறிவுமட்டும் நிறைந்திருந்தால் போதுமென அவர் கருதியது உண்மை முழுவதையுங் கூறியதாகாது எதிர்மறைமுகத்தாலுஞ் சில அபிப்ராயங்களை அவர் வெளியிட்டிருக்கிறார் குடியரசும் செல்வர்களரசும் நன்மைபயக்குமென அவர் எண்ணவேயில்லை ஆதன்ஸ் நகரத்தினது அரசியன்முறையில் அவர் அபிமானமேனும் நம்பிக்கையேனும் வைக்கவில்லை. அதுபோலவே, செல்வர் நானூற்றுவரும், முப்பதின்மரும் முறையே ஆதன்ஸ் நகரை வலிதிற்கையகப்படுத்தி ஆண்டுவந்தபோதும், அவர்களை இவர் இறையும் மதிக்காமல் வெளிப்படையாக வெறுத்துரைத்தார்.

# 11-ஆம் அதிகாரம்

## குற்றஞ்சாட்டினோர்.

[மூன்று குற்றங்களின் ஆராய்ச்சி—"மேகங்கள்" என்ற நாடகத்தைப் பார்த்து ஸாக்ரடீஸ்மீது ஜனங்கள் தவறான எண்ணங் கொண்டது—தீயவழியிற் புகுத்தினார் என்ற குற்றம் ராஜாங்க வியவஹாரவிஷயமாக ஏற்பட்டது—அவரது போதனைகளின் குறைபாட்டினால் குற்றங்கள் ஏற்பட்டன]

இவ்வண்ணம் நீண்டகாலமாக ஸாக்ரடீஸ் தாயெடுத்துக்கொண்ட காமத்தைக் கைவிடாது நடத்திவந்தார். அரிஸ்டோபானஸ் நாடகம்வரைந்த காலத்திலேயே இவர் "நுண்மாணுழைபுலமை" * வாய்ந்தவரென்று யாவராலும் நன்குமதிக்கப்பட்டவராகத் தெரிதலான், சுமார் முப்பது வருஷங்களாக இவர் யாவரையும் பரீட்சித்து அறிவைப் பெருக்கிவந்தாரென்று கூசாமற் கூறலாம். கி.மு 399-இல் மெலீடஸ் (Meletus) என்பவர், அனிடஸ் (Anytus) லைகான் (Lykon) என்ற இருவரின் உதவியைக்கொண்டு, ஸாக்ரடீஸ்மீது மூன்று குற்றங்களை ஏற்படுத்தி, சகலரும் அக்குற்றங்களை அறியுமாறு வரைந்து, வழக்குப்படி நியாயஸ்தலத்தின் வாசலில் நாலவிட்டார். அவர் சாட்டிய குற்றங்களாவன —

1 ஸாக்ரடீஸ் தமது முன்னோர் தொழுத தெய்வங்களைப் போற்றவில்லை.

2. அவர் வேறு புதிய தெய்வங்களைக் கற்பிக்கின்றார்

3 அவர் ஆதன்ஸ்வாஸிபர்களைத் தீய வழிகளிற் புகுத்திக் கெடுத்துவிடுகிறார்.

---

* நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டுப் பலநூல்களிலுஞ் சென்ற அறிவு என்பது இதன் பொருள்.

### இக்குற்றங்களுக்கு மரணதண்டனையே ஏற்றது

சென்ற முப்பது வருஷகாலமாக ஸாக்ரடீஸ் பிறருடன் சம்பாஷித்துவந்திருந்தும், அவரது 70-வது வயதில் குற்றஞ்சாட்டப்பட்டது மிகவும் வியக்கத்தக்கதே. இவரது சம்பாஷணையினைத் தாம் தொடங்கினதுமுதல் இதுவரை ஒருவழியாகவே இருந்தது. எத்தனையோ பெயர்கள் அவரது சம்பாஷணையைக் கேட்டு உயர்நிலையை அடைந்திருந்தும், அதைச் சற்றும்பாராட்டாமல் இவர்க்குக் கொலைத்தண்டனையை விதித்ததற்காக இவரது நண்பராகிய ஸெனபன், அதீனியரைச் செய்ந்நன்றிகொன்ற சிறியோரென இகழ்ந்துபேசுகிறார். இவ்வளவுகாலத்திற்குப்பிறகு குற்றஞ்சாட்டப்பட்டது ஆச்சரியமானதன்று. 70-ஆம் ஆண்டுவரை அதீனியர்கள் அவரைக் குற்றஞ்சாட்டாமல் பகிரங்கமாய்த் தடையின்றிச் சம்பாஷிக்கும்படிவிட்டதுதான் அதிசயமானது இதனை நன்கு விளக்குதும்.

ஸாக்ரடீஸ் கைக்கொண்ட காரியம் சாதாரணமானதன்று எவ்விதத்திலும் அது பகைமையை விளைவிக்கக் கூடியதே. சிறுசிறப்புமுற்று அறிவிற்குத் தாமே எல்லையென்று அகந்தைகொண்டிருந்தோரைப் பலவினாக்கள் வினவி, அவரை ஒன்றுமறியா முழுமூடரென நிரூபித்தால், அதிகாரமும் சொல்வன்மையும் செல்வமும் நிரம்பிய அவர்கள் ஸாக்ரடீஸைச் சும்மா விடுவார்களோ? நாளடைவில் நகரெங்கும் அவர்க்குப் பகையாளிகள் நிறைந்திருந்தனர், சிலரே அவரை வழிபட்டுக் கொண்டாடினர். இங்ஙனம் பகைவர் நிறைந்த ஊரில் முப்பது வருஷகாலமாக

இவர் தமதிஷ்டப்படி சம்பாஷித்துவந்தது வியக்கத் தகுந்ததன்றோ? வேறெந்நகரிலும் இவ்வண்ணஞ் செய்வது சாத்தியமாகாது. இதுகாறும் ஒருவரும் அவரைக் குற்றங்கூறாது வாளா இருந்ததற்கு ஆதன்ஸ் நகரத்தின் பெருமையே காரணமாகும். அந்நகரில் தமது அபிப்பிராயத்தை எவருந் துணிவுடன் எடுத்துப்பேசலாம். பிறர் கூற்றுக்களைக் கூசாது எவருங் கண்டிக்கலாம். உண்மையைத் துருவிநாடுவதில் ஜனங்களுக்கு விருப்பமதிகம். தம்மைப் பிறர் கண்டித்துப்பேசினால், பொறுமையுடன், அதை ஜனங்கள் ஏற்றுக்கொள்வார்கள். குடியரசுநாடுகளில் இவ்விதவுரிமையைப் பெற்றது ஆதன்ஸ் ஒன்றே. பிறருடன் சம்பாஷிப்பதிலேயே தமது வாழ்நாள் முழுவதையுங் கழித்தவர் நமக்குத் தெரிந்தவரை ஸாக்ரடீஸ் ஒருவர் தாம். அவர் இதுவரை குற்றஞ்சாட்டப்படாமல் தமது 70-ம் ஆண்டில் குற்றஞ்சாட்டப்பட்டதற்குக் காரணங்கள் வேறுள்ளனவென்பது இதனால் ஏற்படுகின்றது. அவைகளைக் கண்டறிய இனி முயல்வோம்.

அனிடஸ் என்பானுக்கும் ஸாக்ரடீஸுக்குஞ் சில காரணங்களினால் மனஸ்தாபமேற்பட்டது. அனிடஸ் என்பவன் ஓர் தோல்வியாபாரி. அவனது மகன் ஸாக்ரடீஸ் சம்பாஷணையில் ஈடுபட்டு, அவரைப்போற்றிப் பணிந்து வந்தான். அவனது அறிவின் முதிர்ச்சியைக் கண்ட ஸாக்ரடீஸ், அவனை நல்வழிப்படுத்த எண்ணி, குடும்பத்தொழிலாகிய சர்மவ்யாபாரத்தில் அவனை நுழைக்காமல், அவனது அறிவிற்கேற்ப ஓர் தொழிலை நாடும்படி அவன் தகப்பனை வேண்டினர். ஸாக்ரடீஸ் முக்கியமாய் வாலிபர்களுடன் சம்பாஷித்துவந்ததனால், அவ்வாலிபர்கள் தாம் நூதனமாக உணர்ந்துகொண்ட கொள்கைகளையும் அபிப்

ராயங்களையும் தமது பெற்றோர் உற்றோர் உறவினர்க்கும் போதிப்பாராயினர் அவையாவும் புதியவையாக இருந்தமையால், அன்னோர் அவற்றை ஒப்புக்கொள்ளவில்லை; தவிரவும், ஸாக்ரடீஸ் வாலிபர்களைத் தீவழிப்படுத்துங் கொடியோரென்று அவர்கள் கருதினார்கள் அனிடஸ் என்பானும் ஸாக்ரடீஸைப்பற்றி அவ்விதமமாறான எண்ணங் கொண்டான்

அனிடஸ் என்பான் மிக்க செல்வமடைந்த ஓர் வணிகன், ராஜாங்கத்தில் தலைமைபெற்றவருள்ளும் ஒருவன், நகரத்தில் அதிகச்செல்வாக்குடையவன், ஆதனைஸ் வலிதாகக் கைக்கொண்டு ஆண்டுவந்த முப்பான் செல்வரைத் துரத்துவதில் உதவிசெய்து தனது தேசாபிமானத்தை வெளிப்படுத்தினோன், முப்பான் செல்வரது ஆட்சியில் பலர் இழந்ததுபோலவே, தனது சொத்துக்களையெல்லாம் ஒருங்கே இழக்கப்பெற்றவன், குடியரசு மறுபடியும் நிறுவப்பட்டவுடன், தனது வியாபாரத்தை வருத்திசெய்து, தானிழந்த செல்வத்தை மீளவும் அடைவதில் கருத்தூன்றியவன், புதிதாகத் தன் காலத்தில் போதிக்கப்படுங் கொள்கைகளில் சிறிதும் நம்பிக்கையற்றவன், ஸோபிஸ்ட்ஸ் என்பாரையும் ஸாக்ரடீஸையும் ஒருங்கே வெறுத்தவன், தன் மகன் வியாபாரத்தைக் கைவிட்டு வேறொருதொழிலைக் கைக்கொள்ளவேண்டுமென்பதைக் கேட்ட அனிடஸின் மனநிலை எவ்விதமிருக்குமென்பதை யாவரும் நன்குணரலாகும். தன் மகன் தன்னிடத்தில் வைத்ததைவிட அதிகமாகவே ஸாக்ரடீஸிடத்தில் அன்பும் மதிப்பும் வைத்துவந்ததனால், தன் மகனைத் தீயவழியிற் புகுத்தியதாக ஸாக்ரடீஸ்மீது அவன் குற்றஞ் சாட்டினான். இதுவே அனிடஸின் காரணம். இது நிற்க,

ஆதன்ஸ் நகரில் ஸாக்ரடீஸ் காலத்தில் ஆல்கிபியாடிஸ் (Alkibiades), க்ரீடியஸ் (Kritias) என்ற கொடிய பாதகரிருவர் வசித்தனர். அவ்விருவரையும் க்ரீஸ்சரித்ரம் படிப்போர் ஒவ்வொருவரும் நன்றாயறிவர். இவருள் முன்னவன் வன்னெஞ்சன், காமுகன், தீயவொழுக்கினன், நகரத்தின் நன்மையைச் சிறிதும் நாடாதவன், நகரத்ரோகியென்றே யாவராலும் நிந்திக்கப்பட்டவன். அவனது தீயவொழுக்கத்தை வெறுத்த ஜனங்கள், அவனை நகரத்தினின்றும் துரத்திவிட்டமையால், அந்யநகரத்தில் தனது அந்திய காலத்தைக் கழித்து இறந்தான்.

க்ரீடியஸ் என்பவன் முப்பான்செல்வரின் கொடுமைகட்கு மூலாதாரமாயிருந்தவன். இவனுடைய ஏவலால் பலர் தமது உயிரை இழந்தனர். அதுபற்றி இவனைச் சர்வ ஜனங்களும் தெழித்தார்கள்.

இவ்விருவரும் தமது இளமையில் ஸாக்ரடீஸனை அணுகி, பயபக்தியுடன் அவர்க்குத் தொண்டுபூண்டொழுகி, அவருடன் சம்பாஷித்துவந்தார்கள். எவ்வளவுகாலம் அவர்கள் அவ்விதம் பழகிவந்தார்களென்பது நமக்கு வெளியாகவில்லை. ஸாக்ரடீஸுடன் பழகிவந்தால் நன்றாகத் தர்க்கிக்கவும், இராஜாங்கவிஷயங்களை நன்குநடத்தவும் கற்றுக்கொள்ளலாமென்ற எண்ணத்துடன், அவ்விருவரும் கொஞ்சகாலம் ஸாக்ரடீஸை அடுத்துப் பயின்றுவந்தனரென்பதும், அக்காலங்களில் ஸாக்ரடீஸ் அவர்களது தீயவொழுக்கங்களைக் கண்டித்துவந்தாரென்பதும், சிறிதுகாலம் அவ்வாறு அடங்கியொழுகிக் கற்றபிறகு அவ்விருவரும் நீங்கினரென்பதும் ஜெனபனது கூற்றுக்கள். அவ்விருவரும் நீண்டகாலமாக ஸாக்ரடீஸுடன் சம்பா

ஷித்துவந்தனரெனவும், அவருள் ஆல்கிபியாடிஸை அதிக பிரியத்துடன் ஸாக்ரடீஸ் பாராட்டிவந்தாரெனவும் ப்ளேட்டோ எழுதியுள்ளார். ஆல்கிபியாடிஸ் மன்மதமேனி படைத்தவன்; கிரீஸ்வாசிகள் ஆடவரழகைப் பெரிதும் மதித்துவந்தனரேயன்றிப் பெண்டிரது எழிலையும் அத்துணைப் பேணுவதில்லை. ஸாக்ரடீஸும் முக்கியமாய் ஆடவரது வடிவழகையே ஆர்வத்துடன் மெச்சிவந்ததனால், அழகிற் சிறந்த ஆல்கிபியாடிஸை அன்புடன் பாராட்டிவந்தாரென்பதை நாம் ஒப்புக்கொள்ளலாம். ஒருமுறை போர்க்களத்தில் இவனதுயிரைக் காப்பாற்றி வெற்றிப்புகழையும் ஸாக்ரடீஸ் அவற்கு ஈந்தாரென்று முன்னர்க் கூறினோம். கி. மு. 420-ல் ஆல்கிபியாடிஸ் ராஜாங்ககாரியத்தில் தலைமைவகித்து நடத்தத் தலைப்பட்டான். கி. மு. 415-இல் இவனை ஜனங்கள் நகரினின்றும் ஓட்டிவிட்டதனால், நெடுங்காலமாக இவன் ஸாக்ரடீஸோடன் பழகிவந்தானென்று சொல்வதற்கு இடமில்லை. க்ரீடியஸென்பான் ப்ளேட்டோவின் பந்து; சிறந்த ஞானவான், பலநூல்களிற் பயின்று தேர்ச்சிபெற்றவன் ஆதலின், இவன் ஸாக்ரடீஸோடன் நெடுங்காலம் பழகியிருக்கலாமென்பது ஒருதலை.

இவ்விருவரையும் ஸாக்ரடீஸ்சிஷ்யர்களென ஜனங்கள் விபரீதமாகக்கொண்டு, அவர்களிடத்திற்கண்ட தீக்குணங்களை ஸாக்ரடீஸ்மேல் ஏற்றிவிட்டார்கள். முப்பான் செல்வரது ஆட்சி முடிந்தபிறகு, ஸாக்ரடீஸ்மேல் ஜனங்கட்கு விரோதம் அதிகரித்துவிட்டது. க்ரீடியஸ் என்பவனது ஞானாசிரியர் ஸாக்ரடீஸ் என்ற தப்பான எண்ணமானது, முன்னமேயே ஸாக்ரடீஸ்மேல் அநீட்டஸ் கொண்ட கோபத்தைப் பன்மடங்கு பெருக்கியது.

அவர்மீது குற்றஞ்சாட்டிய மற்றைய இருவருள், மெலீடஸ் என்பவர் ஓர் கவிவாணர் லைகான் என்பவர் ஒரு பிரசங்கபோதகர் இவ்விருவகுப்பினரும் முன்னமே ஸாக்ரடீஸ் கேட்ட கேள்விகளால் மடக்கப்பட்டுப் பங்கமடைந்துள்ளார்கள், எவ்வாறெனில், உத்தமகவிகளென்று பெயர்பெற்று விளங்கிய சிலர், ஸாக்ரடீஸால் பரீக்ஷிக்கப்பட்டுத் தாங்கள் எழுதிய கவிகட்கே உண்மையுரை காண முடியவில்லை வேறுவிஷயங்களிலும் தமக்குத் தெரியாததொன்றில்லையென அவர்கள் கொண்ட செருக்கை அடக்கி அவர்களைப் பலமுறை மூங்கையராக்கிவிட்டார் ஸாக்ரடீஸ். இவ்வாறே, பிரசங்கபோதகரையும் பலமுறை ஸாக்ரடீஸ் கேள்விகளால் மடக்கி, அவர்களது அறிவீனத்தைத் துலக்கினார் அவ்வவ்வகுப்பைச் சேர்ந்தவர் ஸாக்ரடீஸ் மீது வைரங்கொண்டு, அவரை அடக்குவதற்குச் சமயம் பார்த்திருந்தனர் அது இப்போது அவர்களுக்கு வாய்த்தது. மெலீடஸ், லைகான் இருவரும், அனிடஸுடன் சேர்ந்துகொண்டு, தங்கள் கூட்டத்தாரை மானபங்கஞ் செய்த ஸாக்ரடீஸுக்கு விரோதமாகக் காரியங்களை நடத்தினார்கள்

## 12-ஆம் அதிகாரம்

## மூன்று குற்றங்கள்.

[ஸாக்ரடீஸ் செய்த எதிர்வாதம்—யத்னமின்றியிருந்தது—குற்றவாளியென்று தீர்மானித்தது—அதீனியர் தண்டிக்கும் முறை—ஸாக்ரடீஸ் நியமித்த பிரதி தண்டனை—அவர் நடத்தையால் ஜனங்கள் கோபங்கொண்டது—மரண தண்டனையை அவர் தாமே வரவழைத்துக்கொண்டது-ஸாக்ரடீஸ் அடைந்த தருப்தி]

நியாயசபைமுன் உபயவாதிகளும் எடுத்துரைத்த மாற்றங்கள் இவையென்று கண்டறிவது இப்போது இயலாது. பிளேட்டோ, ஸெனொபன் என்போர் எழுதிய நூல்களிலிருந்து சிலபகுதிகளை மட்டும் ஊகித்தறியலாம். ஸாக்ரடீஸ்மீது ஏற்படுத்திய குற்றங்கள் முற்கூறியபடி மூன்றே. அவற்றுள் இரண்டாவதாகிய 'வேறு புதிய தெய்வங்களைக் கற்பிக்கிறார்' என்பதை நிலைநிறுத்துவது வாதிகளுக்கு எளிதாகிவிட்டது. ஏனெனில், அசரீரி முதலிய அபூர்வ தோற்றங்கள் தம்மை நல்வழிப்படுத்திவந்ததாகப் பலமுறை ஸாக்ரடீஸ் கூறியிருக்கிறார். அதுபற்றி அவர் அதை மறுத்துரைக்கவில்லை. 'தமது முன்னோர் தொழுதுவரும் தெய்வங்களை இவர் போற்றுவதில்லை' என்பது முதலாவது குற்றம். இதை ஸாக்ரடீஸ் முற்றிலும் மறுத்துரைத்து, தம்மைக் குற்றஞ்சாட்டிய மெலீட்டஸைச் சபையிலேயே கண்டித்துப் பேசினார். மற்றவர்களைப்போலவே தாமும் தமது வாழ்நாள் முழுதும் மதவிஷயமான கடமைகளைச் செய்துவந்தாராயினும், அரிஸ்டோபானஸ் ஸாக்ரடீஸைப் பற்றி அவதூறுகள் கூறிய நாள்முதல் ஜனங்கள் அம்மஹானைப்பற்றி விபரீதமான எண்ணங்கள் கொண்டு, அவ

ரைத் தூற்றிவந்தனர். இப்போது குற்றஞ்சாட்டப்பட்டவுடன், ஜனங்கள் முன்கொண்ட துரபிப்ராயங்களுக்கு ஸாக்ரடீஸ் அஞ்சினாரேயன்றி, குற்றஞ்சாட்டினோரது கட்டுரைக்கு அவர் அணுவளவும் அஞ்சவில்லை. பழைய அவதூறுகள் மறுபடியும் கிளம்பி ஜனங்களால் ஆதரிக்கப்படப்போகின்றனவேயென்று அஞ்சி, சபையிலுள்ளோரை நோக்கி, 'அநீதமான கொள்கைகளை எப்பொழுதேனும் பிரசங்கு யான் போதித்ததை எவரேனும் கேட்டதுண்டோ?' என்று வினவி, அக்குற்றத்தை வலியுறுத்தபடி செய்து, வாதிகளைப் பலவிதமாகக் கண்டித்துப்பேசினார்.

மூன்றாவது குற்றமாகிய 'ஆதென்ஸ் வாலிபர்களைத் தம் துர்ப்போதனையால் தீயவழிகளிற் புகுத்திக் கெடுத்துவிடுகிறார்' என்பது முதற்குற்றத்துடன் சேர்க்கப்பட்டது. வைதிகவிரோதமான கொள்கைகளைப் போதித்து வாலிபரது மனத்தைக் கெடுத்துவிட்டாரென்று ஸாக்ரடீஸைக் குறைகூறியதோடு அமையாது, எதிரிகள் வேறுபல குற்றங்களையும் அவர்மேல் சுமத்தினார்கள். பெற்றோரை மதியாதிருக்கவும், நாட்டின் சட்டங்களை உபேட்சைசெய்யவும், தம்மை மதிவல்லோரென எண்ணிக் கர்வமடையவும், உற்றாருறவினரை அலக்ஷியஞ்செய்யவும், பண்டைப் பேராசிரியரின் அமுதவாக்யங்களுக்கு வலிந்து விபரீதப் பொருள்களைக் கூறவும் கற்பித்து, வாலிபர்களை நற்குணமற்ற கன்னெஞ்சராக்கிக் கெடுத்துவிட்டார் ஸாக்ரடீஸென்று ஜனங்கள் கூறினார்கள்.

ஸாக்ரடீஸ்கொள்கைகளையும் அவரது நடத்தையையும் சீர்தூக்கி ஆராய்ந்தோர்க்கு, மேற்கூறியவையெல்லாம்

பொயபொதி கடடுரையாமென்பதும, அவரது விரோதி களின கட்டுபபாடடால ஏறபடடவையெனபதும வெளி யாகும அககாலததாரககுள ஞானதீபமபோல விளஙகின ஸாகரடீஸின அறிவுமுதிரசசியையும, அவரது கொளகை களையும உணமையாகப பாமரஜனஙகள் உணரககூட விலலை பலர தமககுத தோனறியவாறு அவரைபபறறித தபபான அபிபராயஙகளைக கொண்டாரகள. சிலர அவ ரது விரோதிகள எழுதிவைதத கூறறுககளை நமபினாரகள. சிலர நாடகததில நடிததுககாடடியதை மெயயென நமபி, அவரிடததில வீணாக வெறுபபுககாடடினர. ஸமயோசித மாக அவர கூறிய மொழிகளைத திரிதது, சிறிதுமொவ வாத கருததுககளை அவர வெளியிடடதாககக கூறினர் சிலர. மேற்கூறியபடி, தாமமாரககததிறகு ஞானமே முகய ஸாதனமெனறு ஸாகரடீஸ நினைதது, மறறைய மனிதர் களை அஙஙனம வறபுறுததாது விடடமையால, அவறறை அவர முறறிலும ஒபபுககொளளவிலலையென அவரது விரோதிகள தீரமானிததாரகள இதுபோலவே, அவர குடியரசைபபறறிக கூறிய சிலமொழிகளைககொண்டு, அவர அககுடியரசையே பழிததுரைததாரெனப பலர கருதினாரகள. இவவாறு காரணமினறிப பிறரைக குறை கூறுவது மிகவும அசமபாவிதமாகும இவரைபபோலச சட்டதிட்டஙகளுககுப் பணிநதுநடநதவர ஆதனஸநகரில் எவருமிலலையெனனலாம. நகரின நனமையையும் மேன மையையுஙகவனியாமல கலாமவிளைததுக குடியரசை நிலை குலைததுமாறறிய செலவருடன இவர் சிறிதும் உறவாட விலலை.முபபானசெலவர நகரை வலிதிறகவாநதுகொண்ட காலததில, அவருடைய ஒழுககத்தைபபறறித தூஷித் துரைததறகாக அசசெலவரகள் அவரை வெருடடி, தம்

கொள்கைகளை எவர்க்கும் போதிக்கக்கூடாதென்று தடைசெய்தார்கள். அப்படிச் செய்தால், அவருடைய உயிரை வாங்கிவிடுவதாகவும் அச்சுறுத்தினார்கள், உயிரினுஞ்சிறந்த அவரது நண்பராகிய கேரிபானை (Chaerephon) நகரினின்றும் துரத்தினார்கள். இதுநிற்க

மேற்கூறிய ஜனவிரோதமுதலியவை ஸாக்ரடீஸ் தண்டனையடைவதற்குக் காரணங்களாகக் கருதப்படினும், வேழம் வெண்புழுதியை மேற்பெய்துகொண்டு அலைவது போலவும், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டது போலவும், தாமே அத்தண்டனையை வருவித்துக்கொண்டாரென்று ஒருவாறு சொல்வதற்கு இடமிருக்கின்றது. ஆதலின், பரோபகாரமே பெரிதென்று நினைத்துத் தாம் எண்ணியவண்ணம் கடமைகளைக் கழித்துவந்த ஸாக்ரடீஸை, தள்ளாத வயதென்று சிறிதும் இரங்காது, அதீனியர் அநீதமாய்க் கொலைபுரிந்தாரென்று ஸெனபன் பழிகூறுவது நிலைபெற்றதாகும். இதை இனி விளக்குவோம்.

## 13-ஆம் அதிகாரம்

## எதிர் வாதம்.

---

[சிறைச்சாலைவாசம்—அப்பாலோ உத்ஸவம்-ஸம்பாஷணை-ஸாக்ரடீஸ் மனநிலை—தப்பியோட உபாயம்தேடியது—ஸாக்ரடீஸ் அதை ஏற்காதது]

ஸாக்ரடீஸ் குற்றஞ்சாட்டப்பட்டபோது தம்மை விடுவித்துக்கொள்வதற்காகத் தாம் சொல்லவேண்டியது

எதிர்வாதத்தைப்பற்றி இறையும் சிந்திக்கவில்லை. அவர் நண்பர் ஹெர்மோஜீனிஸ் (Hermogenes) என்பவர் அவ்விதம் வாளாவிருப்பதனால் விளையும் கெடுதியை அவர்க்கு எடுத்துக்காட்டியபோது, ஸாக்ரடீஸ் பின்வருமாறு கூறினார் —

"எனது தீங்கற்ற வாழ்வே நான் கூறும் தகுந்த எதிர்வாதமாகும். யான் யாது சொல்லவேண்டுமென்பதைப்பற்றிச் சற்று நினைத்தால், அசரீரி என்னைத் தடைசெய்கின்றது. இதனால், நான் இறந்துபடுவது கடவுளுக்குச் சம்மதந்தானென்பது வெளியாகின்றது. இதுகாறும், குணத்திலும், அறிவிலும், ஒழுக்கத்திலுஞ் சிறந்த, நண்பர்பலராலும் போற்றப்பட்டுத் தருப்தியுடனே காலத்தைக் கழித்துவந்தேன். எனது ஆயுள் இன்னும் பெருகுமாயின், யான் மூப்படைந்து, பார்வை குன்றி, காது கேளாது, அறிவு கெட்டுப்போய், எனது வாழ்க்கையையே வெறுத்துரைக்க நேரிடும். எதிரிகள் வேண்டுகிறபடி மரணதண்டனையை எனக்கு விதித்தார்களேயாயின், அதனால் எனக்கு அவமானமொன்றும் ஏற்படாது, நியாயாதிபதிகளுக்கே அவமானம் ஏற்படும். நான் இறந்தபின் என்னை அறிவை வளர்த்த பெரியோனென ஜனங்கள் முன்னினும் மும்மடி கொண்டாடிக் கனப்படுத்துவார்கள்."

இவ்வாறு, எதிர்வாதம் யாதுசொல்லவேண்டுமென்பதைச் சற்றும் சிந்திக்காமலும், பிறரை மதிக்காமலும், நியாயசபைமுன்னே யாதொருகவலையுமின்றி எழுந்துநின்று, தமக்குத் தோன்றியவாறு கம்பீரமாக ஸாக்ரடீஸ் பதிலுரைப்பதற்குப் புகுந்தார். சபையோரை வயப்படுத்தித்

தாம் உயிர்வாழ்வேண்டுமென்ற எண்ணம் அவரிடம் அணுவளவுமில்லை. அரிஸ்டோபானஸ்காலமுதல் தம்மீது ஜனங்கள் கொண்ட கெட்டவெண்ணங்களை அவர் முதலிற் கண்டித்துக்கூறி, பின்னர் தாம் உலகில் தோன்றியதன் காரணத்தையும், தம்மையும் பிறரையும் பரீட்சித்து அறிவை வளர்க்கும்படி கடவுள் தம்மைப்பணித்ததையும், விருப்பு வெறுப்பின்றித் தாம் அத்தொழிலை இதுகாறும் நடாத்தி வந்ததையும், விடுதலைபெற்றாலும் அவ்விதமே இனியுஞ் செய்ய உத்தேசித்திருப்பதையும், தம்மைத் தண்டித்தால் கடவுளையே பழித்ததாகுமென்பதையும், தமக்கென வாழாது பிறர்பொருட்டே வாழ்நாளைக் கழித்துவரும் தம்மைப்போல் வேறொருவரையும் காண்பது அரிதென்பதையும், தாம் வாலிபர்களைத் தீய வழியிற் புகுத்தியதாகக் கூறுவதற்குப் போதிய சான்றுகள் கிடையாவென்பதையும், தாம் இதுவரை ஜனங்களுக்கு உபதேசித்தவையெல்லாம் நற்போதமென நிலைநிறுத்துவதற்கு அநேகர் தமக்குப்பின் வெளிவருவாரென்பதையும், விஸ்தாரமாக எடுத்துமொழிந்து கனமழையெனப் பிரஸங்கமாரி பொழிந்தார். குற்றவாளிகள் பணிவுடன் பேசுவதையும், மன்றாடிக்கேட்டுச் சபையோரது மனத்தைப் பலவழியாகத் திருப்புவதையும் பார்த்தோர்க்கு, ஸாக்ரடீஸ்செய்கை வியப்பையும் வெகுளியையும் தந்தது. அவரது பிரஸங்கத்தைக் கேட்ட நண்பர்கள், மனநொந்து மிகவுந் துக்கித்தனர், அவரது பகைவர்களோ, கழிபேருவகை பூத்தனர். அங்குக் குழுமியிருந்த பலரும், சபையினது தீர்மானம் ஈதாகுமெனத் தெளிவாக உணர்ந்தனர். தம்மை ஸாக்ரடீஸ் அவமதித்ததாகச் சபையோரனைவரும் எண்ண

கொண்டனர். விசாரணை முடிந்ததும் சபையோரது அபிப்பிராயம் கேட்கப்பட்டது. 276 பெயர்கள் * ஸாக்ரடீஸுக்கு அநுகூலமாயும், 281 பெயர்கள் அவருக்கு பிரதிகூலமாயும் தீர்மானித்தார்கள். அதிகமாகவுள்ள ஐவர் தீர்மானத்தைக் கொண்டு, ஸாக்ரடீஸ் குற்றவாளியென்று அறுதியிடப்பட்டது. இவ்விதம், சபையோருள் ஸாக்ரடீஸுக்கு அநுகூலமாயுள்ளவர்களும் விரோதியாகவுள்ளவர்களும் ஏறக்குறையத் தொகையில் சமமாக இருந்தது வியப்பினும் வியப்பே.

குற்றவாளியென்றுத் தீர்மானித்தப் பிறகு எவ்வித தண்டனையை விதிப்பது தகுதியாகுமென்பதை நியாயசபையார் நிர்ணயஞ்செய்வதன்முன் வாதிகள், தமக்குத் தகுதியாகத் தோன்றும் ஒரு தண்டனையைக் குற்றவாளிக்கு விதிக்கும்படி சபையோரைக் கேட்டுக்கொள்வார்கள். குற்றவாளி, அதற்குக் குறைவான ஒரு தண்டனையைத் தனக்கு விதிக்கும்படி இரந்து வேண்டுவான். பின்னர் நியாயசபையார் அவ்விரண்டுவேண்டுகோளில் யாதேனுமொன்றை உறுதிப்படுத்துவது வழக்கம். சபையார் அங்கீகரிக்குமாறு கூடியவரை தக்க தண்டனையைத்தான் குற்றவாளி பிரதியாக விதிக்கும்படி கேட்பான். அம்முறையையொட்டியே ஸாக்ரடீஸுக்கு மரணதண்டனையை விதிக்கும்படி வாதிகள் கேட்டுக்கொண்டனர். அத்தண்டனைக்குப் பதிலாக

* 281 to 220 acc. to F. J. Church. சபையோர் 500 பேர்கள் என்றும், 501 பேர்கள் என்றும், 567 பேர்கள் என்றும், பலவாறு கூறுவதோடு, பிரதிகூலமாக உள்ளவர்களின் தொகை அநுகூலமாயிருந்தவர்களின் தொகையைக்காட்டிலும் 3 அதிகமானதென்றும், 30 அதிகமானதென்றும் கூறுவர்.

அபராதம், சிறைக்காவல், நாடுதுறத்தல், ஸ்வதந்தரமிழத்தல் முதலிய தாழ்ந்த தண்டனைகளில் யாதேனுமொன்றை ஸாக்ரடீஸ் வேண்டுவாரென்று சபையோரனைவரும் எதிர்பார்த்தார்கள். அவ்விதம் ஸாக்ரடீஸ் வேண்டியிருந்தால், அவரது வேண்டுகோளுக்கு இரங்கி, சிறிய தண்டனையொன்றை அவர் விரும்பியபடியே சபையோர் விதித்திருப்பார்கள். ஆனால், அவ்விதக்குறைவான தண்டனையை அவர் பண்ணித்திரக்கவில்லை. குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு, வாதிகள் வேண்டிய தண்டனையைக் கேட்டவுடன், அவரது மனம் அழன்றெழுந்தது. அவ்வித தண்டனைக்குள்ளாவதற்குச் சம்மதமாவென்று சபையோர் கேட்டபோது, அவர் சீற்றங்கொண்டு சிலமாற்றங்கள் பகர்ந்தார். அம்மொழிகள், எதிர்வாதஞ்செய்யும்போது அவர் கூறியவற்றினும் மிக்கக்கொடுமையாக எழுந்தன.

“மெலீட்டஸ் விதித்த தண்டனைக்கு பதிலாக நான் எதை வேண்டுவது? உங்களிடத்தில் நான் பெறக்கூடிய தகுந்த மரியாதையைக் குறிக்கவேண்டுமா? ஆயின், கூறுவேன். நகரப்பொதுமாளிகையில் (Prytaneum) என்னை வைத்துக் கௌரவப்படுத்தி, நகரப்பொதுச்செலவில் என்னைப் போஷித்துவரவேண்டுமென்பதே என்கோரிக்கை. குடும்பக்கவலையை அறவே ஒழித்து, வறுமையை விரும்பியேற்று, நீவிர் ஒவ்வொருவரும் மனத்தூய்மையும், குணமேன்மையும் பெறுவது அவசியமென்று போதித்து, பொதுநன்மைக்காகவே பாடுபட்டுவந்த எனக்கு, அத்தகைய சம்மானமே ஏற்றது. நீவிர் எள்ளளவும் எனக்குத் தீங்குவிளைக்கும்படி நான் நடந்துகொண்டேனென்பதை ஒருநாளும் ஒப்பமாட்டேன். மரணதண்டனையை

நீங்கள் விதிப்பீர்களாயின், அது ஒருபோதும் எனக்குக் கெடுதலை விளைக்காது. அதற்குப் பதிலாக நாட்டைத் துறத்தல், சிறைப்படுதல் முதலிய தண்டனைகளுக்கு உள்ளாவதாக நான் கூறுவது சரியன்று உண்மையில் பலதீமைகளையும் இவையே எனக்கு விளைவிக்கும் அபராதத்தண்டனையை விதிக்கும்படி ஒருவேளை நான் கேட்டுக்கொள்ளலாம். அஃது எனக்கு அத்துணைக் கெடுதியைத் தராது. ஆனால் யான் வறியவன் என்னிடம் பொருள் அதிகமாகக் கிடையாது என்னிடம் இருப்பதெல்லாம் ஒரு மைனா * வெள்ளிதான் ஆகலால், ஒரு மைனா அபராதம் விதிக்கும்படி நான் கேட்பேன் என்னருகுள்ள ப்ளேடோ முதலிய எனது நண்பர்கள் இவ்வபராதத்தொகையை முப்பது மைனாவாக உயர்த்தும்படி என்னை வேண்டுகின்றார்கள், அவர்களே அந்தத்தொகையைச் செலுத்துவதாகவும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகலின், 30 மைனா அபராதத்தை மரணதண்டனைக்கு பதிலாகக் கூறி, உங்களுடைய தீர்மானத்திற்கு அதை விட்டுவிடுகிறேன்." என்று வெண்கலக்கடையில் மதயானை புகுந்ததுபோல வாய்க்கூசாது தடதடவென்று ஸாக்ரடீஸ் பேசினார்

இவ்வசனங்களைக் கேட்டதும், சபையோருக்குக் கோபத்தீ மூண்டது நகரத்திற்குச் சிறந்த நன்மைகளைச் செய்தோர்க்கு, ஆதன்ஸ்வாசிகள் தமது நன்றியறிதலைக் காட்டும்பொருட்டு, அவரை நகரப்பொதுமாளிகையில் வசிக்கச்செய்து, நகரப் பொதுச்சரக்கறையிலிருந்து அவருக்கு வேண்டிய பொருள்களைச் செலவிற்கு அளிப்ப

* Mina=A Greek unit of value equivolent to 100 drachmas or 100 Shillings=Rs 75

ருண்டு ஸாகரடீஸ குறறவாளியெனறு தீரமானிக்கபபட்டும, பணிவுடன தமது தணடனையைக குறைககுமபடி மனறுடிககேளாமல, நகரததுககு நனமைசெயதவருள ஒருவராகத தமமை மதிதது இவவாறு புகன்றது, சபையோரககு அடாத காரியமாகத தோறறியது. காவங கொணடு ஸாகரடீஸ நயாயசபையை நிநதிததாகச் சபையோா எணணஙகொணடனா ஸாகரடீஸ உரைததமாறுறஙகள, பளேடோ, கரைடோ முதலிய நணபாகளகாதில நாராசமபோல படவே, புணமேல வெநதீ நுழையத துடிககினறவாபோல துடிததனா, மனம பதைபதைததனா, ஆறறதுயாககடலுள அழுநதினா, சதருவலையில ஸாகரடீஸ தாமே போயசசிககிககொணடாரெனறு பரிதபிததாாகள தமமை உயாததிககூறுது, யாதொருபிடிஸைகயுமினறி, 30 மைனு அபராததணடனையை அடைவதாகஸாகரடீஸ ஒபபுககொணடிருநதால,சபையோா அதை அஙகீகாரஞசெயதிருபபாாகளெனபதறகுத தடையிலலை. சபையோரைச சிறிதும மதிககாது, தாமகொணட கருததைக கூசாமல ஸாகரடீஸ வெளியிடடபடியால, மரணதணடனையைத தாமே வரவழைததுககொணடாா எனறு கூறுவது சாலவும பொருநதும

வாதிகள கேட்டுககொணடபடி மரணதண்டனை விதிககபபடடது முனனிலும எணபதுபெயாகள அதிகமாகவே இததீரமானததை ஆமோதிததாாகள். விதிககபபட்ட தணடனையைக கேடட ஸாகரடீஸ, தமது தனமையில சிறிதும மாறவிலலை சபைமுனபாக முனனாக கூறிய மொழிகளுககாக ஒருசிறிதும அவா மனவருததமடையவிலலை சிறைசசாலைககுக கொணடுபோகபபடுதறகுமுன்

சபையோரை நோக்கி அவர் ஒரு சிறிய உபந்யாஸஞ் செய்தார். அவர் அருளிச்செய்ததாவது —

"நான் இதுகாறும் நடந்துகொண்டதும், அதன் விளைவும் எனக்குப் பூரண திருப்தியைக் கொடுத்தன. நான் காரியங்களை எண்ணித் துணிந்து செய்யும்போதும், யாதேனும் ஒன்றைப்பற்றிப் பேசப்புகும்போதும் ந்யாய வழியை விலகிச்சென்றால், அசரீரி அற்பவிஷயங்களிலும் என்னை இதுவரை தடுத்திருக்க, இன்று நான் இச்சபைக்கு வந்ததுமுதல் நான் பேசிமுடித்ததுவரை, ஒருதடவையேனும் அது என்னைத் தடைசெய்யவில்லை. இதுவரை என்னைத் தவறுகள் செய்யவிடாது, நல்வழிப்படுத்தி, எனக்கு வழிகாட்டிபோல நின்ற அது, யாதொன்றுஞ்செய்யாமல், இன்று என்னை விடுத்ததை உற்றுநோக்கினால், நான் சபையோர்முன் சொன்னவையாவும் சரியானவை என்பதும், எனக்கு விதித்த மரணதண்டனை எனக்கு நன்மையேபயக்குமென்பதும் வெளியாகின்றன. தற்காலத்தில் இறப்பே எனக்கு யாவற்றினும் மேன்மையைத் தரக்கூடியது. இறப்பென்பதைக் கனவற்ற அறிதுயிலுக்கு ஸமானமாகக் கொண்டால், அது கிடைப்பதால் எனக்கு லாபமேதவிர நஷ்டமில்லை. அவ்வாறன்றி, புராணக்கதைகளைக் கூறுகிறபடி, இறப்புப் புதியதோர் உலகில் (Hades) * புதியதோர் வாழ்வைத் தருகின்றதென்பதே உண்மை

* Hades— the abode of the dead conceived either as a dark and gloomy subterranean realm or as a remote island beyond the western ocean At its entrance was the three headed watch dog Cerberus, beyond was the stink, across which Charon the dark ferryman conducted the sonls of those who had been buried with due rites, while vet other rivers were Acheson, the river of woe, Phlegethon, the river of fire, Coeytus, of wailing, and in later myth, Lethe, the stream of forgetfulness. Hades and persephone presided over this realm, while Hermes acted as conductor thither of the souls of the dead

யாயின், அவ்வுலகிலுள்ள போர்வீரர்களுடனும் பிறமேன் மக்களுடனும் கூடிப் பழகி, நீதிசாஸ்திரங்களைப்பற்றி ஒருவரையொருவர் உசாவித் தொடைவிடைகளால் ஆராய்ச்சி செய்யலாம்.'

மரணத்தண்டனையைப்பற்றி ஸாக்ரடீஸ்கொண்ட கருத்து இதுதான். அவரை இழுக்கநேர்ந்த தருணத்தில், அவரது நண்பர்களுக்கு அந்நன்மை புலப்படாதபோதிலும், பிறகு அவ்வாறே அவர்கட்கும் தோற்றியது. விளையும் பயனை அறிந்துகொண்டே ஸாக்ரடீஸ் அவ்வண்ணம் பிரதிவாதம்செய்தார். கடவுள் தம்மை இவ்வுலகில் ஸ்ருஷ்டித்த காரணத்தையும், அஞ்சாமை, நெஞ்சுறுதி முதலிய தமது சிறந்த குணங்களையும் உலகத்தார்க்குக் கண்கூடாகக் காட்டுவதற்குத் தகுந்த இடமும் காலமும் அன்று அவர்க்கு வாய்க்கன. அந்நாள்வரை அதீனியாமகதியில ஞானச்சுடர்போல் விளங்கி, தமவாழ்நாள்முழுவதையும் அவர்கது நற்பயன்களை அளிப்பதிலேயே கழித்தவர், அன்று மரிக்கற்கஞ்சிப் பின்னிடைந்தால், அவரையாரேனும் மதிப்பாரோ? அபாயம் வருங்காலத்திலன்றோ பெரியோர்கள் தாம் கூறுவதை நடத்திக்காட்டிப் பிறருடைய வியப்பையும் மதிப்பையும் பெறுதல்வேண்டும். அப்பொழுதன்றோ, அப்பெரியாரது குணங்கள் மாசுநீங்கிய மணி போல, யாவராலும் போற்றப்பட்டுச் சிறந்து ஒளிரும்! காண்போர் கண்கூச வெஞ்சுடர்வீசி எங்கும் ஒளிபரப்பிய கதிரவன், ஒருகணத்திலே குடதிசைக்குளித்து மறைந்தாற் போல, சென்ற முப்பதாண்டுகளாகக் கூரறிவாலும் மனத்தூய்மையாலும் ஆதன்ஸ்நகரில் தமது புகழைப் பரப்பிநின்று விளங்கிய ஸாக்ரடீஸ், யாவரும் விசனிக்கத் தக்கவிதமாக, "கருங்கொண்மூ வாய்திறந்த மின்னலின" கடிதாகத் திடீரென்று தண்டிக்கப்பட்டு மறைந்தார்.

## 14-ஆம் அதிகாரம்

### சிறைச்சாலை.

[க்ரைடோவுக்கும் ஸாக்ரடீஸுக்கும் சிறைக்கோட்டத்தில் நடந்த சம்பாஷணை]

மரணதண்டனை விதிக்கப்பட்டபிறகு, வழக்கப்படி சிறைச்சாலையில், மறுநாளே, ஸாக்ரடீஸ், விஷத்தை அருந்தி இறந்திருக்கவேண்டும். திருவிழாவொன்று குறுக்கிட்டதனால், தண்டனையை நிறைவேற்றுவதற்கு முப்பதுநாட்கள் ஆயின. அவ்விழா, வருஷத்திற்கோர் முறை வெகுகளிப்புடனும் ஆடம்பரத்துடனும் அப்பாலோ (Appollo) என்ற தெய்வத்தை உத்தேசித்து, ஆதன்ஸ் நகரில் கொண்டாடப்பட்டது. அச்சமயத்தில், அதீனியர்கள் ஒருவங்கத்தை அலங்கரித்துச் சில சடங்குகளை நடத்தி, டீலாஸ் (Delos) என்ற நகரத்திற்கு யாத்திரைபோய்வரும்படி சில முக்யஸ்தர்களை அனுப்புவார்கள். அவர்கள் திரும்பிவர ஒருமதிசெல்லும். இதன்மத்தியில் நகரில் மரணதண்டனைகளை நிறைவேற்றுவது பெரும் பாவமென்று ஜனங்கள் கருதினார்கள். அதுபற்றி, ஸாக்ரடீஸ் திங்களொன்று சிறையில் இருக்கவேண்டியதாயிற்று. பார்த்தோரது மனம்புண்படுமாறு, அவரதுகாலில் விலங்கிட்டு அவரைக் கடுங்காவலில் வைத்தனர். அவரது நண்பர்பலர், சிறையில் அவருடன்கூடவே இருந்து காலங் கழித்துவந்தார்கள். தப்பியோடி அயல்தேசம்போய்ப் பிழைக்கும்படி நண்பர்கள் பன்முறை இவரை வேண்டினார்கள். அவரது உயிர்த்தோழராகிய க்ரைடோ, சிறைக்

காவலருக்கு வேண்டிய பொருளளித்து ஸாக்ரடீஸைத் தப்புவிக்க ஏற்பாடு செய்து முடித்தார். அவ்வடாத காரியத்தைச் செய்வது தமக்கு அடுக்காதென்று ஸாக்ரடீஸ் பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டாராதலால், அது நிறைவேறுவதற்கு வழியில்லாமற் போயிற்று. நியாயசபையோர் முன் பலவாறாகத் தம்மை மீக்கூறித் தம்மினும் சிறந்த நியாயவான்கள் எவருமில்லையென்று நிலைநிறுத்திய ஸாக்ரடீஸ், நிந்தைக்கிடமாகும் அப்புன்தொழிலைச் செய்து தமக்கு இரவிமதியுள்ளளவும் இழிவையும் பழிப்பையும் விளைவித்துக்கொள்வாரோ?

பன்னெடுநாளாய் அவர்க்கு இன்பமும் ஊக்கமும் அளித்தது, ஜனசமூகத்திற்குரிய விஷயங்களையும் நீதிவிஷயங்களையும்பற்றிய ஆராய்வல்லவா? அவ்வித ஆராய்ச்சியிலேயே, இவர் சிறையிலிருக்க நேர்ந்த முப்பது நாள்களும் கழிந்தன. ஒவ்வொருநாட்காலையிலும் அவரது மனைவி புத்திரர் நண்பர் முதலியோர் அவருடன்கூடிப் பல விஷயங்களைப்பற்றி ஸம்பாஷித்துவந்தனர். சிறையில் தாம் தனியாயிருந்த காலங்களில் தெய்வத்தின்மேல் (Apollo) தோத்திரப்பாக்கள் கட்டியும், ஏஸாபஸ் (ÆSops) எழுதிய கற்பிதக்கதைகளைச் செய்யுட்படுத்தியும் விநோதமாகப் பொழுதுபோக்கினார். அதுவரை அவர் செய்யுளமைக்கப் பயிலவேயில்லை; இத்தருணந்தான் அவர் முதன்முதல் பயின்றார். அதுவே அவரது கடைசிப்பயிற்சியாகவும் ஆகிவிட்டது. ஆத்மாவின் நித்யத்தைப் பற்றி ஸாக்ரடீஸுக்கும் ஸிம்மியஸ் (Simmias), கேபீஸ் (Kebes), பேடோன் (Phaedon) முதலியோர்க்கும் சிறைச்சாலையில் சம்பாஷணை நடந்ததாகப் பிளேட்டோ தமது புஸ்தகத்தில்

கூறுகிறார். அஃது, உண்மையாகப் ப்ளேடோ கூறுவது போல் நடந்ததோ அன்றோ நமக்குத் தெரியாது. அதிற் காணப்படுகிற விஷயங்களும் கொள்கைகளும் பெரும்பாலும் ப்ளேடோவுடையவை யென்பர் பலர் சாதிக்கிறார்கள். அஃது எவ்வாறாயினுமாகுக. ஸாக்ரடீஸ் தமது மரண தசையிற் காட்டிய மனவமைதியும், மனவுற்சாகமும் ப்ளேடோவைப் படிப்போர் ஒவ்வொருவருக்கும் நினைக்குந்தோறும் நெஞ்சிலெழும். அவர் காலிற் றளைபூண்டு கிடப்பதும், அழுத கண்ணும், சிந்திய முகமும், புண்பட்ட நெஞ்சமும் பொருந்திய நண்பர்பலர், அவரை நிழல் போல் தொடர்ந்து சூழ்ந்து அரற்றுவதும், மகாசாந்த குணசீலராய்ப் பொறுமையுடன் யாவற்றையும் அடக்கிக் கொண்டு பற்றற்ற மனத்துடனும் மந்தஹாஸ முகத்துடனும்; அரற்றுகின்ற நண்பரைத் தேற்றி, இதுவரை நடந்தவையெல்லாம் நியாயமானவை யென்றும், மரணதண்டனை தமக்கு நன்மையையே பயக்கின்றதென்றும் அவர் எடுத்துப் புகல்வதும், சாந்துணையும் மனிதரின் அபிவிருத்திக்குரியவைகளில் அவர் தமது அவாவைக் காட்டுவதும், அம்மகானிடத்திற் பக்திபூண்ட ஒவ்வொருவரது மனதிலுமெழாநின்று உள்ளுதோறுள்ளுதோறுள்ளமுருக்கும். இவ்விதமாக ஸாக்ரடீஸ் தமது மீதிக்காலத்தைச் சிறைச்சாலையிற் கழித்தார். நாட்செல்லச்செல்ல, அவரது நண்பர்களின் துயரம், "அல்குநிழற்போல்* அகன்றகன்று" ஓடிற்று. க்ரைடோவின் துக்கத்திற்கோ அளவில்லை. தப்பியோடி உயிர்பிழைக்குமாறு ஸாக்ரடீஸை அவர் மீண்டும் மீண்டும் மன்றாடிக்கேட்டுக்கொண்டாலும், அவர் அதற்கு

---

* அல்குநிழல்—சாயங்காலத்து நிழல், நாலடியார்.

உடன்படவில்லை. கடைசிமுறை இருவர்களும் தப்பியோடு வதைப்பற்றி ஒரு சம்பாஷணை நடந்தது. அதைப் படிப்ப வர்க்கு, ஸாக்ரடீஸின் குணங்கள் நன்கு விளங்கும். ஆதலின், அதை ஈண்டு எழுதுவோம்.

## சிறைச்சாலையில் ஸாக்ரடீஸூக்கும், க்ரைடோவுக்கும் நடந்த சம்பாஷணை.

ஸாக்ரடீஸ்—இவ்வேளை ஏன் இங்கு வந்தாய்? க்ரைடோ! இப்போது அதிகாலையல்லவா?

க்ரைடோ—ஆம், அதிகாலைதான்.

ஸாக—இப்போது உத்தேசமாய் மணி என்ன இருக்கும்?

க்ரை.—விடிகிற சமயந்தான்.

ஸாக்—நீ உள்ளே வருவதற்குச் சிறைக்காவலன் உடன்பட்டது மிக்க வியப்பைத் தருகின்றது.

க்ரை—நான் பலமுறை இங்கு வருவதனால் என்னை அவன் நன்றாயறிவான், இதுவன்றி, அவனுக்கு ஒருதவியும் செய்துள்ளேன்.

ஸாக்—நீ வந்து நாழிகையாகிவிட்டதோ?

க்ரை.—ஆம், சிறிது நேரமாயிற்று.

ஸாக்—ஆயின், ஏன் பேசாது வீற்றிருந்தாய்? ஏன் என்னை உடனே எழுப்பலாகாது?

க்ரை.—ஸாக்ரடீஸ், உண்மையாகவே யான் இப்பொழுது அடைந்திருக்கும் துயிலின்மையையும், துக்கத்தையும் ஒழித்தல் எனக்கு விருப்பமே ஆயினும், தாங்கள் எவ்வளவு அமைதியுடன் துயிலுகின்றீர்களென்பதை உற்றுநோக்கி வியந்துகொண்டிருந்தேன். தங்கள் தூக்கத்தைக் கெடுக்க மனமின்றித் தங்களை எழுப்பாது வாளா இருந்தேன். தங்கட்கு வாழ்நாள் முழுவதும் மனவமைதி தீர்க்கமாயுள்ளதென்பதை இதற்குமுன்பும் பன்முறை நான் உணர்ந்திருக்கிறேன். இப்போது தங்களுக்கு நேரிட்டிருக்கிற கொடுந்துயரை எவ்வளவு இலேசாயும் அமைதியுடனும் தாங்குகிறீரென்பதைப் பார்க்க, முன்னிலும் அதிகமாகத் தங்களை மதிக்கிறேன்.

ஸாக்.—அப்படியில்லை, க்ரைடோ! என்னுடைய வயதில் சாவதற்கு வருந்தினால் மிகவும் கேவலமாயிருக்கும்.

க்ரை.—ஸாக்ரடீஸ்! உம்மைப்போல முதியவர்கள் கேட்டை அடைந்ததுண்டு, ஆயினும், அவரது முதுமை, (சாவுக்கு வருந்தி) விதியைக் கடிந்துகூறுதலினின்றும் அவரைத் தடுக்கவில்லை.

ஸாக்.—அது வாஸ்தவந்தான், நீ ஏன் இவ்வளவு சீக்கிரம் இங்கு வந்தாய்? சொல்.

க்ரை.—நான் ஒரு துக்ககரமான செய்தியைக் கொணர்ந்திருக்கிறேன். உமக்கு அது துக்ககரமாகத் தோற்றாது எனக்கும் உம்முடைய நண்பரனைவருக்கும் அது மிகுந்த துக்கத்தையும் மனவருத்தத்தையும் தருகின்

றது எனக்குக் கொடுப்பதுபோல மற்றெவர்க்கும் பிருந்த வருத்தத்தை அது கொடாதென்பது என் துணிபு.

ஸாக்.—அதென்ன? டேலாஸ் (Delos) நகரத்தி லிருந்து கப்பல் வந்ததும் நான் இறக்கவேண்டுமென்று சொன்னர்களே, அது வந்துவிட்டதோ?

க்ரை.—இல்லை, அது இன்னும் இங்கு வந்துசேர வில்லை. சுனியம் (Sunium) என்ற நகரில் அக்கப்பலை விட்டு வந்த சிலரது கூற்றால், அது இன்று வருமென்று எண்ணுகிறேன். அவர்மொழியால், அது இன்று இங்கு வந்துசேருவது நிச்சயம் என்று தெரிகிறது. நாளை உமது ஆயுள் முடியவேண்டிவரும்.

ஸாக்.—சரி, க்ரைடோ! தெய்வானுகூலத்தால் முடியட்டும். தெய்வங்கட்கு மனதிருந்தால் அப்படியே நடக்கட்டும். ஆயினும், கப்பல் இன்று இங்கு வருமென்று எனக்குத் தோற்றவில்லை.

க்ரை.—ஏன் வராதென்று நினைக்கிறீர்?

ஸாக்.—சொல்லுகிறேன், நான் கப்பல் வந்துசேர்ந்த மறுநாள் இறக்கவேண்டுமன்றோ?

க்ரை.—அதிகாரிகள் அப்படித்தான் சொல்லுகிறார்கள்.

ஸாக்.—அப்படியாயின், கப்பல் இன்று வருமென்று எனக்குத் தோன்றவில்லை, நாளைத்தான் வரும். இரவில் சற்றுமுன்பு நான் கண்ட கனவால் எனக்கு அப்படித் தெரிகிறது. நீ என்னை எழுப்பாதது நன்மையென்றே நினைக்கிறேன்.

க்ரை — நீர் கண்ட கனவென்ன?

ஸாக் — வெள்ளைக்கலைகளைத் தரித்த வனப்புமிக்க மாது ஒருத்தி என்னை அணுகி, 'ஸாக்ரடீஸ்! நாள் மூன்றில் நம் ஊர் புகுவீர்' என்று சொன்னதாகத் தோற்றிற்று.

க்ரை — என்ன ஆச்சரியமான கனவு, ஸாக்ரடீஸ்!

ஸாக் — ஆயினும், அக்கனவின் பொருள் என்மட்டில் நன்கு விளங்குகின்றது.

க்ரை — ஆம் தெளிவாக எனக்கும் தோற்றுகிறது. ஆதலின், ஸாக்ரடீஸ்! உத்தம! என் வார்த்தையைக் கேட்டு உமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள, உம்மைக் கடைசி முறையாக வேண்டுகிறேன். எனக்கு உம்முடைய இறப்புப் பலவிதத்திலும் துயர் தருகின்றது. எங்கும் காணுதற்கரிய ஒருநண்பரை நான் இழப்பதுமன்றி, பணத்தைச் செலவுசெய்யச் சித்தமாயிருந்தால் உம்மைக் காப்பாற்றியிருக்கலாம் நான் அப்படிச்செய்யாதொழிந்தேனென்று, உம்மையும் என்னையும் அறியாத பலர், என்னைப்பற்றி விபரீதமாக எண்ணும் எண்ணங்களுக்கும் ஆளாவேன். நண்பர்களை மதியாது பணத்தையே போற்றும் குணத்தைவிட இழிந்ததெது? உம்மைக் காப்பாற்ற மிகுந்த ஆவல் எங்களுக்கு இருந்தும் முயன்றும், நீரே சிறையை விட்டுத் தப்பிப் போட மறுத்தீரென்பதை உலகம் ஒருபோதும் நம்பாது.

ஸாக் — உயர்குணத்தோனே! க்ரைடோ! உலகத்தாரது அபிப்ராயத்தை நாம் ஏன் அவ்வளவு மதிக்க வேண்டும்? நாம் யாருடைய அபிப்ராயத்தைப் போற்ற வேண்டுமோ, அம்மேன்மக்களெல்லாம், நாம் சரியான வழியில் நடந்தோமென்றே ஒப்புக்கொள்ளுவார்கள்.

கரை — ஆயினும், ஸாக்ரடீஸ், உலகத்தின் அபிப்ராயத்தைக் கவனித்தலும் அவச்யமென்பது உமக்குத் தெரிந்ததுதான். ஜனக்கூட்டத்தின்முன் சாட்டப்பட்ட பொய்க்குற்றமும், ஒருவனுக்குச் சிறியதன்றிப் பெரிய தீங்கையும் விளைவிக்கும் என்பதை, உமது விஷயமே மெய்ப்பிக்கின்றது.

ஸாக். — கரைட்டோ, ஜனக்கூட்டத்தினது அபிப்ராயம் ஒருவனுக்கு மிக்க தீங்கை விளைவிக்கக்கூடுமாயின், அவ்வபிப்ராயமே ஒருவனுக்கு மிக்க நன்மையையும் விளைவிக்கக்கூடுமென்பது எனது எண்ணம். இது மேதக்கதே. ஆனால், அவர்களால் இரண்டும் ஆவனவல்ல. ஒரு மனிதனை அறிவாளனாக்குதலும் அறிவிலியாக்குதலும் அவரால் இயலாது. மனதிற்குத் தோன்றியவாறு அவர்கள் நடக்கின்றார்கள்.

கரை — சரி, அவ்விதமே இருக்கட்டும். எனக்கு இதைச் சொல்லும் உண்மையாகவே, என்னைப் பற்றியும், உமது பிற நண்பர்களைப் பற்றியும் உமக்கு விசாரமிருக்கிறதன்றோ? 'நாங்கள் உம்மைத் திருட்டுத்தனமாக வெளியேற்றிவிட்டோமென்று அறிவிப்பார்கள், அதனால் எங்களுக்கு விபத்து நேரிடும், பணச்செலவு வரும், ஒருவேளை எங்கள் ஆஸ்தியெல்லாம் இழக்கவேண்டிவரினும் வரும், பின்னும், அதனுடன் வேறு தண்டனைகளுக்குள்ளானாலும் ஆவோம்' என்று பயப்படுகிறீரல்லவா? அவ்வித அச்சமிருப்பின் அதனை ஒழித்துவிடும். அவ்விதமான கஷ்டங்களுக்குள்ளாக நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அவசியமானால், உம்மைக் காப்பாற்றுவதில் இன்னும் பெரிய துன்பங்கள் வரினும் அவைகளுக்கும் உள்ளாகச்

சித்தமாயிருக்கிறோம். ஆதலின், எனது வார்த்தையைக் கேட்டு நடக்க மறுக்காதீர்.

ஸாக்—எனக்கு இது விஷயமாகவும் கவலையுண்டு. க்ரைடோ! வேறு பல விஷயங்களைப் பற்றியும் கவலையுண்டு.

க்ரை—இருந்தால் அதைப்பற்றிப் பயப்படாதீர். அதிகப் பணம் கேளாமல் உம்மைச் சிறையினின்றும் வெளியேற்றிக்கொள்ளும் மனிதர்கள் சித்தமாயிருக்கிறார்கள். வெளியேறிய பிறகு, பணத்தைக் கொடுத்து ஒற்றர்களை லகுவாக நம்பக்கல் சேர்த்துவிடலாம். அவர்களுக்கு ஊதியம் அதிகமாகக் கொடுக்கவேண்டுவதில்லை என்பதை நீரே அறிவீர். என் ஆஸ்தியெல்லாம் நும்பொருட்டிருக்கின்றன. அது போதுமென்றே நினைக்கிறேன். என் பணத்தைச் செலவிடுவதில் தங்களுக்கு ஏதேனும் மனமொவ்வாதாயின், தமது சொந்த நகரத்தைவிட்டு இவ்வாதன்ஸ் நகரில் வசிக்கும் உமது நண்பராகிய பரதேசிகள் பலரும் அவரவர் பணத்தைச் செலவிடச் சித்தராயிருக்கிறார்கள். அவருள் தீபஸ் நகரத்து ஸிம்மியஸ் (Simmias of Thebes) என்றவொருவர் இதற்கென்றே ஏராளமான பணம் கொணர்ந்திருக்கிறார். இன்னும் கேபீஸ் (Cebes) முதலிய பலரும் இங்ஙனஞ்செய்ய ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆதலின், மேற்கூறிய காரணத்தைக்கொண்டு உம்மைக் காப்பாற்றிக்கொள்வதினின்றும் பின்வாங்காதீர். 'நாட்டைவிட்டுப் போகச் சொன்னால் நான் என்ன செய்வது என்பது எனக்கே தெரியாது' என்று நியாயாதிபதிமுன் தாங்கள் முன்பு சொன்னது தங்களைத் தடைசெய்யாதொழிக. ஏனெனில் தாங்கள் செல்வதற்கு எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. அவ்விடத்தாரெல்லாம் தங்களை

தலைவர்வேற்று ஆதரிப்பார்கள் தேஸ்ஸலீ(Thessaly) என்னும் தேசத்துக்குப் போகச் சம்மதித்தால், அங்கு என் நண்பர்கள் பலர் இருக்கின்றனர் அவர்கள் உம்மை நன்கு பாராட்டிக் கொண்டாடுவார்கள், அவ்விடத்துள்ள ஜனங்களால் உமக்குத் துன்பம் வராது காப்பாற்றுவார்கள். இது நிற்க

"ஸாக்ரடீஸ், உம்முயிரைக் காப்பாற்ற வழி இன்னுமிருக்கவும் அதைத் துறப்பது, நீரே உமக்குத் தீமைசெய்வதாகுமென்று எண்ணுகிறேன் உம்முடைய விரோதிகளின் வழியைப்பற்றியே நீர் நடக்கின்றீர். நீர் செல்லும் வழி உம்மைக் கெடுக்க நினைக்கிறவர்களின் வழியே. இது மட்டுமன்று, உம்முடைய குழந்தைகளை நீர் கைவிடுபவராகக் காணப்படுகிறீர் நீர் குழந்தைகளை வளர்த்துப் படிப்பிக்கவேண்டியிருக்க, அவர்களை விதிவசம் ஒப்பிக்கின்றீர் அவர்தலைவிதி, பெற்றோரில்லா அநாதக்குழந்தைகளின் கதியைப்போலவே முடியும் குழந்தைகளைப் பாடுபட்டு வளர்த்துப் படிப்பிக்கச்சித்தராயிருந்தாலொழிய, நீர் குழந்தைகளைப் பெற்றிருத்தல் கூடாது உமது வாழ்நாள்முழுவதும் நன்னடையைப்பற்றி மிகுத்துக்கூறியும், நீர் நல்வழியிற்செல்லும் திடங்கொண்ட புருஷன் போகும் வழியைப் பறந்து விடுத்து, இலேசான ஒரு வழியைத் தேடுகிறீரென்று எனக்குத் தோன்றுகிறது நான் சம்பந்தப்பட்டமட்டில், உமக்காகவும் உமது நண்பர்களான எங்கட்காகவும் வெட்கப்படுகிறேன் விசாரணைக்கு வரவேண்டியதே அவசியமில்லாததாயிருக்க, நீர் நியாயஸ்தலத்திற்கு வந்தது, விசாரணை நடந்த விதம், கடைசியாக எல்லாவற்றிற்கும் கேவலமான உமது தற்காலநிலைமை

ஆகிய உமக்கு நேர்ந்த இவையெல்லாம் எமது அச்சத்தால் உண்டானவை என்று ஜனங்கள் கருதுவார்கள். இக்கொடுந்துன்பத்தினின்றும் உம்மை விலக்காமல் நாங்கள் கேவலம் அச்சத்தினால் பின்வாங்கியதாகப் பிறர்க்குக் காணப்படும், ஏனெனில், நாங்கள் உம்மைக் காப்பாற்றக் கூடவில்லை. முடிந்தவரை எம்மைக்கொண்டு உம்மைக் காப்பாற்றிக்கொள்ள வழியிருக்க, நீர் அப்படிச்செய்யாதொழிகிறீர். ஸாக்ரடீஸ்! ஜாக்ரதை! இவை உமக்குத் தீமையை விளைத்தலோடு, உமக்கும் எமக்கும் அவமானத்தையுங் கொணரும். ஆதலின், செவ்வனே ஆராய்ந்து பாரும், இல்லை. யோசித்துப்பார்க்கும்வேளை சென்றுவிட்டது நாம் இப்போது ஒருமுடிவுக்கு வருவது அவசியம். ஒரேவழி தான் நமக்கு இப்போது உள்ளது. அவ்வழியைப்பற்றிய எல்லாம் இன்றிரவே செய்தல்வேண்டும். இனித் தாமதித்தால் நமது குடி முழுகிப்போகும். ஸாக்ரடீஸ்! என்சொற்படி நடப்பதை மறுக்காதிருக்க உம்மை வருந்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸாக்.—என் அன்பிற்குரிய நண்ப, க்ரைடோ, என்னைக் காப்பாற்றுவதிலுள்ள உன் விசாரம் நல்வழியதாயின் மிகச்சிறந்ததே. நல்வழியதல்லாதாயின், அது பின்னும் பெருங்கேட்டை விளைக்கும், ஆதலின், நீ சொல்லுவது போலச் செய்தல்வேண்டுமோ, வேண்டாவோ என்பதைப் பற்றி உசாவுவோம். இதுவரை இருந்ததுபோலவே இப்பொழுதும் நான் என் பகுத்தறிவின்படி நடப்பேனேயன்றி, வேறொருவர் வார்த்தையையும் கேட்பேனல்லேன். ஆலோசித்துப்பார்த்தால், அதுவே நல்வழியென்று எனக்குப் படுகிறது. எனக்கு இந்த ஆபத்து வந்ததனால் நான்

முன் கொண்ட கொள்கைகளைத் தள்ளமாட்டேன். அவை முன் தோன்றியவாறே இன்றும் உண்மையானவையென் எனக்குத் தோற்றுவதனால், நான் அவைகளை நன்குமதித்துப் போற்றுகின்றேன். பேய்க்கதைகளைக் கூறிக் குழந்தைகளை வெருட்டுவதுபோல், ஜனக்கூட்டம் தம் அதிகாரத்தால் நூதன பயங்கள் காட்டி, நம்மை வெருட்டி, நமக்குப் புதிய அபராதங்களை விதித்து, நம்மைச் சிறைப்படுத்தி, மரணதண்டனைக்குள்ளாக்கினும், நான் கொண்ட கொள்கையை மாற்றுவதற்குத் தகுந்த காரணம் ஏற்பட்டாலொழிய, உன்னுடைய யோசனையை ஒருபோதும் ஏற்கேன். இந்நிலைமையில் நம்மிருவருக்கும் உள்ள வ்யவகாரத்தைப்பற்றி இப்பொழுது ஆராய்வது எங்ஙனம்? ஆயினும், மனிதரின் அபிப்பிராயங்களைப்பற்றிச் சற்று முன்பு நீ கூறியதை முதலில் எடுத்துக்கொள்வோம். அவர்களுடைய அபிப்பிராயங்களுள் சிலவற்றைக் கவனிக்கவேண்டுமேயன்றி, மற்றவைகளைக் கவனித்தல் அநாவசியம் என்று நாமிருவரும் முன்னம் கொண்டிருந்த கொள்கை சரியா என்று ஆராய்வோம். எனக்கு மரணதண்டனை விதிக்கப்படுமுன், நாம் அப்படிக்கொண்டது சரியாக இருந்ததே இப்போது மனதுக்குத் தோன்றியவாறு பேசி, வழக்குக்காக வாதாடவேண்டுமேயென்று வாதாடி, முன் கூறியதெல்லாம் விளையாட்டில் உரைத்த வெற்றுரையென்றால், அது நமக்குப் பொருந்துமோ? க்ரிடோ, உன்னுடைய உதவியைக்கொண்டு, நமது பழைய கொள்கைகளையெல்லாம் ஆராய்ந்து, என் தற்காலநிலைமை எவ்விதத்திலேனும் அவற்றின் உண்மையை மாற்றினதாகத் தோற்றுகிறதோ என்றுபார்த்து, அவற்றை நாம் முற்றிலும் நீக்கவேண்டுமோ, அல்லது கைக்கொள்ளவேண்டுமோ என்று

கவனிக்க அவாவுகிறேன். நான் சற்றுமுன்பு சொல்லியபடியே, மனிதர்கள் மேன்மையாகக் கொண்டாடும் சில அபிப்பிராயங்களைப் பாராட்டவேண்டுமேயன்றி, மற்றவைகளைப் பாராட்டவேண்டுவதில்லையென்று ஆராய்ச்சியிற் சிறந்த நம்மவர்கள் என்றுஞ் சொல்லுவது வழக்கம். க்ரைடோ, தயவுசெய்து நீயே சொல். அவர்கள் சொல்வது உண்மையன்றோ? மநுஷ்யயத்தனப்படி நீ நாளை சாகவேண்டிய நிலையில் இல்லை. ஆதலால், உன்னுடைய தீர்மானம் ஒருசார்புடையதாகாது. ஆதலின், நன்றாக நிதானித்துப் பார். 'நாம் மனிதருடைய எல்லாக் கொள்கைகளையும் மதிக்கவேண்டுவதில்லை, சிலவற்றையே மதிக்கவேண்டும்; அன்றியும், எல்லா மனிதருடைய கொள்கைகளையும் மதிக்கவேண்டுவதில்லை, மேதாவிகளான சிலருடைய கொள்கைகளையே மதிக்கவேண்டும்' என்று தீர்மானித்துச் சொல்வது உனக்கு நியாயமாகத் தோற்றவில்லையா? நீ என்ன நினைக்கிறாய்? நான் சொன்ன இஃது உண்மையன்றோ?"

க்ரை.—ஆம், உண்மைதான்.

ஸாக்.—நாம் நல்ல அபிப்பிராயங்களை மதிக்கவேண்டுமேயன்றி, உபயோகமற்றவைகளை மதிக்கவேண்டியதில்லையன்றோ?

க்ரை.—ஆம்.

ஸாக்.—அறிஞருடைய அபிப்பிராயங்களே நல்லவையாயும், அறிவிலோரது அபிப்பிராயங்களே பயனற்றனவாயும் இருக்கின்றனவல்லவா?

க்ரை.—உண்மைதான்.

ஸாக்.—அதைப்பற்றி நாம் முன் என்ன சொல்லிக் கொண்டிருப்பது வழக்கம்? தேகப்பயிற்சி செய்வோனொருவன், தன் காயத்தில் கண்ணுள்ளவனையின், மற்ற மனிதரின் புகழ்ச்சி இகழ்ச்சி அபிப்ராயங்களைக் கவனிக்கிறானோ? அன்றி, தன்னைப் பயிலுவிப்போன் அல்லது மருத்துவனாகிய ஒருவனுடைய புகழ்ச்சி இகழ்ச்சி அபிப்ராயங்களைக் கவனிக்கிறானோ?

க்ரை.—அந்த ஒருவனுடைய அபிப்ராயத்தைத்தான் அவன் கவனிக்கிறான்.

ஸாக்.—அது உண்மையாயின், இவ்வொருவனுடைய குறைகூறுதலுக்குப் பயந்து, அவனுடைய புகழ்ச்சியைப் பரிவுடன் ஏற்கவேண்டுமேயல்லாது, பிறருடைய கூற்றைக் கவனிக்கவேண்டியதில்லையன்றோ?

க்ரை.—அது வெளிப்படை.

ஸாக்.—பின்பு, பிறர்கட்டளைப்படி நடக்காது, தன் யஜமானனும் விஷயத்தை நன்குணர்ந்தவனுமாகிய அவ்வொருவனது கட்டளைப்படி நடக்கவும், பயிலவும், உண்ணவும், குடிக்கவும் வேண்டுமல்லவா?

க்ரை.—அப்படிச் செய்யவேண்டியதுதான்.

ஸாக்.—நல்லது. இந்த ஒருவனுக்குக் கீழ்ப்படியாது அவனுடைய அபிப்ராயத்தையும் புகழ்ச்சியையும் கவனியாது, விஷயமொன்றையுமுணராத பலரோர் கூற்றைப் போற்றுவதனால், அவன் கேட்டுக்குள்ளாவானல்லவா?

க்ரை.—ஆம், உள்ளாவான்.

ஸாக —அவன எவவிதம துனபுறுவான? எநதவழி யில? தனனுடைய எநதபபாகததில?

க்ரை —என? சரீரததிலதான. சரீரம தளாசசியடையும

ஸாக —நீ சொலவது சரியே சுருககச்சொலலின, இதுபோலனறே மறறெலலாவறறினுமா? ஆதலின, 'எது சரி, எது பிழை; எது கீழமை, எதுமேனமை, எதுநனமை, எது தீமை எனறவிசாரஙகளில, நாம பலலோரின அபிப ராயததைத தழுவி, அதறகுப பயபபடுதலவேணடுமோ? அலலது, இவறறை நனகுணாநத ஒருவன நமககுக கிடைப பனாயின, அவனது அபிபராயததைப போறறி, பிறா முனனிலையினும அவனமுனனிலையில வெடகமும பயமும காண்பிககவேணடுமோ? இவவாறு அவவொருவன குறித தவழியிற செலலாவிடின, நாம சொலலுகிறபடி நலலவற றால வளாசசியும தீயவறறால தளாசசியும அடைகிற நம முடைய பாகததை ஊறுசெயது முடமாககுவதாகும இது சரியனறோ?

க்ரை —சரிதான் ஸாகரடீஸ! நீா சொலவது எனக கும் உடனபாடே

ஸாக் —ஒனறுநதெரியாதவாகளின 'அபிப்ராயங்க ளைக் கவனிப்பதனால, ஆரோககியததால வருநதியும், வியாதியால் ஊனமும ஆகிற நமமுடைய பாகததை ஊறு செயவதாகுமெனறால, ஊறு அடைநதபின உயிாவாழ தல தகுதியோ? ஊறடைவது சரீரமனறோ?

க்ரை.—ஆம

ஸாக் —சரீரம ஊனமாகிக கெடடநிலையிலிருகக, உயிர்வாழவது தகுதியோ?

க்ரை —இல்லை, ஒருபோதுமில்லை.

ஸாக —அப்படியாகில், நீ பவற்றால் ஊறும், நல்ல வற்றால் ஆரோக்யமும் அடைகிற நம்முடைய பாகம் ஊன மாகிவிட, நாம் உயிர்வாழ்தல் தகுதியோ? அல்லது, ஆ எதுவாயிருந்தாலுஞ்சரி, நன்மை தீமையோடு சம்பந்தப் பட்ட நம்முடையபாகத்தைச் சரீரத்தைவிடப் பயனற்ற தென்று கருதுகின்றாயோ?

க்ரை —இல்லை, ஒருபோதுமில்லை

ஸாக —அன்றி, அதிகப்பயனுள்ளதென்று கருதுகிறாயோ?

க்ரை —ஆம் அதிமாகவே பயனுள்ளதாகத்தான் கருதுகிறேன்

ஸாக —அப்படியாகில், என் உயர்நண்ப! பலர் நம் மைப்பற்றிச் சொல்வதை நாம் அவ்வளவு கவனிக்க வேண்டுவதில்லை நன்மைதீமையை அறிந்த அவ்வொரு வனும் சத்யமும் நம்மைப்பற்றிச் சொல்வதை நாம் கவ னித்தல் முக்யம் ஆதலின், ந்யாயம், கண்யதை, நன்மை, இவற்றிற்கு எதிரிடை, இவைகளைப்பற்றி ஜனக்கூட்டத் தார் கொள்ளும் அபிப்ராயத்தை ஏற்றுக்கொள்ளும்படி என்னை நீ அழைத்ததில் ஆரம்பத்திலேயே பிழைபட்டாய். இன்னும், ஜனக்கூட்டத்தார் நம்மைக் கொன்று விடலா மென்று சொல்லலாமல்லவா?

க்ரை —ஆம், அது வெளிப்படை, அப்படிச் சொல்ல லாம், ஸாக்ரடீஸ!

ஸாக் —உண்மைதான் ஆயினும், என் உயர்நண்ப! இப்போது சற்றுமுன் நாம் கொண்ட முடிவும், முற்காலத்

களில் நாம் கொண்ட முடிவும் ஒன்றென்றே எனக்குத் தோற்றுகின்றது. 'கேவலம் வாழ்க்கைமட்டும் நமக்கு மதிக்கப்படுவதன்று, நல்வாழ்க்கையே யாவற்றிற்கும் உயர்ந்ததாக நாம் மதிக்கவேண்டும்' என்று நாம் முன் கொண்ட கொள்கையை இன்னும் கடைப்பிடிக்கிறோமோ என்பதைக் கவனித்துப்பார்.

க்ரை —ஆம், நாம் கடைப்பிடிக்கிறோம்.

ஸாக் —நன்றாய் வாழ்தல், கண்ணியமாய் வாழ்தல், ந்யாயவழியில் வாழ்தல் எல்லாம் ஒன்றுதான் நாம் இதைக் கைக்கொள்ளுகிறோமோ? இல்லையோ?

க்ரை.—நாம் கைக்கொள்ளுகிறோம்.

ஸாக் —இவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அதீனியர்களின் ஸம்மதமின்றிச் சிறையினின்றும் தப்பியோட முயலுதல் எனக்குச் சரியா, அல்லது தவறா என்பதைப்பற்றி விசாரிப்போம், அது சரியென்று கண்டால், நாம் அப்படிச் செய்ய முயல்வோம் அன்றேல், அவ்விதம் செய்யாதொழிவோம் நீ கூறிய பணவ்யயம், கீர்த்தி, மகவு வளர்த்தல் முதலிய காரணங்களெல்லாம் பலராகிய நம்முடைய நண்பரது மனத்தில் உதித்தனவேயாம். அவரோ மனிதரை இலேசாய் வதைப்பவர் கூடுமாயின், அவர் யோசனையின்றி அவ்வளவு இலேசாய் மனிதரை உயிர்ப்பிக்கவுஞ் செய்வர் ஆனால், நமக்கு வழிகாட்டியாயிருக்கும் பகுத்தறிவோ, நான் சற்றுமுன் கேட்ட கேள்வியைத்தவிர யாதொன்றையும் கவனிக்கவேண்டியதில்லையென்று எனக்கு அறிவிக்கின்றது என்னைத் தப்புவிப்பதில் உடந்தையாயிருக்கும் மனிதர்க்குப் பொருளும் வந்தனமும் அளிப்பதாலும், நான் தப்பியோடுவதில் ஒவ்

வொருவரும் தநதம வேலையைச செயவதாலும நாம கல லைதச செயதவராவோமோ? அனறி, இவையெலலாம செய்வதால நாம தீயதைதச செயதவராவோமோ? எனறு பாரபபோம. தீயதைச செயவதாக நாமகணடால, அதை விலககுதலை நாம கவனிககவேணடுமேயனறி, எனககு நேரிட்டிருககும இறபபையும, நான இஙகு வாளா இருப பதால விளையும எவவிதககெடுதலையும கவனிககவேணடி யது அவசயமினறு

கரை — நீ சொலவது சரிதான, ஸாகரடீஸ! ஆயி னும, நாம இபபொழுது எனனசெயவது?

ஸாக — ஐயனே, நாமிருவரும அககபபறறி யோசிப போம நான சொலவதை நீ மறுததுககூறககூடுமாகில, அவவாறு செய சரியாயிருநதால நான அதை ஒபபுக கொளளுகிறேன உனனலை கூடாததாகில, என அருமை நண்ப! அதீனியாகளின ஸமமதமினறித தபபியோடும படி இனி எனனிடததில வறபுறுததிசசொலலாதே உன் ஸமமததினபடி நடகக எனககு ஆவலிருககிறது நான் பிழைபட்டேனெனறு நீ நினைகக எனககு ஸமமதமிலலை இபபோது நான எடுததுககொண்ட கொளகையை ஒப புககொளளுகிறாயோ? உன மனதிறகு நனறாயப புலப படடவரை எனனுடைய கேளவிகளுககு விடைபகர முயலவாயோ? சொல

கரை — நான முயலவேன

ஸாக். — நாம வேணுமெனறு ஒருபோதும கெடுதலைச செயயககூடாதனறோ? சிலவழிகளில நாம கெடுதலைச செயயலாம் மறறவழிகளில அதைச செயயககூடாதென்

பாயோ? அன்றி, இதற்குமுன் நாம் பன்முறை ஒப்புக்கொண்டபடி, கெடுதலைச் செய்தல் ஒருபோதும் நன்மையேனும் யோக்யதையேனுமன்று என்று கூறுவாயோ? இந்தச் சொற்பதினங்களில் நாம் முன்கொண்ட முடிவுகளெல்லாம் மறந்துபோயினவோ? க்ரைடோ, நாம் இப்போது வயதில் முதிர்ந்தவராயினும், முன்னாளில் ஒருவரோடொருவர் மிகுந்த ஊக்கத்துடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தபோது, அறிவில் நாம் குழந்தைகட்கு மேலானவர்களல்லோமென்பதைக் காணவில்லையோ? உலகம் நம்மோடு ஒவ்வினும் ஒவ்வாதாயினும், நாம் சொல்வதெல்லாம் ஐயம் சிறிதுமின்றி உண்மையெனக் கண்டோமன்றோ? நல்லதுசெய்வதால் நேரிடும் மரணதண்டனையைவிடக் கொடுந்தண்டனை அல்லது இலேசான தண்டனையினும், கெடுதல்செய்தல் அதைச்செய்வோனுக்கு ஒவ்வொருவழியிலும் தீமையும் அவமானமும் விளைக்குமன்றோ? நாம் இதை இப்போது நம்புகிறோமோ?

க்ரை — ஆம், நம்புகிறோம்.

ஸாக் — ஆயின், ஒருபோதும் கெட்டதை நாம் செய்யக்கூடாதன்றோ?

க்ரை — ஆம், உண்மையாகக் கூடாது.

ஸாக் — இதுவன்றி, கெடுதலையே நாம்செய்யக்கூடாதென்றால், உலகம் நாம் செய்யலாமென்று நினைக்கிறபடி கெடுதலுக்குக் கெடுதலை பதிலளித்தல் கூடுமோ?

க்ரை — தெளிவாய்க் கூடாது.

ஸாக் — நல்லது, அப்படியாகில், க்ரைடோ! நாம் யாவர்க்காயினும் தீங்கிழைக்கலாமோ?

க்ரை—உண்மையாகவே நான் அப்படி நினைக்கவில்லை, ஸாக்ரடீஸ்!

ஸாக்—உலகம் நினைக்கிறபடி தீமைக்குத் தீமையையே பதிலளித்தல் நன்றோ, நன்றன்றோ?

க்ரை—உண்மையாகவே நன்றன்று

ஸாக்—ஒருவனுக்குத் தீமையிழைத்தலுக்கும் அவனைக் கெடுத்தற்கும் வித்யாசமில்லை ஏதாவது இருக்கின்றதோ நீ சொல்?

க்ரை.—உண்மைதான், வித்யாசமில்லை

ஸாக்—அப்படியாயின், ஒருவன் கையில் நாம் என்ன அவஸ்தைப்பட்டிருந்தபோதிலும், தீமைக்குப் பதிலாகத் தீமையை அவனுக்கு இழைத்தலும், வேறு கெடுதல்செய்தலும் கூடா. இதை ஒப்புக்கொள்வதில், க்ரைடோ, நீ கருதுவதற்கு அதிகமாக இடங்கொடாமற் பார்த்துக்கொள், ஏனெனில், சிலரே இக்கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள் சிலரே இதை என்றும் கடைப்பிடிப்பார்கள். இதை நான் அறிவேன் ஆதலின், இதைக் கடைப்பிடிப்போருக்கும், பிடியாதோருக்கும் பொதுவான பக்ஷம் கிடையாது. ஒருவர்கொள்கையை மற்றொருவர் அவமதித்து நோக்குவது அவர்கட்கு இயல்பு ஆதலின், என்னோடொத்து என் கொள்கையை அங்கீகரிக்கிறாயோ என்று நீ தீர்க்கமாய் ஆலோசித்துப்பார் தீயதுசெய்தலும், தீமைக்குத் தீமையையே திருப்பிக்கொடுத்தலும், நமக்குக் கெடுதல்செய்த ஒருவனுக்குப் பதிற்கெடுதல்செய்து பழிக்குப்பழி வாங்கிக்கொள்வதும் ஒருபோதும் சரியல்லவென்ற கொள்கையிலிருந்து நாம் நமது ஆராய்ச்சியைத் தொடங்கலாமோ?

அனறி, நீ எனனுடன மாறுபட்டு நான கொண்ட கொள்கையை மறுககிறாயோ? நான வெகுகாலமாக அதை நமபியிருககிறேன இனனும அதை நமபுகிறேன நீ இதறகுளவிதமேனும மாறுதலான அபிபராயங கொணடால எனககு அதை விளககிச சொல நீ இனனும நமது பூரவ கொளகையைக கடைபபிடிததால, நான சொலலுகிற அடுதத விஷயததைக கேள

கரை—ஆம, நான அதைக கடைபபிடிககிறேன, நீர சொலவதை ஒபபுககொளளுகிறேன மேலே சொல்லும

ஸாக—ஆயின, எனனுடைய அடுதத விஷயம, அதாவது, அடுதத கேளவி இதுதான ஒருமனிதன தான நயாயமாயச செயதுகொண்ட உடனபடிககைகளைச் செயய வேணடுமோ, அலலது அவைகளினினறும நழுவியோட வேண்டுமோ?

க்ரை—அவன அவைகளை அவசியம செயயவேண்டும்

ஸாக—ஆயின, நிதானிததுபபாரா நாட்டின ஸமமதமினறி நான தபபியோடினால, நான யாருக்குச சிறிதும் தீஙகிழைததலகூடாதோ அவாக்குத் தீஙகுவிளைததலாகுமனறோ? அவவிதஞசெயயின், நான எனது உடனபடிககைகளைச் சரிவரச்செய்வதாகுமோ?

கரை—உமமுடைய கேளவிககுப பதிலளிக்க என்னால் முடியாது. ஸாக்ரடீஸ, நீர சொலவது எனககு விளங்கவில்லை

ஸாக் —விளஙகாவிடின, இவவழியில இதைபபறறி யோசிததுபபார. நான ஓட யததனிககையில, நாடடுச் சடடஙகளும,குடியரசும எனமுனனிலையிலதோனறிபபின் வருமாறு எனனைக கேடபதாகக வைததுககொளவோம. "ஸாகரடீஸ, உம மனதில செயய நினைததிருபபதைச்சொலலும தபபிபோடடபபாரபபதால, சடடமாகிய எஙகளையும, நாடடையும உமமால கூடியவரை அழிபபதைததவிர வேறெனன எணணினீர சடடததின தீரமானஙகள வலிகுனறி, நாடடிலுளளவரகளால அவமதிததுத தளளப்படடால, அநநாடு அடியோடு தொலைநதுபோகாது நிலைத்துநிறகுமெனறு நினைககிறீரா"? இதுபோனற கேளவிகடகு நாம எனன விடை பகாவது, க்ரைடோ? நயாஸதலத்தின தீரமானஙகளை யாவறறிறகும மேலாக்குகின்ற சடடததிறகுப பரிநது, முகயமாய நாவலரகளால அநேக விஷயஙகள சொலலபபடலாம. நாஙகளும "நாடு எனக்குத தீஙகிழைததது, எனவிஷயததில அது பிழைபடத் தீரமானிததது" எனறு பதிலகூறலாமோ? நாம அவவிதம் சொலவது சரியோ?

க்ரை —நிசசயமாய் நாம அப்படிச் சொல்லலாம், ஸாகரடீஸ!

ஸாக் —'அதுவோ நமது உடன்படிக்கை நாடு செய்யும எவவிதத தீரமானததிற்கும் நீர கட்டுபபடுவதாக ஒப்புக்கொளளவிலலையோ' எனறு சட்டஙகள நமக்கு விடை பகருவதாக வைததுககொளவோம இமமொழிகளைக் கேடடு நாம வியந்தால, ஒருவேளை அவை பின்வருமாறு சொலலும் —'ஸாகரடீஸ், எஙகளவார்த்தைகளை நோக்கி வியக்காதீர. எஙகடகுப பதிலுரையும், கேளவிகேடபதும்

விடைபகருவதும உமககு வழககநதானே எஙகளமீதும் நகரததினமீதும நீர எனன புகாரசெயகிறீர? என எஙகளை வேறுககபபாாககிறீர? முதலில, நாஙகள உமககுத தாய தநதையரலலவோ? எஙகளமூலமாயததானே உமது பிதா உமதுமாதாவை மணநது,உமமைபபெறறார மணவிஷயங கடகுசசடடமாயிருககினற எமமவரில யாரிடததிலேனும நீர குறறஙகாணகிறீரோ'? இதறகு நான, 'ஒருவரிடமுங காணவிலலை' எனறு பதிலுததரம சொலலவேணடும 'அனறி, குழநதைகளைப பேணிவளாததலையும,அவாககுக கலவிகறபிததலையும ஒழுஙகுபடுததி, மறறவாகளைப போல உமமையுமவளாததுப பயிறறிய எமமவரில யாரை யேனும நீர குறைகூறுகிறீரோ? உமமை சஙகீதசாஸதிரத திலும தேகபபயிறசியிலும நனறாயபபயிறறுமபடி உமது தநதையைப பணிததறில நாஙகள சரியாக நடநதுகொளள விலலையோ'? எனறு கேடடால, 'நீஙகள சரியாய நடநது கொணடீாகள' என நான சொலலவேணடும 'சரி, அபப டியானல, எஙகளால உலகததிறகுக கொணடுவரபபடடும வளாககபபடடும படிபபிககபபடடுமிருகக, உமது முன ஞேர இருநததுபோல நீரும எஙகள குழநதை, எஙகள அடிமை எனபதை எவவிதம முதலில மறுககலாம? இது உணமையாகில, உமது உரிமைகள எஙகளுடைய உரிமை கட்குச சமானமானவையெனறு எணணுகிறீரோ? நாஙகள யாதேனுமொனறை உமககுசசெயய முயனறால, எஙகள மேல அதறகு பாதிசெயய உமககு உரிமையிருபபதாக நினைக்கிறீரோ? உமது குழநதைககிருககிற உரிமையும், நீர் அடிமையாகில உமது யஜமானனுககிருககும் உரிமை யும் உமக்கிலலை. அவா உமமை வருததினுல அவரைத்

திரும்ப வருத்தவும், உம்மை வைதால் அவர்க்குப் பதில் கூறவும், உம்மை அடித்தால் அவரைத் திருப்பியடிக்கவும், வேறெவ்விதத்திலேனும் கெடுதலுக்குக் கெடுதலைத் திருப்பிக்கொடுக்கவும் உமக்கு அதிகாரம் இல்லை இது இவ்வாறாக, உமது தேசத்தின்மேலும் அதன் சட்டங்களின்மேலும் பதிலுக்குப்பதில் செய்யலாமென்று நினைக்கிறீரோ? நாங்கள் செய்வது சரியென்று நம்பி உம்மைத் தொல்லைக்க முயன்றால், சன்மார்க்கத்தில் உண்மையாகவே கருத்துள்ள நீர் சட்டமும் தேசமுமாகிய எங்களைத் திருப்பித் தொல்லைக்கக் கூடியவரை முயன்று, அப்படிச்செய்வது நியாயமென்று கூறுவீரோ? தாய், தகப்பன், முன்னோர்களைவிட உமது தேசம் மேலானது, மாட்சியுள்ளது; தூயது, தேவராலும் அறிவுடையோராலும் மிகவும் நன்கு மதிக்கப்படுவது இதன்மேல் பக்திபாராட்டி, அதற்குக் கீழ்ப்படிந்து, அது உம்மைக் கோபித்தால் தகப்பனிடம் எப்படித் தாழ்ந்து நெருங்குவீரோ, அதைவிட அதிகமாகவே தாழ்ந்து அதனிடம் நெருங்குவது உமது கடமை. அது யாதேனுமொன்றைச் செய்யும்படி உம்மைப் பணித்தால், நீர் அதைச் செய்யவேண்டும் அன்றி, அப்படிச் செய்வதினின்றும் உம்மை மன்னிக்கக் கேட்டுக்கொள்ள வேண்டும் அடிகளைத் தாங்கவும், சிறைச்சாலைக்குப் போகவும் கட்டளையிடினும், அன்றிக் காயப்படவும் இறக்கவும் போருக்கு அனுப்பினும் பதில்பேசாது கீழ்ப்படிதல் வேண்டும் நீர் இவற்றை உணரக்கூடாத அவ்வளவு அறிவிலியோ? இதுதான் உமது கடமை நீர் ஒன்றற்கும் இடங்கொடாதீர், பின்வாங்காதீர், உமது இடத்தைவிட்டு ஓடாதீர். யுத்தத்திலும், நியாயஸ்தலத்திலும், வேறெவ்விடத்தி

னும உமது நகரம, உமது தேசம சொலலுகிறபடி நீர செயயவேண்டும அன்றேல, அவையிடும உததரவு அநயாயமென அறிவுறுததலவேணடும உமது தாயக்கேனும தந்தைக்கேனும கொடுமையிழைததல கடவுளின ஆஜ்ஞைககு விரோதமானது உமது தேசததிறகுக கொடுமையிழைததலோ, கடவுளின ஆஜ்ஞைககு இனனும அதிக விரோதமானது நாம இதறகு எனனபதிலசொலவது, க்ரைடோ! நாம சடடஙகள நயாயததைக கூறுகினறன எனபோமோ, அலலது இலலையெனபோமோ?

க்ரை —இவை நயாயததையே கூறுகினறனவெனறு நினைககிறேன

ஸாக் —இனனும அவை கூறும ‘ஸாகரடீஸ, நீர தபபியோட முயலவதில, எஙகளை ஊறுபடுதத முயலவதாக நாங்கள் கொளவது சரியோ? நாஙகள உமமை உலகிற கொணரநதோம, உமமை வளரததோம, உமமை படிபபிததோம, உமககும மறற ஒவவொருநகரவாசிககும் யாம தரககூடியநலலவறறிலெலலாமொருபகுதிகொடுத்திருககிறோம அபபடியிருநதும, அதீனியரில யாரேனுமொருவர எஙகளமேல அதருபதியடைநதால, அவர தம ஆஸதியை எடுததுககொணடு எஙகே போகலாமெனறு நினைககிறாரோ அவவிடஞ செலலலாமெனறு நாஙகள வெளிபபடையாய அறிவிககிறோம பருவமடைநது சட்டங்களையும நகரஅரசாட்சியையும கவனிககத தகுதியுறறபோதே, ஒவவொருவரும மேறகுறிதத அனுமதியைப் பயன்படுததிககொள்ளலாம அவரஎங்களமேலும, நகரத்தின்மேலும அதருபதியடைநதால், அதீனியர குடியேற்றநாடாயினுஞ சரி, அல்லது; வேறெந்த அயல்தேசமாயினுஞ சரி, எஙகுப போக விருமபுகிறாரோ அங்கு

அவர் தமது ஆஸ்தியை எடுத்துக்கொண்டு செல்கையில் நாங்கள் குறுக்கிடுவதுமில்லை, தடைசெய்வதுமில்லை. ஆனால் நியாயத்தை நாங்கள் எவ்விதம் தீர்க்கிறோம், மற்றவிஷயங்களில் நகரத்தை எவ்வாறு ஆளுகிறோம் என்று பார்த்தும் இங்குத் தங்குகிற உங்களில் ஒவ்வொருவனையும் இங்குத் தங்குகிற ஒரு காரணம்பற்றியே நாங்கள் இட்டதைச்செய்யச் சம்மதித்ததாகக் கூறுவோம். எங்கட்குக் கீழ்ப்படியாத ஒவ்வொருவனும் மூன்றுவிதக்குற்றங்களுக்கு உள்ளாகிறான்: தாய்தந்தையராகிய எங்களுக்குக் கீழ்ப்படியாதது ஒன்று, அவனைப் பேணிவளர்த்த எங்களுக்குக் கீழ்ப்படியாதது இரண்டு, எங்களுக்குக் கீழ்ப்படிவதாக முன் ஒப்புக்கொண்டிருந்தும், நாங்கள் செய்வது பிழையென்று எங்களுக்கு அறிவுறுத்தாமல், ஒப்புக்கொண்டவண்ணம் செய்யாதொழிதல் மூன்று. இது நிற்க நாங்கள் சொல்வதையெல்லாம் செய்யும்படி ஒருவனையும் கட்டாயப்படுத்துகிறதில்லை. அல்லது வேறொருவழியுங் காட்டுகிறோம். எங்களுக்குக் கீழ்ப்படியவாவது, அல்லது நாங்கள் பிழைபட்டோமென்று எங்களுக்கு அறிவுறுத்தவாவது சொல்லுகிறோம். ஆயினும், அவன் ஒன்றுஞ்செய்கிறானில்லை

‘ஸாக்ரடீஸ்! நீர் நினைத்ததைச் செய்வதாயிருந்தால், இக்குற்றங்களுக்கெல்லாம் உட்படவேண்டியிருக்கும். இன்னும், மற்ற அதீனியரைவிடக் குறைந்தபடியாகவன்றி, அதிகமாகவே நீர் உட்படவேண்டியிருக்கும்’ ‘‘அது ஏன்?’ என்று நான் கேட்டால், மற்ற அதீனியர்க்கு மேலாகவே உடன்படிக்கையால் நான் கட்டுப்பட்டிருக்கிறேனென்று நியாயத்தோடு அவை பதிலுரைக்கும். அவை சொல்லும் — ‘ஸாக்ரடீஸ்! நீர் எங்களிடத்திலும் நகரத்தினிடத்திலும்

யிருந்த திருப்தியை அடைந்திருக்கிறீர் என்பதற்குப் பலமான சாக்ஷியங்கள் இருக்கின்றன. மற்ற அதீனியரை விட நீர் அதிகமாக திருப்தியடைந்திருந்தாலொழிய, அவரைவிட அதிகமாக நீர் இந்நகரத்திலிருக்கச் சம்மதித்திருக்கமாட்டீர். இஸ்திமியன்* பந்தயத்திற்கு ஒருதரம் சென்றதைத்தவிர, வேறுவிழாக்களை உத்தேசித்து நீர் இந்த நகரத்தை விட்டுச் சென்றதேயில்லை. வேற்றவிடத்திற்கும் ராணுவசம்பந்தமாயன்றி, நீர் செல்லவில்லை, மற்றவர்களைப்போல நீர் யாத்திரைசென்றதுமில்லை. உமக்கு மற்றநகரங்களைப்பார்க்கவும், மற்றைச்சட்டங்களை உற்றுநோக்கவும் எண்ணமில்லை. எங்களிடத்திலும் நம் நகரத்தினிடத்திலும் உமக்கு மனப்பூர்வமாக திருப்தியுண்டு. நீர் அதிகவிருப்பத்தோடு எங்களை ஏற்றுக்கொண்டீர். எங்களால் ஆளப்பட சம்மதித்தீர். இன்னும், இந்நகரத்தில் நீர் குழந்தைகளைப் பெற்றீர். அது உமக்கு மிகவும் நயமாயிருந்தது. இதுவன்றி, நியாயஸ்தலத்தில் உம்மை விசா

* இஸ்திமியன்பந்தயம் (Isthmian game) இது க்ரீஸ தேசத்தில் கொரிந்த் பூசந்தியில் (Isthmus of corinth) இரண்டு வருஷத்திற்கு ஒருதடவை நடக்கும் பெரியபந்தயம். இப்பந்தயத்தில் ஜயம்பெற்றுக் கீர்த்தியுற க்ரீஸ் எல்லாப்பாகங்களிலிருந்தும் மனிதர்கள் வந்து, தரையில் வேகமாயோடுவதிலும், ரதசாரத்யத்திலும், குஸ்தி முதலிய தொந்தயுத்தங்களிலும் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டுவார்கள். பந்தயத்தில் ஜெயித்தவர்களுக்கு ஒருஇலைமாலை (Laural wreathe) தலையிலணியக்கொடுப்பது வழக்கம். இவ்விலைமாலை அணிந்தவர்களை வெகுமரியாதையுடன் ஜனங்கள் உபசரிப்பதுண்டு. இதுபோலவே, க்ரீஸில் ஒலிம்பியா என்ற ஊரில் இன்னுமதிகவிமரிசையாக நான்குவருஷத்திற்கொருமுறை ஒருபந்தயம் (Olymphic games) நடக்கும்.

நீக்கும்போது, உமக்கு இஷ்டமிருந்தால் அப்பதேசமு போயவிடுகிறதென்று நீர் சொல்லியிருக்கலாம் காட்டின உத்தரவின்றி இப்போது செய்ய உத்தேசித்திருக்கிறபடி அக்காலத்தில் நாட்டின ஸம்மதத்துடனே செய்திருக்கலாம் ஆனால், அப்போது சாக ஸம்மதித்திருப்பதாக வீணபெருமையடித்துக்கொண்டா தேசத்தைத் துறப்பதைக்காட்டிலும சாவது உத்தமமென்று சொன்னீர அவ்வார்த்தைகளைக் கூறியதற்கு இப்போது நீர சிறிதும வெட்கமுறவில்லை நீர சட்டமாகிய எங்களைப் பாராட்டவில்லை எங்களை அடியோடு தொலைக்க முயலகின்றீர, எங்கள் ஆளுகைக்குக் கீழ்ப்படிவதாக ஸம்மதித்திருந்தும, கேவலமான ஒரு அடிமை செய்வதுபோல, நீரும எங்களுடன செய்துகொண்ட ஒப்பந்தவுடன்படிக்கைகளை மீறிக்கொண்டு ஓடப்பார்க்கிறீர. ஆதலின, இந்தக் கேள்விகளுக்கு முதலில விடைபகரும நீர எமது ஆளுகைக்குள் வசிக்க, வார்த்தையாலன்றிச் செய்கையாலும சம்மதித்திருக்கிறீரென்று நாங்கள கொள்வது சரியோ? சரியன்றோ? க்ரைடோ! இதற்கு நாம என்னசொல்வது? அது உண்மைதானென்று ஒப்புக்கொள்ளவேண்டாமோ?

க்ரை.—நாம ஒப்புக்கொள்ளவேண்டியதுதான, ஸாக்ரடீஸ!

ஸாக.—அப்படியாகில, இன்னும அவை சொல்லும 'நீர எங்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைகளை முறித்துக்கொள்ளுகிறீரல்லவா? பலாத்காரமாகவாவது, ஏமாற்றியாவது உம்மைக் கட்டுப்படும்படி நாங்கள செய்யவில்லை நீரும நிதானமின்றித் தீர்மானிக்கவில்லை. எங்களிடத்தில உமக்கு அதிருப்தியிருப்பினும, காலக

செய்துகொண்ட உடன்படிக்கை அநியாயமானதென்று உமக்குத் தோற்றினும், இந்த எழுபது வருஷங்களில் நீர் ஊரைவிட்டு நீங்கியிருக்கலாம். லகிடேமன் (Lacedaemon), க்ரீட் (Crete) முதலிய நகரங்கள் நன்றாய் ஆளப்படுவதாக அடிக்கடி ஆவலுடன் சொன்னாலும், நீர் அந்நகரங்களுக்குப் போகவில்லை. சமீபமாயுள்ள வேறெந்த நகரங்களுக்கேனும், அல்லது அந்நிய நகரங்களுக்கேனும் நீர் போனதில்லை. குருடு, முடம் இவர்களுக்குக் குறைவாகவே, நீர் ஆதென்ஸ் நகருக்கு வெளியே போயிருக்கிறீர். இதனால், நகரத்தினிடத்திலும் அதன் சட்டங்களாகிய எங்களிடத்திலும் மற்ற அதீனியரைவிட அதிகமாகவே திருப்தியடைந்திருக்கிறீரென்பது வெளிப்படை, ஏனெனில், சட்டங்களில்லாத நகரத்தினிடத்தில் யார் திருப்தியடைவார்கள்? நீர் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி இப்போது நடக்கமாட்டீரோ? எங்கள் வார்த்தையை நீர் கேட்கும்பக்ஷத்தில், அவசியம் அவ்விதம் நடந்துகொள்ளக்கடவீர். ஆதென்ஸ் நகரை விட்டு ஓடி உம்மைக் கேவலப்படுத்திக்கொள்ளமாட்டீர்'

'நன்றாய் யோசித்துப்பாரும். உமது உடன்படிக்கைக்கு மீறி நடப்பதனால், உமக்காவது உமது நண்பர்களுக்காவது என்ன நன்மை விளையப்போகிறது? உமது நண்பர்கள் சம்பந்தப்பட்டவரையில், அவர்கள் தேசத்தைவிட்டு நீக்கப்பட்டு ஸ்வதந்திரம் ஆஸ்தி முதலியவைகளை இழப்பது பெரும்பாலும் நிச்சயம். நீர் சம்பந்தப்பட்டவரையில், அயல்நகரங்களாகிய தீப்ஸ், (Thebes) மகாரா (Magara) இவைகளில் யாதேனுமொன்றுக்குப் போகலாம். இரண்டும் நன்றாக ஆளப்படுகின்றன ஆயினும், ஸகர

டீஸ்! இக்குடியரசுநாடுகளுக்கு நீர் ஒருசத்ருவேயென்று கருதப்படுவீர். நகரத்தின் நன்மையைக் கருதுகிற ஒவ்வொருவரும் உம்மை நன்குமதிக்காது சட்டத்தைக் கெடுப்பவனென்றே எண்ணுவார். நீரும், நியாயாதிபதிகள் கொண்ட கருத்தை ஸ்திரப்படுத்தி, அவர்களுடைய தீர்மானம் சரியானதென்று காணப்படுமாறுசெய்வீர், ஏனெனில், சட்டத்தைக் கெடுக்குமொருவன் வாலிபர்களையும், யோசனையற்றவர்களையும் தீயவழியில் உய்ப்பவனென்றே கருதப்படலாம். இவ்வாறாயின், நன்றாயாளப்பட்ட நகரங்களையும் நாகரிகம்பெற்ற மனிதர்களையும் நெருங்காது, வெறுவைவிட்டேனும் செல்வீரோ? அப்படிச்செய்யின், உயிர்தரித்தல் நல்லதாகுமோ? அன்றி, அவ்விதமனிதரோடு கூடி வெட்கமின்றிச் சம்பாஷிப்பீரோ? எதைப்பற்றிச் சம்பாஷிப்பீர்? ஸாக்ரடீஸ்! நீர் இங்குப் பேசுகிறவைகளைப்பற்றியோ? தர்மமும், நியாயமும், ராஜாங்கமுறைகளும், சட்டமும் மனிதர்க்கு வேண்டியவைகளிற் சிறந்தவையென்று கூறுவீரோ? அப்படிச்சொல்லுதல் ஸாக்ரடீஸுக்கு மிகுந்த அவமானம் விளைக்குமென்று நீர் நினைக்கவில்லையோ? நீர் அவசியம் அப்படிநினைக்கவேண்டும். ஒருவேளை நீர் அவ்விதஞ்செய்யாது, மேற்குறித்த இடங்களை நீங்குவீர் தெஸலேயிலுள்ள க்ரைடோவின் நண்பரிடம்செல்வீர். அவ்விடத்தில் ஒழுங்கின்மையும், தோன்றியபடி செய்தலும் மனிதரிடமுண்டு. தப்பியோடுகிறவர்கள் தரித்துக் கொள்ளும் குடியானவன்போர்வை, அல்லது யாதேனுமொரு உடை தரித்து, மாறுகோலம்பூண்டு, நீர் சிறையினின்றும் தப்பியோடிவந்ததைக் கேட்க அவர்கள் மிகவும் களிப்படைவார்கள். ஆயினும், அவர்களில் யாரேனுமொருவர், என்ன உமக்கு வயதாகிவிட்டது; இன்னும்

விதிகாலந்தான் இருப்பீர் யாவற்றிற்கும் மேலான சட்டங்களைக் கடந்தொழுகும்படியாக உமக்கேன் இவ்வாழ்க்கையில் இவ்வளவு பற்று' என்று கேளாரோ? அவர்களுக்குத் திருப்தியாய் நீர் நடந்தால், ஒருவேளை அவர்கள் உம்மை அவமதிக்கேளார், உம்மை வெறுக்கும்படி செய்துகொண்டீராகில், நீர் தலைகுனிந்து நாணும்படியான சொற்கள் பலவற்றைக் கேட்பீர். ஆதலின், யாவரையும் வஞ்சித்து அவர்க்கடிமையாய் நீர் உம்முடைய வாழ்நாளைக் கழிப்பீர். இன்னும், தெசலேயில் விருந்துண்பதைத் தவிர நீர் என்ன செய்யப்போகிறீர்? ஆதலின், விருந்தை உத்தேசித்து, தெசலேநகரத்திற்கு யாத்திரை சென்றதாக முடியும். அவ்வாறாயின், நியாயத்தைப்பற்றியும் தருமத்தைப்பற்றியும் நீர் முற்கூறியவையெல்லாம் எங்கே நிற்கும்? இதனிற்க நீர் உமது குழந்தைகளுக்காக உயிர்வாழ விரும்புகிறீரல்லவா? அவர்களை வளர்த்துப் படிப்பிக்க நினைக்கிறீரல்லவா? என்ன, அவர்களை உம்மோடு தெசலேநகரத்துக்குக் கூட அழைத்துச்சென்று அவ்விடத்தில் அவர்களை வளர்த்துப் படிப்பிப்பீரோ? இவ்விதநன்மையை அவர்களுக்குச் செய்யும்பொருட்டு, நீர் அவரைத் தம் நாட்டிற்கு அந்நியராக்குவீரோ? அன்றி, ஆதன்ஸிலேயே அவரைவிட்டு நீர் செல்வதாக வைத்துக்கொண்டாலும், நீர் அவருடன் இல்லாமற்போயினும், உயிருடனிருப்பின், அவர்கள் நன்கு வளர்க்கப்பட்டுப் படிப்பிக்கப்படுவாரென்று நினைக்கலாமோ?. சரிதான், ஒருவேளை உமது நண்பர் அவர்களைக் கவனித்துப்பார்த்துக்கொள்வரென்று எண்ணலாம். நீர் தெசலேநகரக்கு யாத்திரைசென்றால் பார்த்துக்கொள்ளும் நண்பர், நீர் யமபுரத்திற்கு யாத்திரையாகச்சென்றால் பார்த்துக்கொள்ளாரோ? உம்முடைய நேச

ரென்று சொல்லிக்கொள்ளுகிறவர்களல்ல. ஏதேனும் உமக்குப் பயனிருப்பின் நீர் இதைத்திடமாக நம்பவேண்டும். ஸாக்ரடீஸ்! உம்மைப் பேணிவளர்த்த எங்கள் சொல்லைக் கேளும். உமது குழந்தைகளைப் பற்றி நினையாதீர், உமது உயிரைப் பற்றி நினையாதீர். நியாயத்திற்குமுன்னால் எதையும் வைக்காதீர். அப்போதுதான் நீர் வானுலகஞ் செல்லுகையில், அங்கு உமது செய்கைகளைப்பற்றி விசாரிப்பவரின் முன்னிலையில், நன்றாய் உத்தரஞ்சொல்லலாம். நீர் இப்போது எண்ணியதைச் செய்தால், இவ்வுலகத்தில் உமக்கேனும் உமது நண்பர்க்கேனும் அதிகமான சந்தோஷமும், நேர்மையும், பரிசுத்தமும் கிடையாது. இது நிச்சயம். இன்னும், சட்டங்களாகிய எங்களால் தீமையிழைக்கப்படாது மனிதரால் இழைக்கப்பட்டு நீர் வெளியேறினதாக முடியும். இவ்விதஅவமான வழியில் தீமைக்குத் தீமையை பிரதிபலித்தும், கெடுதிக்குக் கெடுதியை பிரதிகொடுத்தும் எங்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் முறித்துக்கொண்டு, நீர் சிறிதும் கெடுதல் விளைக்கக்கூடாத உமக்கும் உமது நண்பர்க்கும் உமது தேசத்திற்கும் எங்களுக்கும் கெடுவிளைத்துத் தப்பியோடினால், நீர் உயிரோடிருக்கையில் நாங்கள் உம்மைக் கோபிப்போம். நீர் இறக்கும்போது எம்முடைய சகோதரரான யமபுரச்சட்டங்கள் உம்மை உபசரித்து ஏற்றுக்கொள்ளா, ஏனெனில், நீர் இங்கு எங்களை இயன்றவரை தொலைக்க முயன்றீரென்று அவைகள் உணரும். ஆதலின், நாங்கள் சொல்வதைக் கேளும். தான் சொல்வதுபோல உம்மைச் செய்யும்படி க்ரிடோவைத் தூண்டிவிடாதீர்.

என் அருமை நண்பா! கரைடோ! தெய்வமேறி ஆவேசம் வந்தவர்கள் குழலோசை கேட்பதாக உணர்வதுபோல், நான் இதுவரை சொன்னவைகளை நான் கேட்பதாக எனக்குத் தெரிகிறதென்பதை நன்கு அறிந்துகொள். இவ்வார்த்தைகளின் ஓசை என் காதில் இன்னும் தொனித்துக்கொண்டேயிருக்கிறது. அது மற்றவார்த்தைகளையெல்லாம் அடக்கிவிடுகிறது. நீ என் மனத்தைத் திருப்புவதில் பேசுகிற பேச்செல்லாம் வீணென்றே எனக்கு நிச்சயமாகத் தோற்றுகிறது. ஆயினும், என் மனத்தைத் திருப்ப உன்னாலாகுமென்று உனக்குத் தோற்றினால், மேலே சொல்லலாம்.

க்ரை —இனி ஒன்றும் என்னால் சொல்ல முடியாது, ஸாக்ரடீஸ்!

ஸாக் —அப்படியாயின், கரைடோ, இருந்தபடி இருக்கட்டும். கடவுள் நம்மை அப்படி நடத்துவதாகத் தெரிவதால், நான் சொல்லுகிறபடி நடப்போம்.

## 15-ஆம் அதிகாரம்

## முடிவுரை.

[முடிவுரை—ஸாக்ரடீஸ் அமைதியுடனிறந்தது—அவரது அபூர்வத்திறமை—அவர்வழி எல்லாவற்றிற்கும் ஏற்றது—அவருக்கு விதித்த தண்டனை சரியென்றே பலர் எண்ணியது.]

ஸாக்ரடீஸ் சிறையிலிருக்கவேண்டிய முப்பது நாட்களும் சென்றன. அவர் ஆயுள் முடிந்த தினத்தில் வழக்கம்

போல் யாவரும் வந்து கூடினர் அவர் தம் மனைவி அன்றைய தினம் தன் துயரை வெளிப்படையாகக் காட்டி, கணவனைப் பிரிதற்குக் காலம் வந்ததேயென்று பலவாறு பிரலாபித்துப் புலம்பினாள் அதைக் கண்ட யாவரும் மனங் கலங்கித் துயரக்கடலுள் ஆழ்ந்தனர் ஸாக்ரடீஸ் கண்டோவை நோக்கி, 'அண்ணே! இன்று என் முடிவுநாள் இதைச் சாந்தத்துடன் கழிக்க எண்ணுகின்றேன் என் நாயகியை வெளியே அழைத்துச்செல்க' என்றனர் உடனிருந்தோர் அவளைத் தேற்றி, அவர் விரும்பியபடியே சிறைப்புறத்திற்கு அழைத்துச்சென்றனர் பிறகு வழக்கம்போல் சம்பாஷணை தொடங்கிற்று முதலில் தாம் எழுதிய செய்யுளைப்பற்றிப் பேசினர் பிறகு தற்கொலை புரிதலைப்பற்றிப் பேச்சு நடந்தது. கடைசியாக, ஆத்மாவின் நித்யத்தைப்பற்றி நெடுநேரம் அனைவரும் சம்பாஷித்தார்கள். தாம் இறந்தபின்னர்,

"சிறுகாலையிலா, நிலையோ இரியா,
குறுகா, நெடுகா, குணம் வேறுபடா,
உறுகால் கிளர்பூதமெலாம் உகினும்,
மறுகா நெறி எய்துவன"

என்று சரபங்கர் கூறினதுபோல், தாம் செல்லும் லோகத்தில் ஆத்மா பிணிமுதலியவை நீங்கிப் பரிசுத்தமடைகின்றதென்றும், தாம் பிரிவதற்கு ஒருவரும் வருந்தக்கூடாதென்றும், தம் நண்பர்கள் தாம் இதுகாறும் சொல்லிவந்த நீதிமொழிகளைக் கடைப்பிடித்து உய்வரென முழுநம்பிக்கையோடு தாம் பிரிய விடைபெற்றுக்கொள்வதாயும் யாவர்க்கும் வற்புறுத்தினர் இவற்றைச் செவியேற்ற நண்பர்களின் மனநிலை துக்கத்திற்கும் களிப்பிற்கும் இடையில் ஊசலாடிற்று உயிரினுஞ் சிறந்த தம் நண்பரைப் பிரிதற்கு

இரங்கி யாவரும் துக்கித்தனர். இறக்குந்தினத்திலும், மன வலிகுன்றாது தம் மாட்சியைப் புலப்படுத்தி அமைதியுடன் வசனிக்கும் அவரது ஆற்றலுக்கு மெச்சிப் பலரும் களித்தனர். செல்லும் உலகத்தில் இம்மைகான மேலான பதவியைப் பெறுவரெனவும், கடவுளின் திருவருளால் இவ்வா வந்து முற்றும்பகலதாலும் முடிந்த அஞ்ஞானிகட்கு அறிவூட்டிக் கடவுளின் ஆஞ்ஞைப்படி மேலுலகுக்குச் செல்லுறுவரெனவும் அனைவரும் தெளிவினை உள்ளத்துணர்ந்தனர். ஆயினும், என் மனச்சாந்தியடையர் மனிதர்க்குமனக்லேசம் மட்டுப்படுமோ? மனத்தளர்ச்சி கொள்ளக்கூடாதென்று வைராக்கியங்கொண்டாலும் அஃது அவர்க்கு மயானவைராக்கியம்போலானது. பொழுதுகழிந்து மாலைப்போது வந்ததும் யாவரது உள்ளமும் இருண்டு நொந்தது.

அச்சணம் அவர் குடிப்பதற்காக விஷங்கலந்த நீர் அதிகாரிகளால் கொண்டுவரப்பட்டது. அவர் அதை அருந்தியதுமுதல் அடங்கினதுவரை அங்கு நேர்ந்தவை யாவற்றையும் ஒன்றுவிடாது அவரது இன்னுயிர்த்துணைவர்கள் வரைந்துள்ளார்கள். விஷம்பெய்த நீரை உத்சாகத்துடன் மெதுவாகக் குடித்து, சிறைச்சாலையில் அங்குமிங்கும் உலாவி, அரற்றுகின்ற தம் நண்பருக்கு ஆறுதல் கூறிவந்தார். சற்றுநேரத்திற்கெல்லாம் அவர் நடப்பது கஷ்டமாகிவிட்டது. உடனே அவர் தமக்கட்டிலில் சாய்ந்து படுத்துக்கொண்டார். தேக உபாதி அவர்க்குச் சிறிதுமில்லை. அவர் அறிவுதப்பி மூர்ச்சிப்பதற்குமுன்பு, கிரைடோவைப் பார்த்துக் கூறினர்—'கிரைடோ, ஏஸ்குலேபியஸுக்கு (Aesculapius) நாம் ஒருசேவல் கடன்கொடுக்கவேண்டுமல்லவா? அக்கடனைத் தீர்த்துவிடு. இதைச் சற்றும் உபே

கூடிசெய்யாதே' இவையே அம்மகான் கடைசியாய்க் கூறிய மொழிகள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் தம்மைப் போர்த்திக்கொண்டு படுத்தார். உடனே உயிரும் நீங்கியது. இவர் கடைசியாகக் கூறிய வார்த்தைகளாலும், கடைசியாகக் காட்டிய மனவமைதியாலும் அவரது பெருமை, தூய்மை, கோட்டமை முதலிய நற்குணங்கள் முன்னிலும் பதின்மடங்கு ஒளிர்கின்றனவன்றோ?

கிரீஸ்தேசத்திற் பிறந்து, இங்ஙனம் தமது ஆயுள் முழுவதையும் ஜனங்களின் அறிவை வளர்ப்பதிலேயே கழித்து, முடிவில் தம் உயிரையும் அர்ப்பணஞ்செய்த ஸாக்ரடீஸை ஓர் அவதார புருஷரென்றே நாம் சொல்லவேண்டும். முதன் முதல் நீதிவிஷயங்களை ஸ்வதந்திரமாக ஆராய்ந்தவர் அவரே. அவ்வாராய்ச்சிக்கேற்ற புதியதோர் வழியைக் கண்டுபிடித்தவரும் அவரே. கிரீஸ்தேசத்திலும் அதன் வழியைப் பின்பற்றி ஒழுகிவரும் பிறநாடுகளிலும் எத்தனையோ கவிவாணர், பிரசங்கவல்லோர், தத்வசாஸ்திரிகள், சரித்திராசிரியர் முதலிய மேதாவிகள் கிளம்பித், தத்தம் நீள் புகழைப் பரப்பி, நாட்டைச் சிறப்பித்துள்ளார்கள். ஆயினும், ஸாக்ரடீஸைப்போல ஒருவரை கிரீஸ்தேசத்திலேனும், இதர நாடுகளிலேனும் நாம் கண்டறிதல் இயலாது. அவரது வழியைக் கடைப்பிடித்து நடந்தவர் ஒருசிலரே. அவர் வழியில் இறங்கி உண்மையைத் தொடைவிடைகளால் நுணுகி ஆராய்ந்து, அவரைப்போல உலகிற்குப் பாடுபட்டவரோ இல்லையென்லாம். பிறரைக் கேள்விகளாற் கேட்டு, அவரிடம் மனக்கிளர்ச்சியை உண்டாக்கி, அவரது பகுத்தறிவைப் பன்மடங்கு பெருக்குவது ஸாத்யமாகுமென்பதை நிரூபிக்க ஸாக்ரடீஸின் சரித்திரம் போதிய சான்றாகும்.

கடவுளால் விரிக்கப்படாத மறைபொருள்களை ஒருவர் நாடியறிய விரும்புவது மதியீனமெனவும், மனிதரது நல்வாழ்க்கைக்குக் காரணங்களாக நிற்கும் விஷயங்களை மட்டும் அவர் கண்டறிவது ஏற்புடைத்தாகுமெனவும், அவ்விஷயங்களை யாவரும் அறிதல்கூடுமெனவும், அவ்வாறு அறிதல் அவரது கடமையாகுமெனவும், அவற்றைச் செவ்வனே அறியாமல் நற்காரியங்களைச் செய்யப்புகின், இடர்ப்பட்டுத் தயங்கவேண்டுமேயன்றிக் காரியசித்தி பெறுவது எளிதன்றெனவும், பல தொழில்களை மனிதர் கற்று அவ்வத் தொழில்களில் தேர்ச்சிபெறுவதுபோல, இவற்றையும் பழகிக் கண்டறிவது அவர்க்கு அவசியமாகுமெனவும், அவ்விதம் கற்றுத்தேர்ந்து மேன்மைபெறு ஒருவனைப் பலரும் கீழ்மகனென்று இகழ்ந்து, அவனிடம் நம்பிக்கை சிறிதும் வையாரெனவும் ஸாக்ரடீஸ் வற்புறுத்தினார். ஞாயவுணர்ச்சியில்லாதவன் ஞாயநெறியில் நடக்கமாட்டான்; பக்தியை அறியாதவன் பக்திமானாவதெப்படி? தைரியத்தை நன்குணராதோன் எவ்விதம் தைரியத்தைக் காட்டுவது? ஆதலின், இவைகளை அறிவது மக்களுக்கு இன்றியமையாததாகும். அவற்றை அறிவதற்கு இடையூறாக நிற்பது மனிதரின் கர்வமே. தனக்கு யாதொன்றும் தெரியாதிருக்க, எல்லாம் தெரிந்ததாகப் பாவிக்கும் அகந்தையை அடக்குவது அழகு அம்மனநோய்க்கு மருந்து, அவருடன் தாக்கித்தத் தொடர்விடைகளால் அவரது அறியாமையைப் புலப்படுத்துதலே.

தான் ஒழுங்காகக் கல்லாத விஷயங்களை ஐயந்திரிபற அறிவதும், தனக்குப் புலனாகாத விஷயங்களை நடத்திக் காட்டுவதும் ஒருவனால் இயலுமென்பதை ஸாக்ரடீஸ்

துணிவாக மறுத்துரைத்தாராதலின், யாவரும் நீதிவிஷயங்களைப் பற்றியும், ராஜாங்கவ்யவகார விஷயங்களைப் பற்றியும் அறிவதற்கு முன்னால், தாம் கொண்ட பழுதான கருத்துக்களை நீக்கிவிட வேண்டும். இதன் பிறகு நன்னெறியில் நிற்பதற்கு இன்றியமையாத அறிவை அடைவது லேசாகிவிடும். இதை ஸாக்ரடீஸ் நன்றாய் விளக்கிக்காட்டினார். நல்வாழ்க்கைக்கு இதனினும் மிக்க சாதனம் இல்லையென்பதையும் அவர் தெளிவாய்க் கூறினார்.

ஸாக்ரடீஸ் கண்டுபிடித்து உபயோகித்த வழி எக்காலத்திற்கும் உதவுவது; விஷயவாராய்ச்சிக்குச் சிறந்த கருவி அதனினும் வேறில்லை. அதன் மூலமாக இற்றைக்கும் நமது கொள்கைகளைத் தருவிநாடிச் சிக்கறுத்துப் பகுத்துப் பிழைகளை நீக்கித் தூய்மைப்படுத்தலாம். அவ்வண்ணம் சிக்கறுத்து உண்மையைக் கண்டோர் மட்டுமே; அவர்க்குப் பிறகு ஒருவருமில்லை.

அதீனியர் ஸாக்ரடீஸைத் தண்டித்தது மிகுந்த பழிப்பைக் கட்டிக்கொண்டாரென்று சிலர் கூறுகிறார்கள். அக்கூற்று வலியுறுவதன்று. மேற்காட்டியபடி, அவரைத் தண்டிப்பதற்குப் பல காரணங்கள் ஏற்பட்டன.

முதலாவது — நூதனக் கொள்கைகளை வாலிபர்களுக்குக் கற்பிப்பவரை நியாயசபையோர் தண்டிக்கக்கூடாதென்ற வழக்கம் அக்காலத்திலில்லை. தற்காலத்திலும் சில ஆண்டுகட்கு முன்புதான் அவ்விதம் தண்டிப்பது சரியன்றென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஸாக்ரடீஸைக் கேட்டாலும், அவர் தண்டிப்பது நியாயமென்றே கூறியிருப்பார். ஆதலின், நீண்டகாலமாகப் பகிரங்கமாய் [illegible]

டீஸ சம்பாஷித்துவந்ததைப பொறுததிருநத அதீனி யரை வநதிககவேண்டுமேயலலாது, அவரை நிநதிதது இகழுதலும, கடிநது கூறுதலும நயாயமலல

இரணடாவது —இவரது செயகையால ஆதனஸாக ரில பலபோ இவாககு விரோதிகளாஞாகள அவவித மிருநதும, இவரது எழுபதாம ஆணடுவரை இவாககு யாதொருதொநதரையும அவாகள செயயாதிருநதது வியப பினும வியபபே.

மூனறுவது —ஸாகரடீஸ சபையோாமுன நடநது கொணட விதமானது மெசசககூடியதனறு. அவா உயிா விடுவதறகுப் பயபபடவிலலை இறாபு இனபமேபயககரு மெனறூா, சபையோரை மதிததுபபேசினாலலா அதைக கண்ட சபையோா, ஸாகரடீஸினுடைய விரோதிகள கூறு மிற்படி அவா மஹாதுஷடராக இருககலாமெனறு ஊகித தாாகள

இவையெலலாம அதீனியரைப் பழிகூறுவதறகு அநு கூலமாகமாடடா ஸாகரடீஸமீது குறைகூறுவதற குததான இவை சாதனஙகளாகினறன.

ஸாகரடீஸ் இறநதபிறகு, அதீனியா அவரைக அந யாயமாயக கொலைபுரிநததறகாகபபசசாததாபபபடடாா களெனறும, தாமசெயத பாவததொழிறகுப்பரிகாரமாக லிஸிப்பஸ் (Lysippus) எனற பெயர்பெறற சிதரகாரி யைககொணடு பிததளையில அவரைபபோல ஒருசிலையை இயறறுவிதது, அவரது ஞாபகார்த்தமாக நாடடினாக ளென்றும கூறுவதுணடு ஆயினும, அது உணமையாக இருத்தலகூடுமென்று என்னுவதற்கு இடமிலலை இவரது

உயிர்த்தோழராகிய பளேட்டோ நகரைவிட்டு நீங்கும்படி நேரிட்டது. சிறிதுகாலம்வரை ஸாக்ரடீஸ் பெயரைக் குறித்தோரையும் ஜனங்கள் வெறுத்தார்கள். இதனால் அவர் இறந்ததற்கு ஜனங்கள் சற்றும் இரங்கவில்லையென்பதும், அவரையும் அவரது கொள்கைகளையும் மனப்பூர்வமாக வெறுத்தனரென்பதும் தெளிவாய் வெளியாகின்றன.

இவ்வாறு தமது ஜீவதசையிலும், அந்தியதசையிலும் தமது உயர்ந்த குணங்களை உலகறியக் காட்டினார் ஸாக்ரடீஸ். அவர் சத்தியக்குன்று, அஞ்சாமைக்கு நிலயம். அநீனியர்க்கு நன்னடத்தையைப் புகட்டுவதற்காகக் கடவுள் தம்மைப் படைத்தாரென்று அவர் நம்பினதனால், எத்தடை நேரிடினும் அதை மதிக்காது, தாமாக ஏற்படுத்திக் கொண்ட கடமைகளைச் செய்துகொண்டுவந்தார். பிறரைப் பரீக்ஷைசெய்து பங்கப்படுத்துவதை விட்டுவிட்டுவாளா இருக்கச் சம்மதித்திருந்தால், அவர் தமது உயிரைவீணாக இழந்திரார். ஆனால், அவ்விதமிருப்பதற்கு அவர் உடன்பட்டிலர்; அவ்விதஞ்செய்வது கடவுளின் ஆஞ்ஞையை அவமதித்ததாகுமென அவர் எண்ணினார். ஸ்வாமியின்மீது பாரத்தை வைத்துத் தமக்கு எது நன்மையாகத் தோன்றியதோ, அதையே அவர் பிடிவாதமாகச் செய்துவந்தார். இறந்த பின் மனிதர்கதி ஏதாகிறதென்பதை அவர் நிச்சயமாய் உணரக்கூடவில்லை. பிறிதோர் உலகில் நற்பயனை அடையலாமென்ற எண்ணமும் அவர் மனதில் உதித்திலது. ஆதலின், பரம்பொருள் பணித்ததைத் தப்பாமற் செய்தலும், தமக்குத் தவறாகத் தோன்றியவைகளைச் செய்யாதொழிதலுமே மேலானவையென்று கொண்டார்; நன்மான

காரியங்களைச் செய்து உயிர்பிழைப்பதினும், உயிர்வாழா மையே உயர்ந்தது என்று நம்பினார்.

*"பெருமை யுடையவர் ஆற்றுவார், ஆற்றின்,
அருமை யுடைய செயல்"

என்ற வள்ளுவனார் வாக்குக்கு இலக்காக, இம்மகானு பாவர் யாவராலும் செயற்கரிய செயல்களை எளிதிற் செய்துமுடித்ததுடன், சிறையினின்று தப்பியோடி மானங் கெட்டுக் உயிர்வாழ்வதைவிட உயிர்நீப்பதே மேலெனத் துணிந்து, துணிந்தவண்ணம் தமதுயிரையுந் துறந்தார்.

† "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

முற்றும்

---

* திருக்குறள், பெருமை, 975 † திருக்குறள், மானம், 969.

# அநுபந்தம் 1.

## ஸாக்ரடீஸ் தர்க்கிக்கும் வழி.

இது இத்தகையதென்பது யூதிபிரானுக்கும் (Euthyphron) ஸாக்ரடீஸுக்கும் நடந்த சம்பாஷணையால் தெற்றென விளங்கும். இந்த ஸம்பாஷணை தேவதூஷணஞ்செய்தாரென ஸாக்ரடீஸ்மீது குற்றஞ்சாட்டியபின்னர் நிகழ்ந்தது. விசாரணை தொடங்குவதற்குமுன்பு தேவபக்தி தேவதூஷணை முதலியவைகளைப்பற்றிய பாமரஜனங்கள் கொண்ட எண்ணங்கள் தவறென்று வெளிப்படுத்த ஸாக்ரடீஸ் கருதியிருந்தார். நியாயஸ்தலத்தின் தலைவாசலில் இருவரும் சந்தித்தார்கள். ஸாக்ரடீஸ்மீது அப்பொழுதான் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. யூதிபிரான் என்பானும் ஒரு கூலியாளைத் தன் தகப்பன் கொன்றுவிட்டானென்று தன் தகப்பன்மேல் குற்றஞ்சாட்டவந்திருந்தான். தனது நண்பர், உறவினர் எது சொல்லியும் அவன் செவிகொடுத்துக் கேட்கவில்லை. தான் தூய்மையற்ற செயலைச் செய்வதாக அவர்கள் கூறியதனால், இவனுக்கு அவர்கள்மீது வெறுப்பெழுந்தது. தான் செய்யும் காரியம் தூய்தெனவும், தெய்வத்திற்கு உகந்ததெனவும் அவன் புகன்றான். தான் செய்யக்கருதியதைச் செய்யாதொழிதலே தேவதூஷணத்திற்குக் காரணமாகுமென அவன் நம்பினான். மதவிஷயங்களையும், தூய்மை தூய்மையின்மை முதலியவைகளையும் தான் நன்றாய் ஊன்றி ஆராய்ந்துள்ளதாகவும், அவைகளைப்பற்றித் தான் அறியாதது ஒன்றுமில்லையெனவும் ஸாக்ரடீஸிடம் வீரியங்கூறினான். இதைச் செவியேற்ற ஸாக்ரடீஸ், தூய்மைமுதலியன இத்தன்மையவென அவனிடம்

அறிந்துகொண்டு, தம்மேல் குற்றஞ்சாட்டியோருக்குப் பதிலுரைக்க நினைவுள்ளதாகவும், தம்மைச் சீடனாக அங்கீகரித்து அவ்விஷயங்களைப் போதிக்குமாறும் அவரைப் பணிவுடன் கேட்டார். யூதிப்ரான் தனது அகத்தையால் அவ்வாறு போதிப்பதற்கு வாக்களித்ததால் ஸாக்ரடீஸ் "தூயதை என்றாலென்ன? தூய்மையின்மை என்றாலென்ன? எனக்கு அவற்றின் விளக்கவுரையும்' என்றார். 'யான் இப்போது செய்வதுபோலச் செய்வதே தூய்மை. யாரேனும் ஒருவர் கொலைமுதலிய பாவங்களைச்செய்யின், அவர் நமது பிதாவாயினுஞ் சரி, வேறுயாராயினுஞ் சரி, அவரைத் தண்டனைக்குள்ளாக்குவது தூய்மையானது அவரை அவ்விதஞ்செய்யாது விடுவதே தூயதற்றது' எனறுகூறி, இதை இன்னும் வற்புறுத்துதற்பொருட்டு, ஸீயுஸ் என்ற தேவன் தன் தந்தையாகிய 'க்ராநஸைக்' குற்றத்திற்காகத் தண்டித்த புராணகதையும் எடுத்துரைத்தான். ஒருகடவுள் இக்குற்றத்தைச் செய்தார், இவ்வாறு அவர் தண்டனையடைந்தார்' எனக்கூறும் கதைகளெல்லாம் நம்பத்தகுந்தவையல்ல; அவையெல்லாம் வீண் அபவாதங்களே ஒருபோதும் யான் அவைகளை ஏற்கேன்'' என ஸாக்ரடீஸ் மொழிந்து, "ஐயனே! யான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதிலுரைத்தாயில்லை. தூயவற்றிற்கும் தூய்மையற்றவற்றிற்கும் நான் உன்னை உதாரணங் கேட்கவில்லை. தூய்மையென்றால் என்னை? எதனால் ஒரு செய்கையைத் தூய்மையானதென நாம் சொல்லுகிறோம்'' என்றார் யூதிப்ரானுக்கு அவர் கேட்ட விஷயம் முதலில் நன்றாக விளங்கவில்லை. சிறிதுபோது யோசித்து, 'கடவுளருக்கு உகப்பானது தூயது, கடவுளருக்கு உகப்பாகாதது தூயதற்றது' என்றுகூறியதோடமையாது, தான்

கடவுளரைப்பற்றி முன்னோர் மொழிந்தவையெல்லாம் உண்மையில் நடந்தவை எனவும், அவரது சண்டைச் சச்சரவுகளெல்லாம் யதார்த்தமாகவே நிகழ்ந்தவை எனவும் சாதித்தான். இக்கதைகளை ஸாக்ரடீஸ் நம்பாமற்போயினும், அவைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு, யூதிப்ரோனுடன் பின்னும் சம்பாஷித்து, கடவுளர் ஒருவருக்கொருவர் கலாம் விளைத்துக்கொள்வாராயின், அக்கலகம் எது நியாயமானது எது அநியாயமானது என்ற வியவகாரங்களைப்பற்றி எழுந்திருத்தல்வேண்டுமெனவும், அவ்வாறு ஒருதிறத்தார் ஒன்றை நியாயமானதெனவும், மற்றொருதிறத்தார் அதையே அநியாயமானதெனவும் தீர்மானித்தால், ஒரே விஷயம் கடவுளர்சிலர்க்கு நியாயமானதெனவும், வேறுசிலர்க்கு அநியாயமானதெனவும் காணப்படுவதனால், யூதிப்ரோன் தூய்மை என்பதற்குக் கூறிய பொருளின் சிறப்பின்மையைப் புலப்படுத்தினார். இதைக்கண்ட யூதிப்ரோன், தான் முன் கொண்ட பொருளைச் சிறிது மாற்றிக்கொண்டு "தூயதென்பது எல்லாக்கடவுளர்க்கும் உகப்பானது. இப்பொருள் சரியானதே" எனப் பகர்ந்தனன். இதன்மேல் ஸாக்ரடீஸ், "தூயதாயிருப்பதால் தூய்மையானதைக் கடவுளர் விரும்புகிறார்களா? அன்றி, அவர் அதை விரும்புவதனால் அது தூய்மை எனப்படுகின்றதா?" எனக்கேட்டார். யூதிப்ரோனுக்கு இக்கேள்வியொன்றும் விளங்கவில்லை. தாம் வினவியது ஈதென அவனுக்கு விளக்கிக்காட்டி, அவன் வாய்மொழியாகவே "கடவுளர்க்கு உகப்பானது அவர்களால் விரும்பத்தக்கதாகவுள்ளது, ஏனெனில், அவர்கள் அதை விரும்புகிறார்கள். தூயதென்பதோ அவர்களால் விரும்பப்படுகிறது, ஏனெனில், அது விரும்பத்தக்கதாயுள்ளது"

என்பதைநிரூபித்தார். அதாவது தூய்மைக்கு இயற்கையிலேயே மதிப்பு இருப்பதால் அவ்வியற்கைக்குணம்பற்றி அதைக் கடவுளர் விரும்புகிறார்கள். அவர்விரும்பும் மற்றவைகளுக்கெல்லாம் அவர்விரும்பும் ஒருகாரணம்பற்றியே மதிப்பேற்படுகின்றன. இதற்குள்ளாகப் பலவாறு அவனை மடக்கிவிட்டமையால், அவனுடைய மனம் கலங்கி, மதியும் மயங்கிவிட்டது. 'தூய்மை என்பது நியாயத்தின் ஓர் பகுதியாகும்' என்ற ஸாக்ரடீஸ் கூற்றை அவன் முற்றிலும் உணர்ச்சி சக்தியற்றுப்போயினும், அதுவே சரியென அவன் ஆமோதித்தனன். இதன்மேலும் பலவழிகளில் அவனை நோக்கி, "தூய்மை என்பது கடவுளர்க்குரிய சிந்தனையோடு சம்பந்தப்பட்ட நியாயநெறியின் ஓர் பகுதியாகும்; மனிதர்க்குரிய சிந்தனையுடன் சம்பந்தப்பட்டது அந்நெறியின் மிச்சப்பாகமாகும்" என்பதை ஒப்புக்கொள்ளுமாறு செய்தார். இனி, 'சிந்தனையென்றால் என்ன' என்பதைப்பற்றி விவாதம் நடந்தது. 'சிந்தனை என்பது கடவுளர்க்குத் தொண்டுசெய்தல்' என அவன் முடித்தான். இதனால், 'தூய்மையென்பது கடவுளர்க்குச் செய்யும் 'பிரார்த்தனையையும் யஜ்ஞத்தையும் விளக்கும் ஒருசாஸ்திரம்' என அவன் ஒப்பவேண்டியதாயிற்று. அதாவது ஸாக்ரடீஸ் புகன்றபடி, 'தூய்மை என்பது கடவுளர்க்கும் மனிதர்க்குமுள்ள கொடுத்தல்வாங்கலை விளக்கும் கலை' என முடிந்தது. 'கடவுளர் நமக்கு யாவற்றையும் அளிக்கிறார். நாம் கடவுளர்க்கு எவற்றைப் பிரதியாகத் தருகிறோம்?' என்ற கேள்வி பிறகு எழுந்தது. 'மரியாதையையும் வணக்கத்தையும் நாம் அவர்களிடம் காட்டுகிறோம். அவர்களுக்கு எது பிரீதியாக இருக்கிறதோ, அதெல்லாம் செய்கிறோம்' என்று அவன் விடைதந்தது, தூய்மையைக்காட்

டினும் அவர்க்குப் பிரியமானது வேறொன்றுமில்லையென அவன் கூறிமுடித்தான். இதனால், தூய்மை என்பது கடவுளுக்குப் பிரியமானது என்று ஏற்பட்டது. இதுவே தொடக்கத்தில் சரியான பொருளென்று ஸாக்ரடீஸால் கொள்ளப்பட்டது. ஸாக்ரடீஸ் இதை அவனுக்கு எடுத்துக்காட்டி, இன்னும் தூய்மை என்ற இவ்விஷயத்தைப்பற்றி அவனுடன் ஆராய்ந்தறிய விரும்பியுள்ளதாகக் கூறி ஒன்றையும் ஒளிக்காமல் 'நீ கூறியது சரியே, ஆயினும், பொய்கூறித் தன் படைக்கு ஊக்கமளித்தும் தண்டநாயகனும், பொய்கூறித் தன் மகனுக்கு மருந்தூட்டும் அருமைத் தந்தையும், வெறிபிடித்துத் தற்கொலைபுரிய எண்ணும் தன் நண்பனிடமுள்ள கூர்ங்கத்தியை வஞ்சித்து வெளவும் புருஷனும் அநியாயஞ்செய்தவராவரோ?' என்றார் ஸாக்ரடீஸ். இதைக் கேட்ட யூதிடீமஸ், இவையெல்லாம் நியாயமானவைதாமென ஒப்புக்கொண்டு, முன்னாகக் கூறிய பொருளைச் சற்று மாற்றிக்கூறத் துணிந்து, 'நண்பருக்கு நன்மைபயக்கும்பொருட்டு அவ்வாறு செய்வதும் நியாயமாகும்' என்றான். 'அவர்க்குத் தீமைவிளைக்கும் பொருட்டு வஞ்சிப்பது பின்னர் அநியாயமாகுமோ?' என்று ஸாக்ரடீஸ் கேட்க, 'ஸாக்ரடீஸ்! உண்மையாகவே என் விடைகளில் இனிமேல் எனக்கு நம்பிக்கை பிறவாது. முன் காணப்பட்டதற்கு முற்றும் விரோதமாகவே ஒவ்வொன்றும் இப்போது எனக்குக் காணப்படுகின்றது' என்று பணிவுடன் பதிலுரைத்தான். இதன்பிறகு, 'நண்பர்களுக்குத் தற்செயலாய்த் தீங்கு விளைத்தால் அது அநியாயமாகுமோ?' என்பதும், 'குடியரசு என்றால் என்ன?' என்பதும் அவ்விருவரால் சம்பாஷணைமூலம் ஆராயப்பட்டன. ஸாக்ரடீஸ் கேட்ட கேள்விகளால் மடக்குண்ட

யூதிடிமஸுக்கு அகந்தை அறவே அகன்றது, நாண மேலிட்டது. மிகுந்த மனவருத்தத்துடன், "என் தாழ்மையை யானே ஒப்புக்கொள்ளுமாறு ஸாக்ரடீஸ் செய்கிறார். இனி யான் வாய்திறவாதிருத்தலே நலம், ஏனெனில், எனக்கு ஒன்றும் தெரியாதென்பதை இப்போது யான் நன்றாய் அறிகிறேன்" என்றுகூறி வெட்கிச் சென்றான்.

ஈண்டுக் கூறிய இருசம்பாஷணைகளால் ஸாக்ரடீஸ் தர்க்கவழியின் போக்கு நன்றாய் விளங்கலாகும்.

அவன் அறிந்த யாவற்றையும் தனக்குப் போதிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். அவனைத் தவிர வேறொருவரும் அவ்விஷயத்தைப்பற்றிச் செவ்வனே உணர்ந்தவராகார் எனவும் வஞ்சப்புகழ்ச்சி செய்தார். யூதிப்ரானுடைய மனதில் அப்போது எவ்வாறிருந்த தென்பதை யாம் இங்குக் கூறவும் வேண்டுமோ? அவன் அகந்தையெல்லாம் ஒடுங்கிப்போயிற்று. அவனும் மதியற்றுத் திகைத்து, எவ்விதத்திலேனும் இச்சம்பாஷணையினின்று தப்பிப்போக எண்ணி, தனக்கு அவசரமான ஒரு வேலை இருப்பதாகவும், காலதாமதமாகிவிட்டமையால் தான் உடனே செல்லவேண்டுமென்றுங் கூறி மௌனமாய் நழுவிப்போய்விட்டான்.

இனி, ஸாக்ரடீஸ் தர்க்கிக்கும் வழியை விளக்குவதற்கு ஸெனொபன் என்ற ஆசிரியரா லெழுதியிருக்கும் ஓர் உதாரணம் கூறுவோம் — யூதிடிமஸ் (Euthydemus) என்பான் ஓர் ஆதன்ஸ் நகரவாசி. நாட்டிற்காக நன்றாய் உழைக்கவேண்டுமென்ற ஆசை அவனிடம் மிகுந்திருந்தது. அரசியல் விஷயங்களை அவன் நன்றாய் ஆய்ந்திக்

சிறுவனாதலால் அவன் ஒருமுறை ஸாக்ரடீஸுடன் சம்பாஷிக்க நேர்ந்தபோது, நியாயவுணர்ச்சி நகரவாசிக்கு இன்றியமையாததோர் உத்தமகுணமாதலின், தான் அதை நிரம்பப் பெற்றுள்ளதாகவும், தினந்தோறும் எத்தனையோ உதாரணங்களைக் கண்கூடாகக் கண்டறிந்து வருகின்றமையின், தான் நியாய அநியாயங்களைச் சிக்கற உணரவல்லவனெனவும் விருதுகூறினன். தான் கூறியவற்றை உதாரணமுகத்தான் நன்குவிளக்க எண்ணி, 'பொய்த்தல், வஞ்சித்தல், களவாடல், பிறர்க்கின்னாசெய்தல், பிறரைச் சிறைப்படுத்தல் முதலியவையெல்லாம் அநியாயமானவை' என்றான். அவ்வாறாயின், நமது எதிரிகளை வஞ்சிப்பதும், சிறைப்படுத்துவதும், அவர்க்கு இன்னாச்செய்வதும் அநியாயமாகுமோ?' என ஸாக்ரடீஸ் வினவியபோது, 'நண்பரிடம் அவ்விதஞ் செய்வதே அநியாயமாகும்; பகைவரிடம் செயின் அது நியாயமானதே' என்றான்.]

## அநுபந்தம் ௨.

ஆதென்ஸ்வாசிகளின் அறிவாற்றலைப்பற்றி மெகாலே (Macaulay) கூறுவது —

“ஆதென்ஸ் நகரத்துப் பாமரஜனங்கள் பிறநாட்டுப் பாமரமக்களினும் பன்மடங்கு அறிவிற் சிறந்தோரென நம்புவதற்கு இடமுண்டு. ஆதென்ஸ்வாசி ஒவ்வொருவனும் நீதிசாஸ்திரியும், யுத்தவீரனும், ஸபாபதியும் ஆவான் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஆதென்ஸி

நகரத்து அடிப்பட்ட செல்வம் தொழிற்கும் திருநகரும், அவ்வாதன்ஸவாசியின் கையைப் பார்த்துப் பிழைக்கும் ஆதன்ஸ் நகரத்துப் பெரிய அதிகாரியும் அவனது கையைப் பார்த்தே பிழைப்பர். உழவு வாணிபத் தொழில்களிலுள்ள தாழ்ந்த வேலைகளெல்லாம் அடிமைகளைக் கொண்டே நடத்தப்பட்டன. மிகவும் மானமான நகரவாசிக்கும் பிழைப்பதற்கு வழியையும், கவலையற்று ஓய்ந்திருப்பதற்கு வசதியையும், இன்பமாய்ப் பொழுதுபோக்கச் சாதனங்களையும் குடியரசு தந்தது. அவர்களிடமிருந்த நூல்கள் மிகச் சிலவே ஆயினும், அவையாவும் மிகச் சிறந்தவை. யாவரும் அவற்றை அழுத்தமாக ஊன்றிப் படித்தனர். புஸ்தகசாலையிலுள்ள நூல்களையெல்லாம் புரட்டிவிட்டும் மனம் தெளியாது, சிறப்பிற்கு நிதரிசனமாகத் தக்க நூல்களைப் பன்முறை படித்து, அவற்றுட் கூறப்பட்ட விஷயங்களைக் கருத்துடன் சிந்திப்பதே மனத்தெளிவுக்கு ஏற்ற உபாயம்.

ஆதன்ஸவாசியின் கல்வியபிவிருத்திக்குப் புஸ்தகங்களின் உதவி சிறிதுமில்லை. ஆதன்ஸ் மேம்பட்டு விளங்கிய நாளில் நாம் இருந்ததாகக் கருதுவோம். அது செழித்தோங்கிய புகழ்பரம்பிய நாளில் கோட்டைவாயிலில் நுழைவதாகவும் எண்ணிக்கொள்வோம். தோரணவாயிலில் ஜனங்கள் அதோ கூடியுள்ளார்கள். அனைவரும் ஆவலுடன் பிடியஸ் (Phidias) என்னும் சிற்பாசாரி அமைக்கும் பிம்பங்களை அவர்கள் உற்றுநோக்குகின்றனர். மற்றொரு வீதியை நோக்கிச் செல்வோம். அதோ அங்கு ஒருவன் காவியங்களிலிருந்து செய்யுட்களை உருக்கமாக ஒப்பிக்கின்றான். அவனைச் சுற்றிலும் புருஷரும், பெண்டிரும்,

சிறார்களும் மெய்யுற்றுக்கொண்டிருக்கின்றனர். அவர்க ளது கண்களினின்று நீர் தாரைதாரையாய்ப் பெருகுகின்றது அவர்களனைவரும் இமைகொட்டாமல், அசைவற்று, உயிர்த்தலுமின்றி நிற்கின்றனர் அக்கிலஸ் (Achilles) என்ற வீரரின் காலில் பிரையாம் (Priam) என்பான் வீழ்ந்து பணிந்து, தன் மக்கள் பலரையும் மாய்த்த அவர் கொடிய பயங்கரமான கரங்களை முத்தமிட்ட கதையை அவன் உரைக்கின்றான்

இனிப் பொதுமன்றத்தில் நுழைவோம். அதோ அநேகவாலிபர்கள் தம்கண்கள் ஒளிவீச, ஆவலுடன் எதிர் நோக்கியவண்ணமாய் ஒருவர்பின்னொருவர் சாய்ந்து நிற்கின்றனர் ஸாக்ரடீஸுக்கும் அந்நாட்டில் மிசவரவாதியென்ப பேர்படைத்த ஒருவனுக்கும் தர்க்கம் நடக்கிறது அவன் கருதியவை முற்றிலும் பலமற்றவையென அவனே ஒப்புக்கொள்ளுமாறு ஸாக்ரடீஸ் செய்துவிட்டார். சரி, இதோ எல்லாம் நடைபெற்றுவிட்டன. "நகரத்துச் சிரியோர் வருகிறார்கள், வழிவிலகுங்கள்" எனக் கட்டியக்காரர்கள் விளிக்கின்றனர் ஜனசபை நடக்கப்போகிறது ஜனங்கள் நாற்புறங்களிலிருந்தும் திரண்டுவருகின்றனர் "யார் பேச விருப்பம்?" என அறிக்கை பிறந்துள்ளது, அதோ ஆரவாரம் கிளம்புகிறது. யாவரும் கரதாளஞ்செய்கின்றனர் பெரிக்ளிஸ் (Pericles) என்றமான் பேசுவதற்காக மேடைமேல் ஏறுகின்றார். சரி, இதைவிட்டுச் செல்வோம். அதோ ஸோபாக்ளீஸ் என்பாரது நாடகம் அரங்கில் நடிக்கப்படுகிறது. அதோ மற்றோரிடத்தில் பாட்டுக்கச்சேரி நடக்கிறது இவ்விதமாக, நேர்த்தியாயும் ஒழுங்காயும் கலைபயிற்றும் சிவ

கலாசாலை தற்காலத்திலெங்குமில்லையெனலாம்" (ஆதன்ஸ் நகரத்து நாவல்லோர்)

"ஆதன்ஸ்வாசியிடம் புஸ்தகங்கள் சிலவேயிருக்கலாம். அவன் படிக்கச்செல்லும் பெரிய புஸ்தகசாலையிலுள்ள நூல்களின் தொகை போல்ட்கோர்ட் (Bolt court)டில் வசிக்கும் ஜான்ஸன் (Johuson) என்பாரது அலமாரியிலுள்ள புஸ்தகங்களின் தொகையினும் சிறியதாயிருக்கலாம். ஆயினும், ஆதன்ஸ்வாசி தினந்தோறும் நாட்காலையில் ஸாக்ரடீஸுடன் சம்பாஷிப்பான், மாதம் நாலைந்து முறை பெரிக்ளிஸ் பேசுவதைக் கேட்பான். ஸோபாக்ளிஸ், அரிஸ்டோபானஸ் இயற்றிய நாடகங்களை நடிக்கக் காண்பான். பிடியஸ் செதுக்கிய சிற்பங்களையும், ஸூக்ஸிஸ் (Zeuxis) வரைந்த சித்திரங்களையும் கண்டுகளித்து உலாவித் திரிவான். அக்கிலஸ் பாடல்கள் அவனுக்குக் கண்டபாடமாகத் தெரியும். தெருவின் ஒருமூலையில் அக்கிலஸ் கேடகத்தைப்பற்றியும், ஆர்ஜஸ் (Arjus) சாவைப் பற்றியும் ஒப்பிப்பதை அவன் செவியேற்பான். அவன் நீதிசாஸ்திரி, பிறசாபசம்பந்தங்கள், அரசிறை, போர் முதலிய விஷயங்களில் அவன் கைவந்தவன். அவன் போர்வீரன், மிகவும் இதமாய்ப்பயின்று அடங்கியவன். அவன் ந்யாயாதிபதி, தினந்தோறும் இருதிறத்தாரது கட்சிவாதங்களைச் சீர்தூக்கித் தெளிவுபெற்றவன். வித்தையெனப்படுவன இவைகளே. இவை மனமாசகன்று தெளியோரைப் படையாவிடினும், நகரவாசிகளிடம் புத்திதீவிரமும், இரசஞானத்திறச் சுவையும், சொல்வன்மையும், வாக்குச்சாதுர்யமும், நாகரிகமும் விளைத்தன (ஜான்ஸனைப் பற்றிய வியாசம்

# பிழையும், திருத்தமும்.

| | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | 5 | மனிதரால | பிறரால |
| | 26 | Syiuposium | Symposium |
| | 21 | Aeropolis | Acropolis |
| | 7 | ஏகராகிபகயம | ஏகசகாதிபதயம |
| | 16 | தனமை | தமமை |
| | 18 | தனமை | தமமை |
| 1 | 13 | தமதுமனதகைக திருபபி | அவாதுமனதகைத திருபபி அவனை |
| | 5 | ஒணமை | உணமை |
| | 16 | வெபருகதொ | வெபருககிகொ |
| | 8 | பிறாகதுகாம | பிறாகது யான |
| 1 | 10 | மகஙகது | மகனுககு |

133-ஆம பககம 8-ஆம வரியில 'ஒளிககாமல' என பன அடுதத 134-ஆம பககம் 9-ஆம வரிமுதல (1-வது அடிததம) முடிவுவரையிலுளளதைச சோததுபபடிகக (பிழைகளை முனனாதிருததிககொணடு பிறகு படிகக)